Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 23 சனிக்கிழமை (09-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:319

# சிறுபான்மையினர் உரிமைகளைப் பெறுவதற்கு தமிழ்-முஸ்லிம் கட்சிகள் இணைந்து செயற்படும்

## நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் இணக்கம்

கொழும்பு,ஒக்.9

அரசிடம் இருந்து தமிழ் - முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெறவும், பெற்ற உரிமைகளைப் பாதுகாக்கவும் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் இணைந்து செயற்படுவது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் இணக்கம் கண்டுள்ளன.

நேற்றுக்காலை நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற தமிழ் - முஸ்லிம் அரசியல் பிரமுகர்களின் சந்திப்பின்போதே இந்த இணக்கப்பாடு காணப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான எம்.பிக்களும், ஸ்ரீல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான கட்சி எம்பிக்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையில் விரிசல்கள் தோன்றும் நிலையை உருவாக்கச் சிலர் முயன்றுவரும் வேளையில் இரு தரப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் கூடிக் கலந்துரையாடியமை அரசியல் முக்கியத்துவம்வாய்ந்த முக்கிய திருப்பம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இரு சமூகங்களுக்கும் இடையில் நல்லுறவையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்கு ஓர் அத்திபாரமாகவே இந்தச் சந்திப்பு அமைந்திருந்தது என கூட்டமைப்பின் உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இக் கலந்துரையாடல் சுமார் இரண்டரை மணிநேரம் நீடித்தது.

தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து செயற்படுவதன் மூலமே சிறுபான்மையினர் தமது உரிமைகளைப் பெறமுடியும். கடந்த காலங்களில் இரு சமூகங்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட தவறான புரிந்துணர்வுகளுக்கு எதிர்காலத்தில் இடம்கொடுக்கக்கூடாது என இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

"தமிழ் மக்களுக்கு கிடைக்கும் அனைத்து உரிமைகளும், சலுகைகளும் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதில் தமிழர் கூட்டணி உறுதியாகவே இருக்கின்றது.


"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருக்கும், ஸ்ரீல.மு.காங்கிரஸ"க்கும் இடையில் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாப்

(16ஆம் பக்கம் பார்க்க)

### தமிழரின் அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக

# திருமலையில் நேற்று பூரண ஹர்த்தால்!

## நகரம் ஸ்தம்பிதம்; அலஸ்தோட்டத்தில் பதற்றம்



வெறிச்சோடிக் கிடந்த திருமலை நகரின் ஒரு பகுதி

திருகோணமலை,ஒக்ரோபர்9

**தமிழர்களின் அதிருப்தியை வெளிப்படுத்தும் விதத்தில் திருகோணமலைப் பிரதேசத்தில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.. அதனால் திருகோணமலை நகரமும் சுற்றாடல் பிரதேசங்களும் முற்றாக ஸ்தம்பித்தன.**

**அலஸ்தோட்டத்தில் தமிழர்கள் வீதி மறியலில் ஈடுபட்டதால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.**

திருகோணமலை நகரத்தில் முன்னைய காலத்தில் இடம்பெற்ற ஹர்த்தால்களுக்கு மாறாக நேற்றைய ஹர்த்தாலின்போது பெரும் பதற்றநிலை காணப்பட்டது. முழு அளவில் அது அனுஷ்டிக்கப்பட்டது.

நகரில் வழமையான பணிகள் யாவும் முடங்கின. குச்சவெளி, நிலாவெளி, மூதூர், கிண்ணியா, ஆலங்கேணி போன்ற பிரதேசங்களும் செயலிழந்தன.

தமிழர்களுடன் சேர்ந்து முஸ்லிம்களும் இந்த ஹர்த்தாலுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

'புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி

(16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரில் நாளை நடக்கவிருந்த மு.காவின் மாநாடு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.9

யாழ். நகரில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாவட்ட மாநாடு பிற்போடப்பட்டது.

மாநாடு நடைபெறவிருந்த அதேதினத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் நினைவுதின' விழாவும் நடைபெறவுள்ளது என்பதாலேயே ஸ்ரீலங்கா மு.காங்கிரஸின் மாநாடு பிற்போடப்பட்டதாகக் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பாயிஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரான சுபியான் மௌலவி, யாழ். மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாட

(16ஆம் பக்கம் பார்க்க)

# பிரசவித்த கையோடு புதைக்கப்பட்ட பெண் சிசுவின் சடலம் மீட்பு!

## அல்வாய் மாயக்கைக் குடியிருப்பில் சம்பவம்

கரவெட்டி,ஒக்.9

பிரசவித்த கையோடு பெண் சிசு ஒன்றைக் கொன்று புதைத்தார் எனச் சந்தேகிக்கப்படும் பெண் ஒருவரையும் அவரது தாயாரையும் நெல்லியடி பொலீஸார் கைது செய்திருக்கின்றனர்.

வடமராட்சி, அல்வாய் கிழக்கு, மாயக்கைக் குடியிருப்புப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

சிசுவைக்கொன்று புதைக்கப்பட்டது என்ற தகவல் பரவியதை அடுத்து குறிப்பிட்ட பெண் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன. குறிப்பிட்ட பெண், குழந்தையைப் பிரசவித்தமை தெரியவந்ததும் அதுபற்றி பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். அரியநாயகத்தின் பணிப்பின் பேரில் பொலீஸ் குழு ஒன்று பிரஸ்தாப பெண்ணை விசாரணை

(16ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் சமாதானச் செயலக பணிப்பாளர் திருமலையில்!

கொழும்பு,ஒக்.9

இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மற்றும் படை உயரதிகாரிகள் சிலர் நேற்று திருகோணமலைக்கு அவசர விஜயம் மேற்கொண்டனர்.

புலிகளின் காவலிலுள்ள இரு ஊர்காவலர்களை விடுவிக்கக்கோரி சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவரும் அந்த ஊர்காவலரின் உறவினர்கள் மற்றும் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருடன் அவர்கள் நேற்று பேச்சு நடத்தினர்.

பின்னர் திருமலை மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியைச் சந்தித்துப் பாதுகாப்பு நிலைவரம் பற்றி அவர்கள் கலந்துரையாடினர்.

நேற்றுமாலை அவர்கள் மதத் தலைவர்களைச் சந்திக்கவும் ஏற்பாடாகியிருந்தது.

(ஐ-க-13-ரி)

# தூக்கில் தொங்கிய இளைஞன்!

யாழ்ப்பாணம்,ஒக்.9

தூக்கில் தொங்கியதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.நகர், மணிக்கூண்டு வீதியைச் சேர்ந்த சேனாதிராஜா முகுந்தன் (வயது 25) என்பவரது சடலமே ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணையின் பின்னர் சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.பதில் நீதிவான் திருமதி லிங்கா துரைராஜா சடலத்தைப் பார்வையிட்டார்; தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளித்தார்

(ஐ-13)

# தவழ்ந்து சென்ற குழந்தை கிணற்றில் வீழ்ந்து மரணம்!

கிணற்றினுள் தவறிவிழுந்து உயிரிழந்ததாகத் தெரிவித்து ஒன்றரை வயதுக் குழந்தையின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேலணை, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் கபிலேஷ் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையின் சடலமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்கிணற்றடியில் தனது தாயார் நிற்பதாக நினைத்து தாயைத் தேடிக் கிணற்றடிக்குத் தவழ்ந்து சென்ற குழந்தை நிலமட்டத்துடன் காணப்பட்ட அந்தக் கிணற்றினுள் தவறி வீழ்ந்தது என்று கூறப்படுகின்றது.

குழந்தையைக் காணாது தேடிய தாயார் கிணற்றை எட்டிப்பார்த்த போது உள்ளே பால் போத்தல் மிதப்பதைக்கண்டு கூக்குரலிட்டார். அயலவர்கள் விரைந்துவந்து குழந்தையின் சடலத்தை கிணற்றிலிருந்து மீட்டனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். குழந்தையின் சடலம் மரண விசாரணைக்காக நேற்றுமாலை யாழ்.வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-13-139)

# ரணில் அடுத்த வாரத்தில் இந்தியாவுக்குப் பயணம்

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவதும், இடைக்கால நிர்வாக அதிகார சபை அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் நிலவும் இழுபறி தொடர்பாக விளக்குவதுமே ரணிலின் இந்த விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை அடுத்த மாதம்

## தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.9

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையினை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்தவுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலயங்களை உள்ளடக்கி நடத்தப்படவுள்ள இந்த முன்னோடிப் பரீட்சை அடுத்தமாதம் 13ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறும்.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் டிசெம்பர் முற்பகுதியில் வெளியிடப்படும்.

இந்தப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும் உயர்தர வகுப்புக்களில் மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள்களை அந்தந்த வலயத்தைச் சேர்ந்த பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாட ஆசிரிய ஆலோசகர்கள் இணைந்து தயாரித்து வருகின்றனர்.

இது தொடர்பான விளக்கங்கள் அடங்கிய சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் தெரிவித்துள்ளார்.

(ஐ-13)


## வெலிக்கந்தையில் நேற்று ஹர்த்தால்

கொழும்பு,ஒக்.9

பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்தை முஸ்லிம் பகுதியில் நேற்று ஹர்த்தால் இடம்பெற்றது.

அண்மையில் அப்பகுதியில் இரு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பொலன்னறுவையின் முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால் இடம்பெற்றது. அங்கும் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டிருந்ததுடன் பஸ் போக்குவரத்துக்கும் பெரும் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ஐ-க)



கடந்த திங்கட்கிழமை மட்டுவில் ஆயத்தடிப் பகுதியில் பொருள்களுடன் சென்ற பார ஊர்தி தடம்புரண்டது. அது வீதியில் கிடப்பதைப் படத்தில் காணலாம்.
*(படம்: தென்மராட்சி செய்தியாளர்)*

### தேசிய சேமிப்பு வங்கி ஆதரவுடன்

# உலக அஞ்சல் தினத்தை ஒட்டி தபால் திணைக்களம் பரிசுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.9

உலக அஞ்சல் தினத்தையொட்டி தேசிய சேமிப்பு வங்கியுடன் அஞ்சல் திணைக்களம் இணைந்து பரிசுத்திட்டம் ஒன்றினை அறிமுகம் செய்கிறது.

தபாலகத்தில் வைப்பினை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கான இந்தப் பரிசுத் திட்டத்தில் தேசிய ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் போட்டிகள் நடத்தப்பட்டு தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களுக்கும் மாவட்ட ரீதியில் முதல் 28 இடங்களுக்கும் பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெறுபவர் அஞ்சல் அலுவலகத்தில் வைப்புச் செய்துள்ளவராயின் ஒரு லட்சம் ரூபாவும் உப அஞ்சல் அலுவலகத்தில் வைப்புச் செய்துள்ளவராயின் 50ஆயிரம் ரூபாவும் - இரண்டாம் இடத்தினைப் பெறுபவர் அஞ்சல் அலுவலகத்தில் வைப்பிட்டிருந்தால் 50ஆயிரம் ரூபாவும், உப அஞ்சல் அலுவலகத்தில் வைப்பிட்டிருந்தால் 25ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறுபவர் அஞ்சல் அலுவலகத்தில் வைப்பிட்டிருந்தால் 25ஆயிரம் ரூபாவும் உப அஞ்சல் அலுவலகமாயின் 15 ஆயிரம் ரூபாவும் பணப்பரிசிலாக வழங்கப்படவுள்ளது.

போட்டிகள் யாவும் இன்றுமுதல் எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இதேவேளை -

பொதுமக்கள் மத்தியில் தேசிய ரீதியான போட்டி ஒன்றும் நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டியில் பங்குபற்றுவோர் தலைமை தபாலகத்திலோ அல்லது உபதபாலகத்திலோ 100 ரூபா பெறுமதியான வைப்பு வைத்திருக்கவேண்டும்.

இந்தப் போட்டியிலும் முதல் மூன்று இடத்தைப் பெறுபவர்களுக்கு பெறுமதியான பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

இவர்களுக்கான போட்டிகளும் இன்றுமுதல் ஆரம்பமாகி தொடர்ந்து 26ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

போட்டி முடிவுகள் யாவும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படுமென்று அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-13)

# தொடர்ந்தும் விலைவாசி எகிறிப் பாயும் அறிகுறி!

கொழும்பு,ஒக்.9

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மேலும் உயரும் சாத்தியங்கள் தென்படுவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமையல் எரிவாயு விநியோகஸ்தர்களும், பால்மா உற்பத்தியாளர்களும் அவற்றின் விலையை அதிகரிக்க அரசிடம் அனுமதி கோரியுள்ளனர்.

ஒரு சிலிண்டர் காஸின் விலையை 92 ரூபாவால் அதிகரிக்க லாவ் நிறுவனம் வேண்டுகோள் விடுத்தபோதிலும் 40 ரூபாவால் அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.,

ஷெல் காஸ் நிறுவனத்தின் 92ரூபா விலை அதிகரிப்புக் கோரிக்கை தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நெஸ்பிறே, லக்ஸ்பிறே பால்மா உற்பத்தியாளர்களும் தமது உற்பத்தித்துறைக்கான விலையை அதிகரிக்க அனுமதி கோரியுள்ளனர் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின தலைவர் எம்.ஜே.எம்.முஸ்ஸமில் தெரிவித்தார்.

இக்கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, டீஸலின் விலையை ஆறு ரூபாவினாலும் மண்ணெண்ணெயின் விலையை 16 ரூபாவினால் அதிகரிப்பதற்கு அரசின் அனுமதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

கடந்த வாரம் ஐம்பது டொலரைத் தொட்ட ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை நேற்று முன்தினம் 53 டொலரைத் தாண்டியது.

(ஐ-க)

# ஜெயராஜ் அரிசி வியாபாரம்; யாப்பா தேங்காய் விற்பனை!

## ஐ.தே.கவின் திஸ்ஸ அத்தநாயக்க கிண்டல்

கொழும்பு,ஒக்.9

பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த முடியாத அமைச்சர்கள் இப்பொழுது நடைபாதை வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். வர்த்தக, வாணிப, நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே புறக்கோட்டையில் அரிசி வியாபாரம் செய்கிறார். பெருந்தோட்டத்துறைகள், அபிவிருத்தி அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தேங்காய் விற்க ஆரம்பித்துவிட்டார்.

இது மக்களை ஏமாற்றும் ஒரு பம்மாத்து நடவடிக்கை. அரிசியும், தேங்காயும் வாங்க வேண்டுமானால் கொழும்புக்கு வாருங்கள் என்று அமைச்சர்கள் கூறுகின்றனர்.

- இப்படி சகட்டு மேனிக்குக் கிண்டலடிக்கிறார் ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய திஸ்ஸ அத்தநாயக்க இந்த அரசின் உறுதியற்ற கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும், ஜே.வி.பி. அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்காவும் முஷ்டியை முறுக்கிக்கொள்கின்றனர்.

அனுரகுமார திஸாநாயக்க ஒருமணி அரிசியையும் இறக்குமதி செய்ய விடமாட்டேன் என்று குதித்தார்.

ஆனால், ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே என்ன செய்கின்றார்? "நீ யார் என்னைக் கட்டுப்படுத்த? இதோ பார் அரிசியைக் கொண்டுவந்துவிட்டேன்!" எனத் தொலைக்காட்சியில் அரிசியைக் காட்டுகின்றார். இது ஜே.வி.பி. அமைச்சர் அனுரகுமார திஸநாயக்காவுக்கு சவால் விடுவது போலவே அமைந்துள்ளது.

இதேவேளை அமைச்சரவைக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

பிறிமா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் ஏகபோக உரிமை ரத்துச்செய்யப்படவேண்டும். தனியார், மா இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால், ஜனாதிபதியோ இரகசியமான முறையில் பிறிமா நிறுவனத்துடனான ஒப்பந்தத்தைப் புதுப்பித்துவிட்டார். இதனால் மாவின் விலை மேலும் பத்து ரூபாவால் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

- என்றும் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. குறிப்பிட்டார். (ஐ-க)



யாழ்.பொது நூலகத்திற்கு பெறுமதிவாய்ந்த ஒரு தொகுதி நூல்களை ஓய்வுபெற்ற ஆசிரியர் ச.ஆ.கோபாலமூர்த்தி நூலக அதிகாரியிடம் அண்மையில் கையளிக்கும்போது எடுக்கப்பட்ட படம்.

# உயர்தரம் சித்தியடைந்தோருக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்

கொழும்பு,ஒக்.9

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் புகுவதற்கு முன்னர் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு 8 நாடுகள் முன்வந்துள்ளன. அடுத்த ஆண்டுக்குரிய இந்தப் புலமைப் பரிசில்கள் தொடர்பான விண்ணப்பங்களைக் கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

சீனா, இந்தியா, ரஷ்யா, பங்களாதேஷ், பாகிஸ்தான், கியூபா, ஈராக், துருக்கி ஆகிய நாடுகள் இந்தப் புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளன.

சீனா - பௌதிக விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், விவசாயம், பொருளாதாரம், கலைத்துறை ஆகியவற்றுக்கான புலமைப்பரிசில்களையும் -

இந்தியா - மருத்துவம் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்குரிய புலமைப்பரிசில்களையும் -

பங்களாதேஷ் - மருத்துவத்துக்குரிய புலமைப்பரிசிலையும் -

பாகிஸ்தான் - மருத்துவம், பல்வைத்தியம், மருந்தியல் ஆகிய பாடங்களுக்குரிய புலமைப் பரிசில்களையும் -

வழங்கவிருக்கின்றன.

இந்தப் புலமைப்பரிசில் பற்றிய விவரங்கள் அரச வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் இந்தப் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெற்றவர்களாவர்.

(ஐ-ரி)

# பவ்ரலின் தேர்தல் கண்காணிப்பு சரியாக நடந்ததா என ஆராய்வு!

## சுவீடன் குழு யாழ்ப்பாணத்தில் விசாரணை

யாழ்ப்பாணம் சென்ற சுவீடன் நாட்டு அதிகாரிகள் குழு ஒன்று, கடந்த பொதுத் தேர்தலின்போது 'பவ்ரல்' அமைப்பு அங்கு தேர்தல் கண்காணிப்புப் பணியை முறையாகச் செய்ததா என்பதைக் கண்டறிவதில் முனைப்பாக ஈடுபட்டது என அறியவருகிறது.

கொழும்பில் உள்ள சுவீடிஷ் தூதரக அதிகாரி லெனாட் பெக் தலைமையிலான மூவர் கொண்ட அதிகாரிகள் குழுவே யாழ்ப்பாணத்துக்கு நேற்று சென்றது.


கடந்த பொதுத் தேர்தலில் 'பவ்ரல்' அமைப்பு கண்காணிப்புப பணிகளை சீராக மேற்கொண்டதா என்பதை அறியும் நோக்குடன் இக்குழு அங்கு விஜயம் மேற்கொண்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்துக்கு நேற்று முற்பகல் சென்ற இக்குழு அங்கு கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியது.

கடந்த தேர்தலில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட 'பவ்ரல்' அமைப்பின் பணிகள் தொடர்பான விடயங்களை இணையப் பிரதிநிதிகளிடம் குழுவினர் கேட்டறிந்தனர்.

'பவ்ரல்' அமைப்பின் பணிகள் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை என்றும் சம்பந்தப்பட்டோருக்குத் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் சுவீடிஷ் குழுவிடம் தெரிவித்தனர் என்றும் அறியவந்தது.

(ஐ-3)



# எகிப்தில் மூன்று குண்டுவெடிப்புகள்: 30 பேர் மரணம்; 160 பேர் படுகாயம்!

எகிப்தில் இஸ்ரேல் நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மக்கள் நடமாட்டம்மிக்க மூன்று இடங்களில் இடம்பெற்ற மூன்று குண்டு வெடிப்புகளில் குறைந்தது 30 பேர் கொல்லப் பட்டனர்.

தபாநகரில் அமைந்துள்ள - அதிக இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்ற ஹில்டன் ஹோட்டலின் வெளிப்பகுதியில் முதலாவது குண்டு வெடித்தது.

இக்குண்டுவெடிப்பு ஒரு தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலாக இருக்கும் என இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாவது குண்டு வெடித்து சில நிமிடங்களின் பின்னர், அடுதத குண்டுகள் ரஸ் அல் - ஷிதான் மற்றும் நுவிபா ஆகிய நகரங்களில் வெடித்தன.

இதில் நான்கு பேர் கொல்லப்பட்டனர் என எகிப்திய வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். பலர் காயமுற்றனர்.

தபா நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 160 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர் என எகிப்திய அரசு தெரிவித்தது.

தபா நகர் சென்றிருக்கும் இஸ்ரேலியப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் சீவ் பொயிம் தெரிவிக்கையில் - இத்தாக்குதல்களை மேற்கொண்டது யார் என தற்போதைக்குத் தெரிவிக்க முடியவில்லை. கண்டுபிடிக்கத் தாமதமாகும் - என்றார்.

ஆனால், சீவ் பொயின் தனிப்பட்ட கருத்தின் அடிப்படையில் இத்தாக்குதல் அல்-கெய்டா போன்ற சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் மேற்கொண்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இக்குண்டுத் தாக்குதல்களினால் தபா நகரில் அமைந்துள்ள ஹில்டன் ஹோட்டலின் 10 மாடிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதல் ஒரு பயங்கரவாத நடவடிக்கை என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று எகிப்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

எகிப்திற்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான ஓர் எல்லை இணைப்பாக இந்த தபா நகர் விளங்குகிறது. ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் செங்கடல் பகுதியில் உள்ள சுற்றுலா இடங்களுக்குச் செல்வதற்கு இந்நகரே பெரிதும் கைகொடுத்து வருகிறது.

இரு நாட்டவர்களும் பரஸ்பரம் நாடுகளுக்குள் செல்லும் ஒரு பெரிய பாதையாகவும் தபா விளங்குகின்றது.

எகிப்தின் கிழக்கு நகரான சினாய்க் கரையோரப் பகுதி பயங்கரவாதிகளின் அடுத்த இலக்காக இருக்கலாம் என எகிப்திய இராணுவத்தினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இத்தாக்குதலையடுத்து எகிப்தில் இருந்து இஸ்ரேலுக்குத் திரும்ப விரும்பும் 12ஆயிரம் தொடக்கம் 15ஆயிரம் இஸ்ரேலியர்களுக்கு பஸ் வசதிகளை உள்ளூர் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

எகிப்திற்கு இஸ்ரேலியர்கள் செல்லவேண்டாம் அங்கு பயங்கரவாதிகளின் நடமாட்டம் இருக்கின்றது எனக் கடந்தமாதம் இஸ்ரேல் அரசு தமது மக்களுக்கு அறிவுறுத்தியிருந்தது.

இத்தாக்குதல்களில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

டசின் கணக்கான மக்களின் சடலங்கள் அங்கு கிடந்தன. மிக நெருக்கமாக அவர்களின உடல்கள் கிடந்தன - இவ்வாறு இஸ்ரேலிய வானொலி ஒன்று தெரிவித்தது.

மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன. இத்தாக்குதலைப் பல உலகநாடுகளின் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

குண்டு வெடிப்பு நடைபெற்ற இடங்களில் எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம். (க-3)

## ஆஸ்திரிய எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

ஆஸ்திரியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் எல்பிரீட் ஜெலினிக் இவ்வாண்டுக்கான இலக்கியத்துறையின் நோபல் பரிசைப பெறுகிறார்.

நோபல் பரிசு பெறும் பத்தாவது பெண் இவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டுக்கான நோபல் பரிசு பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுவருகின்றன.

அமைதிக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் ஆகியோரின் பெயர்களும் பிரேரிக்கப்பட்டுள்ளன. (க-3)

## பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

முல்தான்,ஒக்.9

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் சுனி முஸ்லிம்களின் பேரணி மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலைக் கண்டித்து நூற்றுக் கணக்கானவர்கள் முல்தான் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதிகள்ளத் தடைசெய்தும், டயர்களை எரித்தும் அவர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

முல்தான் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தகவல் தருபவர்களுக்கு ஒரு கோடி ரூபா வழங்கப்படும் எனப் பஞ்சாப மாநில முதல்வர் தெரிவித்துள்ளார். (க-3)

## இந்தோனேஷியத் தூதரகத்தில் குண்டுவெடித்து 10 பேர் காயம்!

பரிஸ்,ஒக்.9

பிரான்ஸ் தலைநகர் பரிஸின் 16 ஆவது மாவட்டத்தின் வெளிப்பகுதியில் அமைந்துள்ள இந்தோனேஷியத் தூதரகத்தில் நேற்று குண்டொன்று வெடித்தது.

இதில் 10 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் தூதரக அதிகாரிகள் நால்வரும் அடங்குவர்.

தூதரகத்தின் கீழ் மாடியிலேயே இக் குண்டு வெடித்தது எனப் பிரான்ஸ் வானொலி ஒன்று தெரிவித்தது. தூதரகத்தின் வெளிப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான ஒரு பை இருந்ததாகவும், அதிலிருந்தே இக்குண்டு வெடித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. குண்டுவெடிப்பினால் தூதரகக் கட்டத்தின ஜன்னல் கண்ணாடிகள் வெடித்து தூதரகத்தின் வெளிப்பகுதியில் சிதறிக் கிடந்தன.

உலக அரங்கில்

# அமெரிக்காவின் வான்வழித் தாக்குதலில் ஈராக்கில் 11பேர் பலி; 17 பேர் காயம்!

பலூஜா,ஒக்.9

ஈராக்கின் தென்நகரான பலூஜாவில் அமெரிக்கப் படையினர் நேற்று நடத்திய வான் வழித் தாக்குதலில் 11பேர் கொல்லப்பட்டனர்; 17பேர் காயமடைந்தனர்.

இத்தகவலை நகர வாசிகளும், வைத்திய அதிகாரிகளும் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களிலும், காயமடைந்தவர்களிலும் அநேகர் பெண்களும் சிறார்களுமே எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளர்ச்சிக்காரர்களின் பிடியில் இருக்கும் பலூஜா நகரில் திருமண வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்த வீடொன்றின் மீதே அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியுள்ளன. இதனால், கல்யாண மாப்பிள்ளை அவ்விடத்திலேயே பலியானார். மணப்பெண் படுகாயமுற்றார்.

இறந்தவர்களில் 9 பேர் பெண்கள் என்றும், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் 5 வயதுக்கும், 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் வைத்தியசாலை அதிகாரி ரபாஹ் அல்-ஹயாத் தெரிவித்தார்.

மேலும், அவர் குறிப்பிடுகையில் -

இரத்தக்கறை தோய்ந்த நிலையில் பல பெண்களும் சிறார்களும் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். இதில் 11 பேர் உயிரிழந்தும், 17 பேர் படுகாயமுற்றுமிருந்தனர்.

இத்தகவலை ரபாஹின் சகபாடி காலித் நாஸர் உறுதிப்படுத்தினார்.

ஆனாலும் இத்தாக்குதல் திருமண வீட்டில் நடத்தப்படவில்லை. ஜோர்தானைச் சேர்ந்த தீவிரவாதி அபுமுஸாப் அல்-ஸர்காவியின் ஆதரவாளர்கள் பலர் இரகசிய கூட்டம் ஒன்று நடத்திய வீட்டிலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என அமெரிக்க இராணுவத் தரப்புக் கூறியது.

அந்த வீடு தீவிரவாதிகளின் மறைவிடமாகப் பாவிக்கப்பட்டதாகவும் இந்த வீட்டிலேயே முக்கிய கூடடங்கள் நடைபெறுவதாகவும் அமெரிக்க இராணுவத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். தாக்குதல் நடத்தப்பட்ட வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. காயமடைந்தவர்களை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று மீட்புப் பணியாளர் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

மிக மோசமாகக் காயமடைந்தவர்களைத் தொலைக்காட்சி காட்டியது. படுமோசமாகப் பாதிப்புற்ற பெண்ணொருத்தி உயிருக்குப் போராடிய வண்ணம் இருப்பதையும் தொலைக் காட்சி ஒளிபரப்பியது.

கடந்த மாதம் அமெரிக்கப் படையினர் நடத்திய வான் தாக்குதலில் அபுமுஸாப் அல்-ஸர்காவியின் ஆலோசகர்களான முஹமட் அல்-லுப்னானி மற்றும் அபு அனஸ் அல்-சமி ஆகிய இருவர் உட்பட டசின் கணக்கான கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர் என அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையொன்று தெரிவித்தது.

இதேவேளை -

இத்தாக்குதல் திட்டமிடப்படாமல் திடீரென மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றிப் பேசுவதற்கு இடைக்கால அரசும பலூஜா பிரதிநிதிகளும் சந்தித்துள்ளனர்.

இதில் ஈராக் தேசியப் பாதுகாப்பு படையினர் மீண்டும் பலூஜா நகரிற்குச் செல்வது குறித்து ஆராயப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## ரஷ்ய அதிபருக்குப் பிறந்தநாள்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தனது 52 ஆவது பிறந்தநாளை நேற்றுமுன்தினம் கொண்டாடினார்.

ரஷ்ய அதிபராக 47 வயதில் பதவியேற்ற புடின் தினசரி உடற்பயிற்சிகளைத் தவறாமல் மேற்கொண்டுவருகிறார். சிறந்த ஓட்டப் பந்தய வீரரான புடினுக்கு குத்துச்சண்டை போன்ற வீரக் கலைகளிலும் பயிற்சி உண்டு.

'ஜி-8' எனப்படும் வல்லரசு நாட்டுத் தலைவர்களில் மிக இளைய வயதுடையவர் புடின். நேற்றுமுன்தினம் இவர், மொஸ்கோவிலுள்ள கிரெம்ளின் மாளிகையில் தனது 52 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

உக்ரைன் அதிபர் லியோனிட் குச்சிமா, பிரதமர் விக்டர் யானுகோவிச் உள்ளிட்ட பிரமுகர்கள் புடினின் பிறந்தநாள் விழாவில் பங்கேற்றனர்.

# அமெரிக்க இராணுவ முகாம்மீது ஆப்கானில் எறிகணைத் தாக்குதல்

## அங்கு இன்று ஜனாதிபதித் தேர்தல்

காபூல்,ஒக்.9

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் பகுதியில் அமெரிக்க இராணுவ முகாமொன்றின் மீது எறிகணைத் தாக்குதல் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் இன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற ஏற்பாடான நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தத் தாக்குதல் காரணமாக அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் ஆப்கானுக்கான அமெரிக்கத் தூதரகம் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் இன்று முதலாவது நேரடி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தெரிவுசெய்யப்படுவதற்கான அதிக வாய்ப்புள்ளதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன.

இதேவேளை -

இஸ்லாத்தில் பெண்கள் வாக்களிக்கும் மரபு இல்லை. அதனால், இன்றைய தேர்தலில் குறைந்தளவு பெண்களே வாக்களிப்பிற்காகத் தமது பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர்.

10இற்கு ஒன்று என்ற விகிதத்தில் கூட பெண்கள் வாக்களிப்பது சந்தேகமானதே என்று மகளிர் திட்ட இயக்குநர் ரஞ்சினா ஹமீத் கூறினார்.

ஆண் ஆதிக்கம், பிற்போக்குத்தனம், பாதுகாப்பின்மை ஆகிய காரணங்களே பெண்கள் வாக்களிக்க வராமல் இருப்பதற்குப் பிரதான காரணங்கள் என்று ரஞ்சனா தெரிவித்தார்.

14 லட்சம் வாக்காளர்களில் 3 லட்சம் பேர் மட்டுமே பெண் வாக்காளர்களாவர். (க-3)

# காய்கறிக் கழிவில் இருந்து மின்சாரம் தமிழகத்தில் அடுத்தமாதம் ஆரம்பம்!

இந்தியாவில் முதன்முறையாகத் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள காய்கறிக்கழிவிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படுகின்றது.

இதன்மூலம், மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது. சென்னைக்கு வரும் காய்கறிகளில் கழிவடைவதைக் கொண்டே மின்சார உற்பத்தி செய்யப்படவிருப்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறினார்.

இத்திட்டத்திற்கு 10 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்தியாவில் முதன்முறையாக காய்கறிக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் என்பதால் மத்திய அரசும் மானியம் வழங்கியுள்ளது.

காய்கறிக்கழிவுகள் மிகச் சுத்தமாக்கப்பட்டு பெரிய தொட்டியில் போடப்படும். பின்னர், அது இயந்திரங்கள் மூலம் கூழாக்கப்படும். அப்படி கூழாக்கப்படும்போது அதில் ஒருவித சக்தி உண்டாகும். அது காஸ் வாயு போன்றிருக்கும். அதனை எரித்து அதன்மூலம் இயந்திரத்தை இயக்கி மின்சாரம் பெறப்படும்.

இந்த மின்சார நிலையம் மூலம் வருடத்திற்கு 17ஆயிரத்து 20 லட்சம் மில்லியன் யுனிட் மின்சாரம் உற்பத்திசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. காய்கறிக் கழிவிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவது தமிழ்நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலேயே இது ஒரு முன்மாதிரியான திட்டமாகும். அனைத்துப் பணிகளும் முடிந்து அடுத்தமாதம் முதலாம் திகதி இந்நிலையம் ஆரம்பிக்கும என சென்னை நகர வளர்ச்சிக்குழு அதிகாரியொருவர் கூறினார். (க-3)

# கிராம அலுவலர்களுக்கு தனியான அலுவலகங்கள் வேண்டும்

### பொதுமக்களின் கோரிக்கை இது

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமசேவை அலுவலர்களுக்குத் தனியான அலுவலகங்கள் அமைக்கப்படவேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இப்பிரிவிலுள்ள கிராமசேவை அலுவலர்கள், தனியார்களின் வீடுகள், சிலவற்றிலும் தமது வசிப்பிடங்களிலும் அலுவலகங்களினை அமைத்துச் செயற்பட்டுவருவதனால் பொதுமக்கள் பல சிரமங்களினை எதிர்நோக்கி வருகின்றனர். கிராமசேவை அலுவலர்களது அலுவலகத்திற்குச் செல்லும் பொதுமக்கள் தமது தேவைகளினைப் பூர்த்திசெய்யும் வகையில் கிராமசேவை அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (10-203)

THUSHA OPTICIANS & DENTAL WORKS

துஷாபல், மூக்குக்கண்ணாடியகம்

544, Hospital Rd., T.P.: 021 222 3461
Jaffna. 0777 150032





சீன முறையில் சங்குப் பற்களைச் சிறந்த முறையில் கட்டிட, மிதப்புப் பற்களுக்கு 'கிளிப்' பொருத்தி மிக விரைவில் சீர்செய்திட, மிக நவீன முறையிலான பிறேம்களில் மூக்குக் கண்ணாடி, சண்கிளாஸ் வகைகளை உடனடியாகவே பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

துஷா பல், மூக்குக் கண்ணாடியகம்

(சி-38096) (24-34-18-44)

## கண்ணீர் அஞ்சலி

புலோலி கமநலச்சேவை நிலைய முதலாம் இலிகிதர்
திருமதி விசாலாட்சி தனபாலசிங்கம் அவர்களின்
அன்புத் தந்தையார் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த

### வேலுப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்)

அவர்கள் 06.10.2004 அன்று கொழும்பில் காலமானதையிட்டு துயருற்று இருக்கும் குடும்பத்தாரின் துன்பதுயரங்களில் பங்கேற்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவிஆணையாளரும், உத்தியோகத்தர்களும்
பெரும்பாக உத்தியோகத்தர்களும் கமநலச்சேவைகள்
நிலைய உத்தியோகத்தர்களும் - யாழ். மாவட்டம்,
உதவிப்பணிப்பாளரும் பணியாளரும், கமத்தொழில் காப்புறுதிச்சபை
யாழ். மாவட்டம்

(சி38097)(34-18-44)

TRRO - CTC



## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
### கணனிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

- அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 1998 ஆம் ஆண்டில் இருந்து கணனிப் பயிற்சி வழங்கும் திட்டத்தை நடத்தி வருகின்றது.
- இத்திட்டத்தில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இணைக்கப்பட்டுக்கொள்வதோடு, குறிப்பாக கிராம மட்டத்தில் உள்ள மேற்படிப்பைத் தொடர வாய்ப்பு வசதியற்றவர்களிற்கு முன்னுரிமைப்படி அனுமதியளிக்கப்படுகின்றது.
- இதுவரையில் 1500 இற்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் கணனிப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்ததோடு, விருப்பமுடையவர்கள் மேலதிகப் பயிலுநராகப் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் நிறுவனங்களிற்கு அனுப்பும் நடைமுறை இருந்து வருகின்றது.
- பயிற்சிநெறியில் இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களிடமிருந்து பதிவுக் கட்டணம் மட்டும் அறிவிடப்படுகின்றது.
- பாடத்திட்டக் கையேடுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.
- இந்நடைமுறையில் பின்வரும் பயிற்சிநெறிகளுக்குப் புதிதாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

**Diploma in Microsoft Office**
Microsoft Word XP
Microsoft Excel XP
Microsoft Access XP
Microsoft Power Point XP

**Diploma in Desktop Publishing**
Adobe Pagemaker 7.0
Corel Draw 11
Adobe Photoshop 7.0

**Visual Basic**

- இணுவில் மக்லொட் வைத்தியசாலையில் இயங்கும் பயிற்சி நிலையத்திலும் 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் இயங்கும் பயிற்சி நிலையத்திலும் பயிற்சிநெறிகளைத் தொடரமுடியும்.
- விண்ணப்பப் படிவங்கள் ரூ. 10/= செலுத்தி பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

★ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

★ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
மக்லொட் வைத்தியசாலை,
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

★ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
கண்டி வீதி, கைதடிச் சந்தி. (சித்த மருத்துவபீடத்திற்கு முன்பாக)

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 20.10.2004 இற்கு முன்னர் தலைவர், 106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குச் சேர்க்கப்படல் வேண்டும்.

கணனிப் பயிற்சி நிலையம்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.
(சி38093)(34-18-44)

## வேலையாள் தேவை

★ ரீமேக்கர்
★ றொட்டி மேக்கர்
★ சப்ளையர்
★ சைனீஸ் உணவுகள் தயாரிப்பாளர்

தொடர்பு: THREE STAR HOTEL,
No.162, Hospital Road,
Jaffna. T.P.: 7125.
(சி38093/44)

## அஞ்சல் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

சர்வதேச அஞ்சல் தினத்தையிட்டு இன்று காலை 9 மணிக்கு யாழ். பிரதம தபாலகக் கட்டடத்தொகுதியில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

காலை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் சி. இளம்பிறைநாதன் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்வார். (10-6)

## சிறுவர் தின பரிசளிப்பு

கொழும்பு,ஒக்.9

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை நடத்தும் சிறுவர்தின பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கூட்டுத்தாபனத்தின குமாரதுங்க கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனப் பணிப்பாளர்சபை உறுப்பினரும், சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சின் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்துகொள்ளவுள்ளார். (க)

## படிவங்களை நேரில் சமர்ப்பிக்குமாறு அறிவிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டடங்களை நிர்மாணிப்பவர்கள் தமது படிவங்களை நேரடியாகச் சபை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

கட்டடம் அமையவுள்ள ஆதனம் கட்டட விண்ணப்பதாரரின் பெயரில் இருக்கவேண்டுமென்பதால் வீண் காலதாமதத்தைத் தவிர்க்கவே விண்ணப்பதாரர் நேரடியாக வருகைதநது ஒப்படைக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதனப் பெயர்மாற்றல் மற்றும் பிரிவிடுதல் தொடர்பான விண்ணப்பங்களைச் சபையின் அந்தந்தப் பிரிவுகளில் சமர்ப்பிக்குமாறும் அறிவித்துள்ளார். (10-117)

## விதவைகளுக்கு உதவத் திட்டம்

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் குடும்பத் தலைவனை இழந்த குடும்பங்கள சுயதொழில் பெறும்நோக்குடன் உதவிகளை வழங்க அமெரிக்க திட்ட நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 23 பேருக்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். சமூக செயற்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

சுழற்சிமுறைக் கடனதிட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தில் 205 பயனாளிகள் பயனடையவுள்ளனர்.

குழுச்செயற்பாடுகள் மூலம் பெண்களை ஊக்குவித்து வருமானத்தை மேம்படுத்த தும்புத்தொழிற்சாலை, அரைக்கும் ஆலை என்பனவும் அமைக்கப்பட்டு வேலை வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன. (3-204)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

நல்லூர் பிரதேசச் செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தல் நடைபெறவுள்ளது. (10-139)

## மருந்துத் தட்டுப்பாடு

மந்திகை ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படும் 'மெற்போமிங்' வில்லைகள் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக வழங்கப்படவில்லை என்று நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

கையிருப்பில் இல்லை எனவும் நோயாளிகள் அவற்றைத் தனியார் மருந்தகங்களில் வாங்குமாறும் அவர்களுக்குக் கூறப்பட்டு வருகிறது. (10-170)

## கண்ணீர் அஞ்சலி

### சுந்தரம் சுந்தரலிங்கம்

(ஆசிரியர், யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம்)

எமது கல்லூரியின் ஆசிரியையாகிய
திருமதி சிவனேஸ்வரி சுந்தரலிங்கம் அவர்களின் அன்புக் கணவரான

### சுந்தரம் சுந்தரலிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


யா/வட இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(சி38083)(34-18-44)

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி அறிவித்தலும்

மலர்வு 10 – 05 – 1923



உதிர்வு 26 – 08 – 2004

### அமரர் குஞ்சன் கணபதி

மனிதப் பிறவி எடுத்து மாணிக்கமாய் திகழ்ந்தீர்!
புனிதப் பணி செய்து புகழுடன் திகழ்ந்தீர்!
நாம் எல்லோரும் ஒன்றாகக் கூடியிருப்போம் என்கையில்
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்றீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போம்

அமரரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் தொலைபேசி மூலமும் தந்தி மற்றும் கடிதம் மூலமும் இரங்கல்தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அமரரின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (09.10.2004) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வண்ணாங்கேணி வடக்கு,
பளை. T.P.:077 6167176.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(37361)(34-18-44)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சற்குணவதியம்மா பொன்னையா

சிவன்கோயிலடி, வட்டு.வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி பொன்னையா சற்குணவதியம்மா அவர்கள் நேற்று (08.10.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற ரயில் நிலைய உத்தியோகத்தர் பொன்னையா அவர்களின் அன்பு மனைவியாரும் ரவிச்சந்திரன் (ஆசிரியர், வட்டு.இந்துக் கல்லூரி), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), பார்வதிதேவி (பிரான்ஸ்), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சங்கமித்திரா, திலகவதி, யோகேஸ்வரன் (பிரான்ஸ்), பேரின்பநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அனபு மாமியாரும் அபிநயா, லச்சியா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற நிலஅளவையாளர் தீபதூபநாதபிள்ளை, திருமதி பாலசுப்பிரமணியம், நாகேஸ்வரியம்மா, திருமதி நச்சினார்க்கினியசிவம் கமலநாயகி, திருமதி தங்கவடிவேல் பூலோகநாயகி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சின்னையா, இளையதம்பி, வல்லிபுரம் சின்னாச்சிப்பிள்ளை, கனகசபை நாகம்மா, நாகலிங்கம் வள்ளியம்மை, சற்குரு நாகேஸ்வரியம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

சிவன்கோயிலடி,
வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
பொ.ரவிச்சந்திரன்
(மகன்). (37365)(34-18-44)

### திருமதி மருதகுட்டி நல்லபிள்ளை



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொணட திருமதி மருதகுட்டி நல்லபிள்ளை அவர்கள் 03.10.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதகுட்டியின் அன்பு மனைவியும் செல்வரத்தினம் (பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்), தங்கராணி (சுவிஸ்), குணரத்தினம், செல்வராணி (பிரான்ஸ்), ஜெயராணி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மராசா (சந்திரன்-சுவிஸ்), இராசகுமார் (பிரான்ஸ்), குமாரதாசன் (நெதர்லாந்து), இராஜேஸ்வரி, மனோரஞ்சிதம் ஆகியோரின் மாமியாரும் சாருதர்சன், சார்ணி, சாளினி, ஜெகன், துசியந்தினி, துஷாநதினி, துதீஸ்சன், குணாகரன், கவிதா, தயாகரன், லக்சனா, செந்தூரன், நிஷாந்தினி, பார்த்தினி, தீபன், கிரிஷாந்தன், ஜெறோசாந்தன், நிஷாந்தன், அபிகல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜோயலின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2004) சனிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானதத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருசு மதவடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.
(37349)(42-34-18-44)

உதயன்

# முன்னுதாரணமாகத் திகழும் கிளிநொச்சி

பேரழிவு தரும் இந்தயுத்தத்துக்கு மத்தியிலும் தமிழரின் அழியாச் சொத்தாக விளங்குவது கல்வி.

கல்வித்துறையால் ஈழத்தமிழர் வளமும், சிறப்பும், உன்னதமும் பெறுவதைப் பொறுக்க முடியாமல்தான் அதற்கு வேட்டு வைக்க சிங்களப் பேரினவாத அரசு, பல்கலைக்கழக அனுமதி முறையில், தகுதித் தெரிவை ஒதுக்கி, மாவட்ட ரீதியான கோட்டா முறையைப் புகுத்தியது.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதலே ஈழத் தமிழர்களின் பல்வேறு உரிமைகளைப் பறித்துப் பந்தாடி வந்த பேரினவாதம், தமிழரின் கல்வி கற்பதற்கான உரிமையில் கைவைத்த போதே தமிழினம் சிலிர்த்துக் கொண்டு சிறுத்தையாய்ச் சீறிப்பாயப் புறப்பட்டது. அப்போதும்கூட, உரிமை வேண்டிப் போராடுவதற்காக ஆயுதம் ஏந்திய தமிழினம், அந்தப் போராட்ட இழப்பில் கல்விச் சொத்தையும் இழந்துவிடும் என்றுதான் சிங்களம் கனவு கண்டது. ஆனால், அதுவெறும் பகல் கனவே என்பது இன்று நிருபணமாகியிருக்கின்றது. கடந்த இருதசாப்தகால போரினால் அதிகம் போரிழப்புக்கும் பேரிழப்புக்கும் உள்ளான பிரதேசம் கிளிநொச்சியும், ஏனைய வன்னி மாவட்டங்களும் தான். இழப்பு மாத்திரமல்லாமல் இராணுவக் கெடுபிடி முற்றுகை, பொருளாதாரத் தடை போன்றவற்றாலும் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியும் அதுதான். இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும் போது வாய்ப்பு, வசதிகளில் - அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் விடயங்களில் - சுமார் கால்நூற்றாண்டு காலம் பின்னடைவில் இருக்கும் பகுதியும் அதுவே.

ஆனால், இலங்கைத் தீவிலேயே கல்வியில் சிறந்த பெறுபேறைத்தரும் முன்னணி நிலையை வன்னிப் பிரதேச மாவட்டங்கள் - குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் - பெற்று, ஈழத்தமிழரின் பிரிக்கமுடியாத, அழியாச் சொத்து கல்விதான் என்று நிரூபித்திருப்பது வியப்புக் குரியது.

கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சைப் பெறுபேறுகளை புள்ளிவிவர ரீதியாக ஆராயந்த பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கை இதனை உறுதி செய்திருக்கின்றது.

இந்தப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றோர் வீதம் கிளிநொசசியில் 66.1 சதவீதம். இது இலங்கையில் முதலாவது இடம்.

இரண்டாம், மூன்றாம் இடங்களை முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள் பெறுகின்றன.

56.95 தேர்ச்சியுடன் யாழ்ப்பாணம் 14ஆவது இடத்தையும், 55.4 வீதத் தேர்ச்சியுடன் கொழும்பு மாவட்டம் 15 ஆவது இடத்தையுமே பெற்றிருக்கின்றன.

யுத்த நெருக்குவாரங்கள் மட்டுமல்லாமல் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இத்தகைய போற்றத் தகுநத அடைவைப் பெற்ற கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு இந்த அரசு வழங்கிய அடிப்படை வசதிகள் எவை என்பதை நோக்குவதும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும்.

29ஆயிரதது 463 மாணவர்களுக்கு ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 579 ஆசிரியர்கள் தேவை. ஆனால், இருப்பவர்களோ ஆக 991 பேர் மட்டுமே. ஓர் ஆசிரியருக்கு முப்பது மாணவர்கள் என்ற பாதகமான ஆசிரிய - மாணவர் விகிதம்.

அங்கு கலைப்பட்டதாரிகளோ மித மிச்சம். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி போன்ற முக்கிய பாடங்களுக்கு மருந்துக்கும் ஆசிரியர் இல்லை என்ற மோசமானு பற்றாக்குறை.

ஆரம்ப வகுப்புக்களில் பற்றாக்குறை 97.35 வீதம் என்றும் இடைநிலை வகுப்புகளில் 83.69 வீதம் என்றும் உயர்தர வகுப்புகளில் 95 வீதம் என்றும் அதிர்ச்சி தரும புள்ளி விவரங்களை அடுக்குகின்றார் தமிழர் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன்.

களிநொச்சி மாவட்ட மாணவர்களின் கல்விக்கான பௌதிக வசதிகளோ மிகமிக மோசம். ஒழுங்கான - மழைக்கு ஒழுகாத - மழைக்கு ஒதுங்குவதற்கேனும் - வகுப்பறைகள் பல பாடசாலைகளில் இல்லை. மரத்துக்குக் கீழ் மணலில் அமர்ந்து படிக்கும் அவலம். கதிரை, மேசைப பற்றாக்குறை, ஆய்வுகூட வசதி, நூலக வசதி போன்ற அடிப்படை வசதிகள் பல இடங்களில் அடியோடு இல்லை.

இதைக்கூட, சிறிய, சாதாரண புள்ளி விவரத்தால் உணர்ந்து கொள்ளமுடியும். குறைந்தது ஆயிரத்து 325 ஆசிரியர் கதிரைகளாவது தேவை. ஆனால், அந்த மாவட்டப் பாடசாலைகளில் இருப்பதோ ஆக 637 கதிரைகள்தாம். குறைந்தது 1,285 கரும்பலகைகள் வகுப்புகளுககுத் தேவை. 542 வகுப்புகள் கரும்பலகையே இன்ற செயற்படுகின்றன என்றால் நிலைமையைச் சிந்திதுப் பாருங்கள்.

ஆசிரியர்களும் இல்லை; ஆசிரியர்கள் இருக்கக் கதிரைகளும்கூட இல்லை என்ற நெருக்கடி நிலைமையின் மத்தியில் தான், கடந்த வருட உயர்தரப் பரீட்சை முடிவுகளில் இத்தகைய உயர்ந்த பெறுபேற்றுச் சாதனையைக் கிளிநொச்சி மாவட்டம் எட்டியிருக்கின்றது.

இதற்குக் காரணமாக அமைந்த மாணவர்களை மட்டுமல்லாமல் அவர்களுக்குப் போதித்த ஆசான்கள், வழநடத்திய அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் மற்றும் கல்வித துறையை வளம்படுத்தும் தமிழர் கல்விக்கழகம் போன்றவற்றின் நெறியாளர்கள் அனைவரும் பாராட்டப் படவேண்டியவர்கள்.

கஷ்டத்துக்கு மத்தியிலும் சளைக்காமல் போராடினால் இலக்கை எட்டுவது நிச்சயம் என்பதற்கு கிளிநொசசிக் கல்வித்துறை நல்லதோர் முன்னுதாரணம்.

# தீவுப்பகுதிக்கான படகுச் சேவைக் கட்டணங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் அதிகரிப்பு

ஊர்காவற்றுறை,ஒக்.9

அரச ஊழியர்களின் நலன்கருதி தீவுப் பகுதிகளுக்கிடையே நடைபெற்றுவரும் படகுச் சேவைகளின் நேரமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் படகுச் சேவைக் கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஸ்ரீமோகன் தலைமையில் படகு உரிமையாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதன்படி திங்கட்கிழமைகள் தோறும் ஊர்காவற்றுறை, கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையிலிருந்து காலை 9 மணிக்குப் படகுச்சேவை இடம்பெறும். ஏனைய நாள்களில் காலை 9.30 மணிக்குச சேவைகள் இடம்பெறும்.

அதேவேளை, ஒவ்வொரு திங்கட்கிழமையும் அனலைதீவிலிருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் படகு நயினாதீவுக்குச் சென்று அங்கிருந்து மீண்டும் காலை 7.45 மணிக்குப் புறப்பட்டு மீண்டும் அனலைதீவு வந்தடைந்து அங்கிருந்து ஊர்காவற்றுறை நோக்கிச்செல்லும்.

அத்துடன், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஊர்காவற்றுறையில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்குப் புறப்படும் படகு எழுவைதவு, அனலைதீவு ஊடாக நயினாதீவு நோக்கிச் செல்லும்.

இதன் மூலம் ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் அனுபவித்து வரும் சிரமங்கள் ஓரளவு நிவர்த்தி செய்யப்படவுள்ளன.

அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதி முதல் படகுச்சேவைக் கட்டணங்கள் 5 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறையில் இருந்து நயினாதீவுக்குப் பயணி ஒருவருக்கு ஒருவழிக் கட்டணமாக 30 ரூபா அறவிடப்படவுள்ளதுடன், எண்ணெய் பரல் ஒன்றிற்கு 125 ரூபா அறவிடப்படவுள்ளதாகவும் எழுவைதீவு கிராமசேவை அலுவலர் வ.வடிவழகையன் தெரிவித்துள்ளார். (10-16)

# மோ.சைக்கிளில் 'சாகசம்' புரிந்த இருவர் பொலீஸாரால் கைது!

## நீதிமன்றில் அவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வீதியால் 'சாகசம்' காட்டி ஓடிய இரு இளைஞர்கள் கோப்பாய் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் திருநெல்வேலிப் பகுதியில் வீதியில் இருமோட்டார் சைக்கிள்களில் இருவர் 'சாகசம்' காட்டி ஓடிக் கொண்டிருந்தனர் என்றும் -

கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தலைமையில் இரவுநேர வாகன ரோந்தில் சென்ற பொலீஸார் இவர்கள் இருவரையும் கைது செய்தனர் என்றும் கூறப்பட்டது.

இவர்களைப் பொலீஸார் பரிசோதனைக்குட்படுத்திய போது இருவரும் மதுபோதையில் இருந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இருவரும் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றத்துக்காக ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபா தண்டப் பணமும், இரண்டாயிரம் ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது.

மற்றைய நபருக்கு அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமை, மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமை ஆகிய குற்றங்களுக்காக இரண்டாயிரத்து 500ரூபா தண்டப் பணமும், இரண்டாயிரம் ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. (4-7)

# கோப்பாய் பொலீஸாரின் முற்றுகையில் பெரிய கசிப்புக் குகை ஒன்று பிடிபட்டது!

யாழ்ப்பாண்ம்,ஓக்.9

உரும்பிராய்ப் பகுதியில் கசிப்புக் குகை ஒன்றைக் கோப்பாய் பொலீஸார் சுற்றிவளைத்துப் பிடித்திருக்கின்றனர். இந்தக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். கசிப்பு மற்றும் கோடா என்பனவும் மீட்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கோப்பாய் பொலீஸ் நிலையத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தலைமையில் சென்ற குழுவினர் உரும்பிராய் பகுதியிலுள்ள அடர்ந்த பற்றைவளவு ஒனறுக்குள் கசிப்பு உற்பத்தி செய்யும் இடததைக் கண்டுபிடித்தனர் என்றும் -

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களில் சிலர் தப்பிச் செல்ல ஒருவர் மட்டும் பொலீஸாரிடம் சிக்கினார்.

இவரைப் பொலீஸார் கைதுசெய்ததுடன் அப்பகுதியில் இருந்து 532 கிராம் கசிபபு மற்றும் நான்கு 'பரல் கோடா, கசிபபு உற்பத்தி செய்வதற்குரிய உபகரணங்கள் என்பவற்றைக் கைப்பற்றிப் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ்.நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை 40 ஆயிரம் ரூபா குற்றப் பணமாகவும் 10ஆயிரம் ரூபா தர்மப் பணமாகவும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (4-7)

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு மாநகர ஆணையாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

கொழும்புத்துறை மேற்கு விதானையார் வீதியினைச் சீரமைத்துத் தருமாறு கோரி கொழும்புத்துறை மத்திய ஐக்கிய நாணய சங்கம் யாழ்.மாநகரசபை ஆணையாளருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

விதானையார் வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இதனால், இந்த வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை அனுபவிப்பதுடன் மழை காலங்களில் இவ்வீதியில் வெளளம், தேங்கி நிற்பதால் போக்குவரத்தும் தடைப்பட்டு வருகின்றது. இது தொடர்பாகக கடந்த ஜூன் மாதம் யாழ்.அரச அதிபரிடம் அப்பகுதி மக்கள் கடிதமொன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

ஆனால், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை என்றும், இந்த விடயம் தொடர்பாகத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது என்றும் - இதனைத் தாங்கள் கருத்தில் எடுத்து காலதாமதமின்றி இவ்வீதியினைப் புனரமைப்புச் செய்துதருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (10-13)

# சாரணர் விழா

யாழ்ப்பாணம்,ஒக்.9

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த சாரணர் பாசறை விழாவும் குருளைச் சாரணர் வெளிக்களநாள் நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா முதன்மை விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்பு விருந்தினராகவும், வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (3-204)

# தறித்த பனைமரங்களை எழுவைதீவிலிருந்து வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை

ஊர்காவற்றுறை,ஒக்.9

எழுவைதீவில் கட்டடத்தேவைகளுக்குப் பனைமரங்கள் தறிக்கப்பட்டு வியாபார நோக்கில் வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இருந்து சிலர் வியாபார நோக்கில் பனைமரங்களைத் தறித்து வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லும் முயற்சியில் ஈடுபட்டு வந்ததாகக் கிடைதத முறைப்பாட்டை அடுத்து மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளதாக எழுவைதீவு கிராம சேவை அலுவலர் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் பனைமரங்கள் அதிக அளவு காணப்படுகின்றபோதும் மேற்படி நடவடிக்கைகளினால் அவை அருகிவருவதுடன் மீள்நடுகைத் திட்டமும் முன்னெடுக்கப்படாத காரணத்தால் இப்பகுதி மக்கள் இது குறித்து கிராமசேவை அலுவலரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இதனையடுத்து வியாபார நோக்கில் வெளியிடங்களுக்குப் பனைமரங்கள் எடுத்துச் செல்லப்படுவது தடைவிதிக்கப்பட்டுள ளது. ( 10-16)

# கொரிய நாட்டின் கட்டட நிபுணர்குழு வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதறகும் இயந்திர சாதனங்களைப் பொருத்துவதற்குமென கொரியா நாட்டின் கட்டட நிபுணர் குழுஒன்று எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

கொரியா நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி இம்பைங் குவான தலைமையில் நான்கு பேர்கொண்ட குழுவே யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகைதரவுள்ளது. அன்று காலை 9மணிக்கு தொழில்நுடபக் கல்லூரிக்கு வருகைதரும் அக்குழு அங்கு அமைக்கப்படவுள்ள கட்டடத் தொகுதி வேலைகள், தொழில்நுட்ப இயந்திர சாதனங்களைப் பொருத்துதல் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை கல்லூரியின் அதிபர் ந.யோகராஜனுடன் நடத்தவுள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரியில் மேற்படி வேலைகளை ஆரம்பித்துவைக்க வருகை தரும் இந்தக் குழு கல்லூரியில் உள்ள பழைய வேலைத்தளத் தொகுதியில் 4 ஆய்வு கூடங்களை மாற்றியமைத்து அதற்கான இயந்திர சாதனங்களையும் பொருத்தவுள்ளது. இதனைத் தொடர்ந்து ஏனைய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக் கொரியா நாட்டில் இருநது மற்றொரு கட்டட நிபுணர் குழுவும் இங்கு வருகைதரவுள்ளதாக அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார். (10-6)

## நாளை

புரட்டாதி 24
ஞாயிற்றுக்கிழமை
(10.10.2004)
திதி : ஏகாதசி
முன்னிரவு: 08.57
நட்சத்திரம் : மகம்
பின்னிரவு 01.08
சுபநேரம்: 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தவறுகளையும் தோல்விகளையும் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள கைநெற்றிக் (லேடீஸ் ஸ்கூட்டி) மோட்டார் சைக்கிளும் ஹீரோ ஸ்ரீம் மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல:127/1, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் ('யுனிசெவ்' பின்புறம்). (37321)

சாவகச்சேரி பைந்தமிழ் பேக்கரிக்கு அருகில் உள்ள கடை விற்பனைக்குண்டு. தொடாபு: நா.அழகர்சாமி, 131, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (37279)

கும்பகோணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 5' உயரமான அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய இரண்டு குத்துவிளக்குகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.61, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.T.P.:3726 (37318)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கந்தர்மடம், இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கையில் பல்கலைக்கழகம், பேபி ஸ்ரூடியோ, இந்துமகளிர் கல்லூரி சுற்றாடலில் மேல்மாடி வீட்டுடன் இரண்டு (02) பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, T.P.: 077 6125140. (37273)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதியில் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கருகிலுள்ள பிரப்பங்குளம் வீதியில் (கே.கே.எஸ். வீதியில் இருந்து 30 யார் தூரத்தில்) 2½ பரப்புக்காணியில் அமைந்துள்ள மாடிவீடு விற்பனைக்கு உண்டு. தரகர் இன்றி நேரில் வரவும். சி.சண்முகானந்தன், 37/10, சேர் பொன்.இராமநாதன் வீதி, தலையாழி லேன், யாழ்ப்பாணம். T.P.: 222 7146, 0776 128432. (37360)

## காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரியடி, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 29A, சந்தனமாதா கோயில் வீதி, சுண்டுக்குளி. (37274)

## வான் விற்பனைக்கு

14 பேர் பயணிக்கக்கூடிய வான் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: பூபதி வெதுப்பகம், உயரப்புலம், ஆனைக்கோட்டை.T.P.: 021 4590970. (37343)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான **Pure Bred Great Dane** நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37355)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்யப்பட்டது. **1Kg 200/=** வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். (மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விலை குறைக்கப்படும்). தொடர்பு: ராஜீவ் பாம், ஆனைக்கோட்டைச்சந்தி.T.P.: 222 2867, 222 3529. (37348)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தஞ்செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தஞ்செய்யப்பட்டது. **1 Kg 200/=** வியாபாரிகளுக்கு கழிவுண்டு. தொடர்பு: விஜயகுமார், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை. (37347)

புறொயிலர் இறைச்சிக்கோழி தினமும் விற்பனைக்குண்டு. 1 Kg 120/=. கல்பேட் 1 Kg - 130/=. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (37357)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், 8/1, கற்குளம் ஒழுங்கை, கொட்டடியைச் சேர்ந்த செல்வி திருக்கருணை வபித்தா என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய கோவை ஒன்று நல்லூர் மாநகர சபைக்கும் மேற்படி விலாசத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். (37320)

கற்திட்டி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சி.செல்லத்தம்பி என்பவரது தேசிய அடையாள அட்டை (523084267V) 03.10.2004 அன்று முகமாலைக்கும் ஆனைக்கோட்டைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (37362)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட **Prima Original Broiler** குஞ்சுகள் 35/-, பேட்டுக்குஞ்சு 50/-. 11.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, **R.S.K.** பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (37062)

மிகவும் தரமான இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட **Prima Original Broiler** குஞ்சுகள் 35/-, பேட்டுக் குஞ்சுகள் 50/- 11.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். சிவகலை, கோப்பாய், சந்நிதி **Farm** தொண்டைமானாறு ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37225)

## வாடகைக்கு

273, கே.கே.எஸ். வீதியில் அமைந்த கடை வாடகைக்கு விடப்படும். தேவையானோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: திருமதி க.மங்கையர்க்கரசி, 320, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 4590516. (37166)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1965 **MBBS Doctor**, 1972 சிவில் எஞ்சினியர், 1972 மாஸ்ரர், 1973 **T.O.** இவர்களுக்கு அழகிய மணமகள்கள் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா, செங்குந்தவீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (37351)

## Organ / Violin Notes

புதிய பாடல்களை இசைக்கருவிகளில் எவ்வாறு இசைப்பது என்பது பற்றிய விளக்க நூல் "The Home Feeling" இசைக் குறிப்புகள் பாகம் 32 ஆகியன வெளிவந்துள்ளன. கிழமை நாள்களில் 4 மணியின் பின்பும் சனி, ஞாயிறு, பொது விடுமுறை தினங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**S.S.Rajeendran**
*Karaweena Isai Manram*
*75, Temple Rd., Nallur, Jaffna.*
(**Money Order** இல் பெறுவதற்கு ரூபா 250/- மட்டும்)

## அனுமதி பெறவேண்டும்

பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட பகுதியில் கட்டடங்களைப் புனரமைத்தல், விஸ்தரித்தல், நிர்மாணித்தல் போன்றவற்றை மேற்கொள்வோர் தங்களது கட்டடப் படங்களுடன் நகராட்சி மன்றத்தில் பெறப்படும் விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டட வேலைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் திருமதி க.திருச்செல்வநாயகம் அறிவித்துள்ளார். (10-202)

## நூல் நிலைய ஆலோசனைக் கூட்டம்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் பொதுநூல் நிலைய ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வாசிப்புப பழக்கத்தை அபிவிருத்தி செய்யும் குழு அமைபபது பற்றித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

சர்வதேச நூலகங்களினதும் நிறுவனங்களினதும் அமைப்பின் ஒத்துழைப்புடன் 'யுனெஸ்கோ' நிறுவனம் பொது நூலகம் தொடர்பான கொள்கைத் திட்டத்துக்கமைய ஒக்ரோபர் மாதத்தை "வாசிப்பு மாதமாக"ப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதனை முன்னிட்டுப் பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பிரிவேனா நூலகங்கள் போன்றன நிதி, பௌதிகம் மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்திப் பல்வேறு செயற்றிட்டங்களை வகுத்து அமுல்படுத்தி வருகின்றன. (10-152)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenace and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.
**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna
Phone: 0773 068968
(சி-37511)

# 100ஆவது ஆண்டு விழா சிறப்பு மலர் 09.10.2004–10.10.2004

புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – யாழ்ப்பாணம்

### MESSAGE FROM THE PATRON


I extend my greetings and well wishes to all the members of the OBA of St.Patrick's College Jaffna as you celebrate the Centenary of your association. I am really happy to associate myself with you, Patricians, in this happy event.

The Jaffna OBA is the Mother association of all the Old Boys' Associations of St.Patrick's College in the world. It rendered invaluable and unforgettable service in the past one hundred years to our College. When the College struggled through war and destruction, it is the OBA that has been helping, supporting and giving financial assistance to the College to continue in spite of the many hardships. In fact, we feel proud about you, for you have been a tower of strength to the College.

I wish you great success as you celebrate your centenary.

May God bless you and your activities.

Rt.Revd.Dr.Thomas Savundranayagam
*Bishop of Jaffna.*



29-04-1904 '29-04-2004

### MESSAGE FROM THE RECTOR

It gives me great pleasure in sending this congratulatory message as a fellow Patrician to the Centenary Celebrations of St. Patrick's College Alumni Association Jaffna Branch.

Alumni Associations are formed generally for two reasons. One is for the strengthening of fellowship and goodwill among the membership, and the other is to foster a spirit of service for the old school by supporting its programme of activities with financial assistance. The Jaffna branch of the OBA has fulfilled the above reasons commendably well, very specially during the most turbulent times in the history of this College. Though many of its members have moved to other countries, this association has contributed its mite to the College and has been supporting the Rector and the administration in times of struggles and survivals. Congratulations for your wonderful support to your Alma Mater.

Revd.Dr. Justin B.Gnanapragasam
*Rector - St. Patrick's College, Jaffna.*

### பற்றீஷன் தொழில் பயிற்சி நிறுவனப் பதிவாளரின் வாழ்த்துச்செய்தி

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவது மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகும். இதனை இட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது பற்றீஷன் நிறுவனம் தற்போதுள்ள நிலையில் ஆலவிருட்சமாக வளர்ந்து வியாபித்து இருக்கின்றது என்றால் அது பழைய மாணவர் சங்கத்தையே சாரும். இதன்காரணமாக நாம் எமது பாடசாலைக்கு பௌதிக வளத்தேவைகளையும், மாணவர்களின் செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்கும் வகையிலும் உந்து சத்தியாக விளங்கிவருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவற்றுடன் பலருக்குத் தொழிற்பயிற்சியையும், தொழில்வாய்ப்பினையும் வழங்கி வருகின்றோம்.

எனவே, இவற்றை மேற்கொண்டு இவ்விழா சிறப்புற நிகழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துத் தெரிவிக்கின்றேன்.

G.J. தனசிங்கம்,
*பதிவாளர், பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்,யாழ்ப்பாணம்.*

### புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்

கி.பி. 1904இல் புனித பத்திரிசியார் தின ஒன்று கூடலில் முன்மொழியப்பட்டு 29.04.1904 இல் கல்லூரி அதிபர் அருட் திரு.சாள்ஸ் ப்போ (Rev.Fr Charles Baud) அடிகளாரின் தலைமையில் இச் சங்கத்தின் அங்குராப்பணக்கூட்டம் இடம்பெற்றது. 1905இல் கல்லூரியின் முதல் சஞ்சிகையை இச்சங்கமே வெளியிட்டது. காலப்போக்கில் சங்கத்தின் செயற்பாடுகள் தளர்வடைந்த நிலையில் 1941 ஆம் ஆண்டு கல்லூரியின் அதிபர் அருட் திரு. லோங் அடிகளாரின் உந்துதலினால் இச் சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்று செயற்பட்டது.1970களில் தனியார் பாடசாலையான எமது கல்லூரி, நிதி தொடர்பாக பெரும் சவால்களை எதிர்நோக்கிய வேளையில் அதிபராக இருந்த அருட்திரு. TAJ மதுரநாயகம் அடிகளாரின் ஊக்குவிப்போடு இப்பழைய மாணவர் சங்கம் "புனித பத்திரிசியார் கல்லூரி நலன்புரிச் சங்கம்" என்ற அமைப்பை ஆரம்பித்து, கல்லூரிக்கு ஒரு ஆபத்பாந்தவனாக செயலாற்றியது. இதேகாலப் பகுதியில் 1976ஆம் ஆண்டு பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனத்தை ஆரம்பித்து, பாடசாலையால் இடைவிலகும் மாணவர்களுக்கு ஆதரவு வழங்கியது . பற்றீஷியன் விளையாட்டுக் கழகமும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் 1983ஆம் ஆண்டுக்குப் பின் இக்கட்டான வரலாற்று காலப் பகுதியில் யுத்த அனர்த் தங்களினால் கல்லூரி பல அழிவுகளையும் சவால்களையும் சந்தித்த வேளைகளில் அவ்வப்போது தேவைப்பட்ட நிதியுதவியை பலவழிகளாலும் சேகரித்து வழங்கி கல்லூரித் தாய்க்கு தன் நன்றிக் கடமையை நிறைவேற்றி வந்துள்ளது.

இன்றும் பல பழைய மாணவர்கள் புலம் பெயர்ந்து சென்ற நிலையிலும் , எஞ்சி இருப்பவர்கள் இச்சங்கத்திற்குச் செயல் வடிவம் கொடுத்துத் தளராது நின்று கல்லூரி நிர்வாகத்திற்குத் தோளோடு தோள் கொடுத்து பேருதவி புரிந்து வருவதைக் கல்லூரிக்கழகம் நன்றியோடு நினைவு கூர்ந்து , நூறாவது ஆண்டு நினைவு விழாவில் இதன் அங்கத்தவர்களையும் குறிப்பாக செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்திப் பெருமை அடைகிறது.

*பெ.பிரான்சீஸ் (கல்லூரி ஆசிரியர்)*

### பொதுச் செயலாளரின் உள்ளத்தில் இருந்து.....

பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலை நாள்களை மீட்டுப் பார்க்கவும், பழைய தோழமைகளை தொடர்ந்து அனுபவிக்கவும், தம்மை உருவாக்கிய கல்லூரித் தாய்க்கு தமது நன்றிக்கடமையை ஆற்றவும் சந்தர்ப்பம் அளிக்கும் அமைப்பாகவே பழைய மாணவர் சங்கம் விளங்குகின்றது. இந்தவகையில், 1904 ஆம் ஆண்டில் எமது சங்கத்தை அங்குராப்பணம் செய்த எமது முன்னோர்களை பெருமையுடனும், நன்றியுடனும் நினைவு கூறுகின்றோம்.

இன்று உலகின் பல நாடுகளிலும் உயர்பதவிகளை வகித்துக்கொண்டிருக்கும் பல புத்திஜீவிகளை உருவாக்குவதற்காக தமது சேவையை அர்ப்பணித்த கல்லூரியின் பழைய அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், எமது சங்க உறுப்பினர்கள் நன்றியுடன் மெச்சுகின்றனர். கல்லூரிக்கு அருகே பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனத்தை அமைத்து அதன் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக விளங்கிய பெருமை எமது பழைய மாணவர் சங்கத்தையே சாரும். புகழ்ச்சிக்குரிய இப்பயிற்சி நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பாராட்டுகின்றோம்.

எமது சங்கம் தனது நூற்றாண்டு விழாவை முன்னெடுக்கின்ற இக்காலப்பகுதியில்அதன் பொதுச்செயலாளராக பணியாற்ற எனக்குக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை பெரும்பாக்கியமாகவும்,கௌரவமாகவும் உணருகின்றேன். சங்கஉறுப்பினர்கள் என்மீதுகொண்ட நம்பிக்கைக்கும் இப்பணியில் எனக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் நன்றி கூறிக் கொள்வதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

S.மரியதாஸ் (J.P., All Island)
*பொதுச்செயலாளர்.*

09.10.2004 (சனி)
- ★ மு.ப.7.30 நன்றித்திருப்பலி (பாடசாலை சிற்றாலயம்)
- ★ மு.ப. 9.15 காலை உணவு ஒன்று கூடல்
- ★ மு.ப. 10.00 துடுப்பாட்டப் போட்டிகள்
- ★ பி.ப.3.30 உதைபந்தாட்டப் போட்டிகள்
- ★ பி.ப 5.00 கல்லூரி அதிபரின் தேநீர் விருந்து

- ★ 10.10.2004 (ஞாயிறு) பி.ப.5.00 மணி நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் கலை நிகழ்வுகளும்.
- ★ இரவு உணவு ஒன்றுகூடல்

நூறாவது ஆண்டை நிறைவு செய்யும் யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கத்தை வாழ்த்துகின்றோம்.

## பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

*59, St.Patrick's Road,*
*Jaffna.*
*Tel: 021 222 6148*

வர்த்தகம் ஊடான சமாதானத்திட்டம்

# தென்னாபிரிக்க வர்த்தகர் குழு அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரும்

வர்த்தகத்தின் ஊடான சமாதானம் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்னாபிரிக்க வர்த்தகர் குழு ஒன்று அடுத்தமாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றது.

'ஸ்ரீலங்கா யெஸ்ட்' என்ற அரசசார்பற்ற நிறுவனம் வர்த்தகத்தின் ஊடான சமாதானம் என்ற ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப படுத்திவருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த மே மாதம் யாழ். வர்த்தகர்கள் உட்பட 9பேர் கொண்ட குழு தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

அங்கு முன்னெடுக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் வர்த்தக [illegible] செயற்பாடுகள் தொடர்பாகவும் இக்குழு அங்கு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

இதன் தொடர்ச்சியாக தென்னாபிரிக்க வர்த்தகக் குழு ஒன்று அடுத்தமாதம் 27ஆம் திகதி இலங்கைக்கு வருகின்றது. டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வரை இக்குழு இலங்கையில் தங்கியிருக்கும்.

28ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் இக்குழு வர்த்தக சமூகத்துடன் கலந்துரையாடலை நடத்தும். அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச திணைக்களப் பிரதிநிதிகள் ஆகியோரையும் இக்குழு சந்திக்கும்.

மறுநாள் கிளிநொச்சிக்குச் செல்லும் இக்குழு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றது.

பின்னர் கொழும்பில் பலதரப்பட்டவர்களைச் சந்திக்கும் இக்குழு, சமாதான முன்னெடுப்புக்கள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடவிருக்கின்றது.

தென்னாபிரிக்காவில 94 ஆம் ஆண்டு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட சமயம் அதில் முக்கிய பங்குவகித்த ஒன்பது பேர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

வர்த்தகத் துறையில் ஈடுப[illegible] அதேசமயம் அரசியலிலும் முக்கிய பங்கை [illegible]கித்தவர்கள் இக்குழுவில் அங்கம் பெறுகின்றனர்.

கொலின் ஹேரால்மன், ஜோன் ஹேரால், நூலமேயர், ஹெயிட் ஒக்காவே, பிராங் ரைஸ் ஒலிவர் ஆகியோர் குழுவில் இடம்பெறும் முக்கியஸ்தவர்களாவர். (3)

## சித்தாலேப நிறுவனத்தின் கலந்துரையாடல் நாளை

'சித்தாலேப' தயாரிப்பாளர்களான ஹெற்றிக்கொட இன்டஸ்ரீஸ் நிர்வாகத்தினரும், அதன் வடபுல விநியோகத்தரான வனிக்கா மெடிக்கல் நிறுவனத்தினரும் இணைந்து நடத்தும் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு லொயலாஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சித்தாலேப நிறுவனத்தின் தலைவர் தேசபந்து, வைத்திய கலாநிதி விக்ரா ஹெற்றிக்கொட, 'வியாபாரத்தில் முன்னேறக் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கிய அணுகுமுறைகள்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.




மைக்ரோ பீ.சி. கணனி நிறுவனத்தினர் தமது கிளை அலுவலகம் ஒன்றை நெல்லியடியில் அண்மையில் திறந்துவைத்துள்ளனர். ஏசியன் கணனி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ். டி. ரொமேஷ் மங்கள விளக்கேற்றி கிளை அலுவலகத்தை ஆரம்பித்துவைத்தார். அருகில் மைக்ரோ பீ.சி. கணனி நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் எஸ். நந்தா காணப்படுகின்றார்.

யாழ். வணிகர் கழகத்தின்

# வேலைவாய்ப்பு மையத்தில் 1,000இற்கு மேற்பட்டோர் பதிவு

யாழ்.வணிகர் கழகம் ஆரம்பித்துள்ள வேலைவாய்ப்பு மையத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

குடாநாட்டில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் வேலைவாய்ப்பு மையம் ஒன்றை வணிகர் கழகம் ஆரம்பித்திருக்கின்றது.

பட்டதாரிகள் மற்றும் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்புக் கிடைக்கும் அதேநேரத்தில், கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதில்லை.

இதைக் கருத்தில் கொண்டு கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் வேலைவாய்ப்பு மையம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயிரத்து 200பேர் வேலைவாய்ப்புப் படிவங்களை இந்த மையத்தில் பெற்றுள்ளனர். ஆயிரம் பேர் விண்ணப்பங்களைக் கையளித்துள்ளனர்.

விண்ணப்பங்களைச் சமர்பித்தவர்களில் 60 சதவீதமானவர்கள் பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. அதேசமயம் வேலைக்கு ஆள்களைத் தரும்படி பல நிறுவனங்கள் வணிகர் கழகத்தைக் கேட்டுள்ளது.

விண்ணப்பித்தவர்களுக்கு வேலை வழங்கும் பணியை அடுத்த வாரங்களில் வணிகர் கழகம் ஆரம்பிக்கவிருக்கின்றது. (3)

# சீனா வர்த்தகக் கண்காட்சிக்கு 20 யாழ்.வணிகர் செல்கின்றனர்

சீனாவில் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள யாழ். வர்த்தகர் குழு சீனாவிற்கு செல்லவிருக்கின்றது.


குடாநாட்டைச் சேர்ந்த 20 வர்த்தகர்கள் இடம்பெறும் இக்குழு ஒருவாரம் சீனாவில் தங்கியிருக்கும்.

வர்த்தகத்துறையில் புதிய புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்துவரு[illegible] சீனா, தனது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்த இக் கண்காட்சியை ஏற்பாடுசெய்துள்ளது.

புதிய தொழில்நுட்பத்தை இங்கு அறிமுகம் செய்யும் நோக்குடனும் விலை குறைந்த பொருள்களை இங்கு விற்பனை செய்யும் நோக்குடனும் யாழ்.வர்த்தகர் குழு இக் கண்காட்சியில் பங்குபற்றுகின்றது.

கண்காட்சியில் சீன வர்த்தகர்களுடன் கலந்துரையாடி நேரடியாக அவர்களின் உற்பத்திப் பொருள்களை இங்கு இறக்குமதி செய்யும் வாய்ப்புக் குறித்து யாழ்.வர்த்தகர்கள் ஆராய்வர்.

யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் இக்குழு சீனா செல்கின்றது. வணிகர் கழகம் இத்தகைய ஓர் ஏற்பாட்டை முதல்தடவை இம்முறை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சிறார்களுக்கு கணனிக் கல்வி ஊட்ட பாலர்கல்வி மென்பொருள் அறிமுகம்

## 23வயது விரிவுரையாளர் சாதனை

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக தமிழ் மொழி மூல கணனி மென்பொருளை வெளியிட்டு வரும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கணனித துறை விரிவுரையாளருமான S.செல்வதாசனை அண்மையில் உதயன் சார்பில் சந்தித்தோம்.




மிக இளவயதில் கணனித்துறையில் பல்வேறு சாதனைகளைச் செய்யவேண்டும் என்ற துடிப்புடன் இயங்கிவருகின்ற அவர், குடாநாட்டுக் கணனித்துறை தொடர்பாகவும் தமது முயற்சிகள் தொடர்பாகவும் வழங்கிய கருத்துக்கள் செவ்வியாக இங்கே பிரசுரமாகின்றன.

*கே:* கணனித்துறையில் அதிக ஆர்வத்துடன செயற்பட்டு வருகின்ற நீங்கள் உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

*ப:* நான் மானிப்பாயை சொந்த இடமாகக் கொண்டவன். மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே க.பொ.த.உயர்தரம் கலைப்பிரிவிலே 2000ஆம் ஆண்டுவரை கற்று வெளியேறினேன். எனக்கு பல்கலைக்கழகத்திற்கு செல்லும்வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும் கூட கணனித்துறையில் கொண்ட ஆர்வம் காரணமாக அத்துறையிலே தீவிரமாக இறங்கிச் செயற்பட்டு வருகிறேன். மேலும் பல்கலைக்கழகத்தில் விசேட கணனி பொறியியல் கற்கைநெறி ஒன்றையும் பின்பற்றி வருகிறேன். தற்போது மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கணனித்துறை விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறேன். நான் இத்துறையில் இறங்குவதற்கு விரும்பியபோது எனது பெற்றோரும் அதற்கு உற்சாகம் அளித்தமையே எனது ஆர்வமும் அதிகரிக்கக் காரணமாய் இருந்தது.

*கே:* மழலைச் சிறார்களுக்கு ஆரம்பக் கலவியை ஊட்டப் பயன்படக் கூடிய பாலர்பள்ளி - 1 எனும் கணனிமென்பொருளைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறீர்கள் அந்த மென்பொருள் பற்றி....

*ப:* முன்பள்ளி மற்றும் பாலர்வகுப்பு சிறார்களுக்கு பயன்படக்கூடிய வகையிலே தமிழ் நெடுங்கணக்கு, சொல்லாக்கம் என்பவற்றைச் சிறுவர் இலகுவாகக் கற்றுக் கொள்ளக்கூடியதாக இம்மென்பொருளை உருவாக்கியிருக்கிறேன். அதிகளவு கணனி தொழில்நுட்பப் பிரயோகம் இன்றி "Mouse" ஐ மட்டுமே பயன்படுத்தி சிறார்கள் கற்கக்கூடியதாக இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்கள் விரும்பக்கூடியதாக அவர்களைக் கவரும் விலங்கு உருவங்கள் மூலமாகவே அவர்கள் மொழியினைக் கற்கக்கூடியதாக இம மென்பொருளைத் தயாரித்துஇருக்கிறேன். தற்போது 450/- இற்கு இம் மென்பொருளை விற்று வருகிறோம். யாழ்.மற்றும் வலிகாமம் வலய பாடசாலைகள் பலவற்றுக்கும் இம்மென்பொருளை வழங்கியுள்ளோம்.

*கே:* இம்மென்பொருளை உருவாக்கும் சிந்தனை அல்லது ஊக்கம் உங்களுக்கு எவ்வாறு உருவானது?

*ப:* வெளிநாடுகளில் வாழும் எம்முடைய தமிழ்ச் சிறார்கள் கணனிகளைப் பயன்படுத்தும் திறனைப் பெற்றிருந்தபோதும் எமது தாய்மொழியினைக் கற்கின்ற வாய்ப்புகள், வளங்கள் இல்லாததால் தாய்மொழியை மறந்துவிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பிறமொழிகளை அவர்கள் கற்கின்றபோதும் தாய்மொழியில் கற்பதற்கு எல்லாப் பெற்றோராலும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடிவதில்லை. எனவே, வீடுகளிலேயே பிள்ளைகள் தமது தாய்மொழியைக் கற்பதற்கு ஒரு மென்பொருளை உருவாக்கித் தாருங்களேன் என வெளிநாட்டிலிருந்து வந்த பலர் என்னிடம் கேட்டனர். அந்த வேண்டுகோளின் பலனே பாலர் பள்ளி என்ற மென்பொருளின் உருவாக்கத்திற்கு காரணம். இரண்டுமாத முயற்சியில் இந்த மென்பொருளை உருவாக்கினேன்.

*கே:* கணனித்துறையில் யாழ்ப்பாணத்தில் முதன முதலாக சாதனை ஒன்றை செய்திருக்கிறீகள. அந்தவகையில் யாழ்ப்பாணக் கணனித்துறையின நிலை எப்படி இருக்கிறது?

*ப:* யாழ்ப்பாணக் கணனித்துறையை சர்வதேச ரீதியாக ஒப்பிட்டுக் கருத்துக்கூற முடியாது. இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடும்போதே யாழ்ப்பாணம் கணனித்துறையில் மிகவும் பின் தங்கியுள்ளது என்றே கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் பலர் கணனித்துறையில் இப்போது ஈடுபடுகின்றபோதிலும் எவரும் கணனியில் முழுமையாகக் கற்று அதில் எதையாவது சாதிக்கவேண்டும் என்ற முனைப்புடன் கற்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் நுனிப்புல் மேய்ந்த மாதிரி கற்றுக்கொண்டு போகிறார்கள். சிலர் சில பகுதிகளை மாத்திரம் கற்றுவிட்டு தொழிலுக்காகப் பயன்படுத்துகிறார்கள். இன்றும் யாழ்ப்பாணம் கணனித்துறைசார் வல்லுநர்களை உருவாக்கும் நிலைக்கு உயரவில்லை என்றே கருதுகிறேன் கணனியைச் கற்க வேண்டும என்று கூறுகின்ற யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தை சார்ந்த பெரியார்கள் அதனை ஊக்குவிக்க இன்னும் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் எதனையுமே முன்வைக்கவில்லை. ஏன் என்னால் வழங்கப்பட்ட பாலர் பள்ளி என்ற கணனி மென்பொருள் கூட இன்னும் பல கணனி வளமுள்ள பாடசாலைகளுககுச் சென்று சேரவில்லை. கணனித்துறை வளர்ச்சி என்பது இங்கு பேச்சளவிலேயே உளளது. செயலளவிற்கு இன்னும் மாறவில்லை.



*கே:* 23 வயதேயான நீங்கள் கணனித்துறையில் இதுவரை சாதித்ததென்ன? இனிச் சாதிக்க நினைத்திருப்பதென்ன?

*ப:* கணனித்துறையில் எவ்வளவோ சாதிக்க முடியும். அதற்கு எல்லையில்லை. நான் இதுவரை இரண்டு கணனி வெளியீடுகளைச் செய்திருக்கிறேன். ஒன்று பாலர்பள்ளி மென்பொருள், மற்றையது கலைக்களஞ்சியத்தின் விஞ்ஞானத துறை சார்ந்த மனித உடலின் அமைப்பு என்று தமிழ்மொழி மூல இறுவட்டு ஒன்றையும் வெளியிட்டுள்ளேன். இது விஞ்ஞான மாணவர்களுக்கு அதிகம் பயன்பட்டுவருகிறது.

செவ்வி: ஆர். மார்க்அன்ரனி

தற்போது பாலர்பள்ளியின் அடுத்த கட்ட வெளியீட்டிற்கான முயற்சியிலும் தமிழ்மொழி வழிகாட்டலுடன் கூடிய ஆங்கிலமொழி கற்கைக்கு உதவும் மென்பொருளொன்றை ஆக்கும் முயற்சியிலும் இறங்கியிருக்கின்றேன்.

எனக்கு வெளிநாட்டு மோகம் என்பது இல்லை. எனது தாய்மண்ணிலிருந்தே கணனித துறையில் பல சாதனைகளைப் புரிய வேண்டுமென்பதே எனது அவா - என்றார்.

உயரவேண்டும் என்ற ஆவலுடன் உற்சாகமாகப் பணியாற்றிவரும் அந்த இளைஞரது கனவுகள் நனவாகவும் கணனித்துறையில் அவர் பல சாதனைகளை புரியவும் உதயன் சார்பில் வாழ்த்தி விடைபெற்றோம். அவருடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் SELVATHAS[illegible] yahoo.com. என்ற e-mail முகவரியு[illegible] தொடர்புகொள்ளலாம்.

# யாழ்.மாநகர வளாகப் பகுதியில் சூழல் திட்டமிடல் பிரிவுக்குக் கட்டடம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின் போது முற்றாக அழிக்கப்பட்ட மாநகர வளாகப்பகுதியில் சூழல் திட்டமிடல் முகாமைத் துவப் பிரிவுக்கான கட்டடம் நிறுவப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் மாநகரசபைக்கான கட டடம் அமைப்பதற்கு முன்னர் பல்வேறு முயற் சிகள் நடைபெற்றுவந்தன.

குறிப்பிட்ட பகுதியில் முன்னர் இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்குப் படையினரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், பொது மக்களின் எதிர்ப்பால் அந்த நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டன.

அதேபகுதியிலேயே இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் வைபவம் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி கே.குணராஜா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சின் மேலதிக செயலா ளர் எஸ்.குமாரதாஸன் அடிக்கல்லை நட்டு வைப்பார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் உட்படப் பலர் கலந்துகொள்ள வுள்ளனர். (எ-5)

# வருமானப் பரிசோதகர் சங்க புனரமைப்புக் கூட்டம் நடைபெற்றது

தென்மராட்சி,ஒக்.9

யாழ். மாவட்ட வருமான பரிசோதகர், வரு மான மேற்பார்வையாளர் சங்கப் புனரமைப்புக் கூட்டம் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட் டத்தினை அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு சம்மேளனம் ஒழுங்குசெய்திருந்தது.

சம்மேளனத்தின் வடக்கு - கிழக்கு இணைப் பாளர் எஸ்.சந்திரகுமார் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் சங்கத்தின் புதிய தலைவ ராக த.நிர்மலானந்தன் (வலி.தெற்கு பிரதேச சபை), செயலாளராக கொ.கிருஸ்ணகுமார் (வலி.வடக்கு பிரதேசசபை), பொருளாளராக கி.கொலின் தேவராசா (நல்லூர் பிரதேச சபை), ஆகியோரும் -

நிர்வாக சபை உறுப்பினர்களாக அ.வாம தேவா (பருத்தித்துறை நகரசபை), சொ.சிவ சுதன் (சாவகச்சேரி நகரசபை), ம.ஜெயகுல சிங்கம் (வலி.கிழக்கு பிரதேச சபை), கா.ஜெய ராசசிங்கம் (யாழ். மாநகரசபை), சி.ஹரிமுகன் (வலி.தென்மேற்கு பிரதேச சபை), கு.சண்முக ரத்தினம் (வலி.மேற்குப் பிரதேச சபை), சி. ஜெயகாந்தன் (வடம ராட்சி தெற்கு,மேற்கு பிரதேச சபை), வி.சிவ பாதசுந்தரம் (சாவகச் சேரி பிரதேச சபை) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் மாதாந தக்கூட்டம் ஒவ்வொரு பௌர்ணமி விடுமுறை தினத்தில் நடத்துவ தெனவும் தீர்மானிக் கப்பட்டது. (எ-117)


## பொன்விழா வாழ்த்து



வையத்துள் வாழ்வாங்கு வாழ் பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

என்ற வள்ளுவன் குறளுக் கிணங்க இல்லறவாழ்வு வாழ்ந்து இன்று (09.10.2004) சனிக்கிழமை இல்லறவாழ்வில் பொன்விழாக் காணும்

**திரு. சு.சின்னப்பு**
(இளைப்பாறிய ஆசிரியர்)
**திருமதி சி.விசாலாட்சி**
தம்பதிகளை

விளைவேலி விநாயகரின் அரு ளும், ஆசியும் பெற்று சீருஞ்சிறப்பு டன் வாழ்ந்து நூற்றாண்டு விழா வினைக் கண்டு இன்புற வாழ்த்து கின்றோம்.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரி.

கல்வயல்,
சாவகச்சேரி. (37341)(34-19-44)



## LONDON LANGUAGE SCHOOL

The School with golden touch

**Communication English**
(புதிய பிரிவுகள் ஆரம்பம்)
5 Months
Enrolment fee 2,500/=

**Presentation & Interview Skills**
(புதிய பிரிவுகள் ஆரம்பம்)
1 Month (16 hrs) 16.10.2004 - 3.30 p.m.
Enrolment fee 1,250/=

**TOEFL/IELTS**
(4 தனித் தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்கள் செய்முறை விளக்கப் பாடவிதானத்துடன்)
ஆரம்பம் 16.10.2004
Course Fee 6000/=
Duration - 3 Months

**French** வகுப்புகள்
Enrolment 2500/=
Duration 6 Months

**Secretarial Science (With Specialised lectures by foreign Staff)**
★ Admin. Asst. ★ Personal Asst.
★ Receptionist ★ Marketing Representatives
3 Months Enrolment fee 2500/=

தொடர்புகளுக்கு: 077-6176383, 0777 238605, 0777-222300, 077-6589372

774, Hospital Road, Jaffna.

Director,
(37310)(34-19) LONDON LANGUAGE SCHOOL, JAFFNA.


# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை களுக்கு இடையே நடைபெற்றுவரும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக் கிழமை பி.ப. 2.30 மணிமுதல் இடம்பெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

❖ நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானம்.

### 16 வயதுப் பிரிவு

★ உடுத்துறை ம.வி. எதிர் கம்பர் மலை அ.த.க.பாடசாலை.

★ நெல்லியடி ம.ம.வித்தியாலயம் எதிர் வல்வெட்டி இந்து த.க.பாடசாலை.

### 18 வயதுப் பிரிவு

★ நெல்லியடி ம.ம.வித்தியாலயம் எதிர் உடுத்துறை ம.வி.

▲ வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானம்.

### 16 வயதுப் பிரிவு

★ மணற்காடு அ.த.க.பாடசாலை எதிர் வல்வை சிதம்பராக் கல்லூரி.

★ பருத்தித்துறை வேலாயுதம் ம.வி. எதிர் இமையாணன் அ.த.க. பாடசாலை.

### 18 வயதுப் பிரிவு

★ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் மணற்காடு அ.த.க. பாடசாலை.

▲ பொம்மஸ் விளையாட்டுக்கழக மைதானம்.

★ ஹாட்லிக் கல்லூரி எதிர் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி.

★ கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை எதிர் வல்வை சிவகுரு வித்தியாலயம். (10-70)

## கூட்டம்

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழி யர் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில் உள்ள சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (10-203)

## அதிபராக நியமனம்

ஏழாலை மேற்கு புனித இசிதோர் வித்தி யாலயத்தின் அதிபராக மயிலணி சைவ மகா வித்தியாலய விவசாயப்பாட ஆசிரியர் க.பாலசுப் பிரமணியம இம்மாதம் முதல் நியமனம் செய் யப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையின் அதிபராக கடமையாற் றிய க.ஜெயராஜ் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து க.பாலசுப்பிரமணியம் அதிபராகப் பதவி ஏற்றுள்ளார். (10-152)

## கத்தோலிக்க திருமறைத் தேர்வு 16 ஆம் திகதி நடைபெறும்

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தால் எதிர் வரும் 23 ஆம் திகதி நடத்தப்படவிருந்த யாழ். மறைமாவட்ட கத்தோலிக்கத் திருமறைத் தேர்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர் வரும் 16 ஆம் திகதி நடைபெறும் என யாழ். மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட் பணி ஜோன் மௌலிஸ் அறிவித்துள்ளார். (10-202)

## எழுத்துத்தேர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.9

தமிழீழ வைப்ப கத்திற்கு உத்தி யோக உதவியாளர் தரம் 3 இற்கு ஆள் சேர்ப்பதற்கான எழுத் துத்தேர்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கிளி நொச்சி மகா வித்தி யாலயத்தில் நடை பெறவுள்ளது. (10-202)

## ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.9

உலக உளநல நாளை முன்னிட்டு சுக வாழ்வு நிலையத்தால் நடத்தப்படும் சிறுவர், பெற்றோர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புத்தூர் மெதடிஸ்த த.க.பாடசாலை, நீர்வேலி வேத வல்லி மாதர்சங்கம், நீர்வேலி சுவர்ணா ச.ச. நிலையம், இருபாலை சுவர்ணா ச.ச.நிலையம் மற்றும் உரும்பிராய் சந்திரோதயா வித்தி யாலயம் ஆகிய இடங்களில் நடைபெறவுள் ளது. (10-202)

## மணல் விநியோகம் இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஒக்.9

வடமராட்சி கிழக்கு, புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்த மணலவிநியோகம் இன்று சனிக்கிழமை மீண் டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

7ஆம், 9ஆம் திகதியிடப்பட்டவர்களுக்கு இன்றும், 8 ஆம் திகதியிடப்பட்டவர்களுக்கு நாளையும் மணல்விநியோகம் இடம்பெறுமென வும் -

நிறுவனங்கள், ஒப்பந்தகாரர்கள், ஆலயங் கள் என்பவற்றுக்கு வழமைபோல திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் விநியோகம் நடைபெறும் எனவும் நிர்வாகத்தினர் அறிவித் துள்ளனர். (10-202)

## வீடமைப்புத் திட்டத்தை அதிகாரிகள் பார்வையிட்டனர்

தென்மராட்சி,ஒக்.9

தென்மராட்சி தெறகு கோவிலாக்கண்டி கைதடி - நாவற்குழி ஆகிய பகுதிகளில் மேற் கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டத்தினை உலக வங்கி அதிகாரிகள் கடந்த புதனன்று பார்வையிட்டனர்.

பின்னர் கோவிலாக்கண்டியில் பயனாளி களுடனான சந்திப்பிலும் அவர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கட்ட டப்பொருள்களின் விலைகள் அடிக்கடி உயர்ந்து செல்வதால் வங்கியினால் ஒதுக்கப் பட்ட ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் வீட்டுவேலைகளைப் பூர்த்திசெய்யமுடியாத நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் -

திட்டத்தில் குறிப்பிட்டுள்ள மலகூட அமைப் பிற்கு நிதியுதவி வழங்குமாறும் பயனாளிகள் உலகவஙகி அதிகாரிகளைக் கேட்டுக்கொண்ட னர்.

இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்வ தாக அதிகாரிகள் தெரிவித்ததாகக் கூறப்பட் டது.

இவ்விரு பிரிவுகளிலும் ஐம்பது வீடுகள் அமைக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வீட்டுத் திட்டத்திற்கு இருகட்டங் களாகப் பணம் வழஙகப்பட்டமை தெரிநததே. (எ-117)


## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில் 12 – 12 – 1949



ஆண்டவன் அடியில் 17 – 09 – 2004

அமரர் **கனகரத்தினம் கருணாநிதி**

(முன்னாள் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து லிமிற்றெட் உத்தியோகத்தர்)

கருணாநிதியாக பண்பில் சிகரமாக நின்று
எம்மைக் காத்து வழி நடத்திய குடும்ப விளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று(09.10.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

கனகசபாபதி ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். - குடும்பத்தினர்
(37342)(42-34-19-44)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 26 – 12 – 1986



இறைவன் அடியில் 26 – 08 – 2004

செல்வன் **சிவராசா ஜெயதாஸ்**

அன்புடன் பழகி ஆதரவாய்ப் பேசி பண்புடன் வாழ்ந்த
எங்கள் அன்புச் செல்வமே! நீ மறைந்து எத்தனை
ஆண்டுகள் கடந்தாலும் உன்னை மறக்கவே மாட்டோம்.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.


இன்று (09.10.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுளள அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. (37292)(43-34-44-19)
ந.சிவராசா,
சி.நாகமணி.

# 'ஒருவர் மனதை ஒருவர் அறிய உதவும் சேவை இது....'

**சர்வதேச அஞ்சல் தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை வெளியிடப்படுகின்றது.**

உலகில் உள்ள எல்லா நாட்டு மக்களும் எல்லாவித பேதங்களுக்கும் அப்பாற்பட்டு நினைவுகூருகின்ற இன்றைய 'சர்வதேச அஞ்சல் தினம்', சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தின் 130 ஆவது அகவை நினைவுறுத்தலைக் குறிப்பிடுவதுடன் ஒன்றியத்தினை நினைவுகூரும் பொருட்டு பிரகடனப்படுத்தப்பட்ட 35 ஆவது



உலக அஞ்சல் தினக்கொண்டாட்டமுமாகும்.

விஞ்ஞான, தொழில்நுட்ப, இலத்திரனியல் ஆகியவற்றின் அதீத முன்னேற்றம் காரணமாக பல்வேறு வகையான தொடர்பாடல் வசதிகள் கிடைத்துள்ளபோதும் பின்வரும் முக்கிய காரணிகளினால் அஞ்சலின் முக்கியத்துவத்தினை உணரமுடியும்

(அ) அதி உச்ச இரகசியம் பேணப்படுதல்.

(ஆ) குறைந்த கட்டணத்தில் அஞ்சற்சேவையினைப் பெற்றுக்கொள்ளுதல்.

(இ) அஞ்சல் சேவையானது உலகின் மூலைமுடுக்கு எல்லாம் வியாபித்துள்ளமை.

(ஈ) அனுப்புவருக்கும், பெறுநருக்குமிடையில் ஓர் அபூர்வமான மன உணர்வினை (Sentimental) ஏற்படுத்துதல். உதாரணமாக ஒருவர் தனது அன்புக்கு உரியவர்களிடமிருந்து கடிதங்களைப் பெறும்போது எழுத்துக்களைப் பார்த்துப் படிக்கும்போது அவர்களின் மனதில் அளவிலா ஆனந்தத்தினை ஏற்படுத்தும்.

இது எல்லா வகையான உணர்வுகளுக்கும் பொருந்தும். ஏனைய தொடர்புமுறைகளில் இந்த வாய்ப்புக் கிடையாது.

**சர்வதேச அஞ்சல் ஒன்றியம்**

ஆஸ்திரியா, கங்கேரி, பெல்ஜியம், டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி, பெரிய பிரித்தானியா, கிறீஸ், இத்தாலி, லக்ஸ்சம்பேர்க், நெதர்லாந்து, நோர்வே, போர்த்துக்கல், ரோமேனியா, ரஷ்யா, சோபியா, ஸ்பெயின், சுவீடன், சுவிற்சர்லாந்து, துருக்கி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய இருபத்திரண்டு நாடுகள் 1874 ஆம் வருடம் ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதி கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பயனாக 'பொதுஅஞ்சல் ஒன்றியம்' என்ற பெயருடன் உருவாக்கம் பெற்று 1878 ஆம் ஆண்டு 'பாரீஸ்' நகரத்தில் நடைபெற்ற மகா நாட்டில் 'சர்வதேச அஞ்சல் ஒன்றியம்' எனப் பெயர் மாற்றம்செய்யப்பட்டது. எனவே, சர்வ தேச அஞ்சல் சங்கத்தின் 130 ஆவது வருட நிறைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒன்றியம் அமைக்கப்பட்டதற்கான நோக்கத்திற்கு இணங்க, உறுப்பு நாடுகள் அனைத்தும் அஞ்சற் பொருள்களை பரஸ்பர நம்பிக்கையுடன் கையாளுவதன் பொருட்டு சர்வதேசங்களும் ஓர் அஞ்சல் வலயமாகக் கருதப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தத்துவமானது உலகளாவிய ரீதியில் சுதந்திரமான அஞ்சல் போக்குவரத்துக்கு வழி சமைப்பதுடன், ஓர் அஞ்சல் நிர்வாகத்தினால் இன்னொரு அஞ்சல் நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் அஞ்சல் பொருள்கள் இடைநிலை அஞ்சல் நிர்வாகத்தினால் பொறுப்புடன் கையாளப்படுகின்றமையினை உறுதிப்படுத்துகின்றது. சேவையினை இயக்குவதற்குத் தேவையான மற்றைய அடிப்படைத் தத்துவமானது அஞ்சல் பொருள்களின் நியமநிறை விகிதத்திற்கேற்ப அஞ்சல் கட்டணத்தினை நிர்ணயம் செய்தல் 1875 தொடக்கம் 1971 வரையான காலப்பகுதியில் அஞ்சல் பொருள்களை அனுப்பும் மூல நிர்வாகங்களே பெறப்படும் கட்டணங்களை தமக்குரியதாக்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் விநியோகத்தினை மேற்கொள்ளும் அஞ்சல் நிர்வாகத்திற்கு வேதனம் எதுவும் கிடைப்பதில்லை. ஆயினும் 1969 இல் டோக்கியோ நாட்டில் இடம்பெற்ற மாநாட்டுத் தீர்மானம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதாவது, குறிப்பிட்ட ஓர் அஞ்சல் நிர்வாகம் (நாடு) இன்னொரு அஞ்சல் நிர்வாகத்திற்கு (வேறொரு நாட்டிற்கு) அனுப்பும் அஞ்சல் பொருள்களின் நிறைக்கு அந்நாட்டிலிருந்து முதற்குறிப்பிட்ட நாட்டிற்கு அனுப்பப்படும் அஞ்சல் பொருள்களின் நிறைக்கு உள்ள வித்தியாசம் கணக்கிடப்பட்டு கூடுதலான அஞ்சற் பொருள்களை அனுப்பிய நாடு, மற்றைய நாட்டிற்கு ஒன்றியத்தினால் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கிணங்க நட்டஈட்டுத் தொகையினை வழங்குதல்வேண்டும்.

இருபத்திரண்டு நாடுகளின் உறுப்புரிமையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியமானது இன்று 189 நாடுகளின் உறுப்புரிமையை கொண்டுள்ளது. இலங்கை குடியேற்ற ஆட்சி முறையின் கீழ் 01.04.1877 இலும் பின்னர் 13.07.1949இல் குடியரசு நாடாகவும் ஒன்றியத்தில் இணைந்துள்ளது.

புராதன காலத்தில் அரசர்களிடையே தூதுவர் மூலம் செய்திப் பரிமாற்றங்கள் இடம்பெற்றதாக கூறப்பட்ட போது போர்த்துக்கேயர் ஆட்சியில் (1517 - 1640), ஒல்லாந்தர் ஆட்சியில் (1640 - 1794) ஆங்கிலேயர் ஆட்சியின் போதும் 1815 வரை அஞ்சல் சேவை நடைபெற்றதற்கான பதிவுக் குறிப்புக்கள் கிடைக்கக்கூடியதாக இல்லை. 1815 இல் முதன்முதலாக ஆறு அஞ்சல் அலுவலகங்கள் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டது. 1872.08.22 இல் முதன் முதலில் அஞ்சலட்டை அறிமுகமானது. 1893.02.01 இல் முதலாவது அஞ்சல் முத்திரை இலங்கை நாணயத்தில் வெளியிடப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் அஞ்சல் முத்திரையினை உலகிற்கு அறிமுகஞ்செய்த சேர் ரோலண்ட் உறில் (Sir Rowland Hill) அவர்களை நினைவுகூர்வது சாலப் பொருத்தமானது. 1795 இல் இங்கிலாந்தில் பிறந்த இவர் 1833 வரை ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரது அயரா முயற்சியினால் உலகின் முதலாவது அஞ்சல் முத்திரை 06.05.1840 இல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. "பென்னிபிளாக்" என அழைக்கப்பட்ட இம்முத்திரை விக்டோரியா மகாராணியின் உருவப்படத்தினையும் Postage Onepenny என்ற பதங்களையும் மட்டுமே கொண்டிருந்தது. அது உலகின் முதல் முதத்ரை என்ற காரணத்தினால் வெளியிடும் நாட்டின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

அஞ்சல் முத்திரையினை அறிமுகஞ்செய்தமைக்காக இவருககு 1860 இல் சேர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் இன்றும் இவரது பெயர் உலகம் பூராவும் நினைவுகூரப்படுகின்றது. ★

**தொகுப்பு: அம்பலவாணர் துரைசிங்கம்**

## இலங்கை அஞ்சல் சேவை வரலாறும் ஆண்டுகளும்

1796 - முதல் ஐந்து தொடர்பாடல் நிலையங்கள் திறக்கப்பட்டன.
1799 - தபால் பிரமாணங்களும் கட்டணங்களும் அறிமுகம்.
1802 - முதல் வர்த்தமானப் பத்திரிகை (Gazette) வெளியீடு.
1815 - முதல் ஆறு அஞ்சலகங்களின் தோற்றம்.
1832 - ஆசியாவிலேயே முதன்முதலாக குதிரை வண்டி மூலம் தபால்சேவை பயன்படுத்தப்பட்டது.
1850 - கொழும்புக்கும் - காலிக்குமிடையில் புறாமூலம் செய்திப் பரிவர்த்தனை அறிமுகம்.
1857 - முதன்முதலாக (6 பென்னி) முத்திரை வெளியீடு.
1865 - கொழும்பு - அம்பேபுஸ்ஸ புகையிரத அஞ்சல் சேவை ஆரம்பம்.
1867 - தனியார் தபால் பை, தபால்பெட்டி சேவை அறிமுகம்.
1872 - அஞ்சலட்டை வெளியீடு.
1873 - முதன்முதலாக காசுக்கட்டளைச் சேவை ஐக்கியராச்சியத்துக்கு ஆரம்பம்.
1877 - உள்நாட்டுக் காசுக்கட்டளைச் சேவை ஆரம்பம்.
1858 - கொழும்பு - கண்டி முதல் தந்தி மார்க்கம் அமைக்கப்பட்டது.
1859 - மோஸ் சமிக்கைமுறை (Morse Cord System) அறிமுகம்.
1895 - கொழும்பு பிரதம அஞ்சலகம் திறக்கப்பட்டது.
1899 - மோட்டார் வண்டித் தபால் சேவை ஆரம்பம்.
1909 - கொழும்பு - இந்தியா தந்திக் காசுக்கட்டளைச் சேவை ஆரம்பம்.
1921 - முதன்முதல் ஆறு உபஅஞ்சல் அலுவலகங்கள் திறக்கப்பட்டன.
1928 - முதலாவது வான் கடிதம் அனுப்பியமை (கொழும்பு - மார்செயில்ஸ்).
1936 - அஞ்சல் அறிமுக அட்டை விநியோகம் ஆரம்பம்.
1939 - கொழும்பு - ஹற்றன் தொலையச்சுக் கருவி இணைப்பு (Greed).
1947 - பொதுஜன மாதாந்த உதவிப்படி கொடுப்பனவு அஞ்சலகங்களில் ஆரம்பம்.
1947 - அஞ்சலதிபதியாக இலங்கையர் ஒருவர் நியமிக்கப்பட்டமை.
1949 - அரச சேவகர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அஞ்சலகங்களில் ஆரம்பம்.
1949 - அகில தேச சங்கத்தில் சுதந்திர குடியாட்சி நாடாகச் சேர்ந்தமை.
1949 - கொழும்பு - யாழ்ப்பாணம் வான் கடிதச்சேவை ஆரம்பம் (Air).
1958 - சிங்கள எழுத்துக்களுடன் கூடிய முதல் முத்திரை வெளியிடப்பட்டமை.
1958 - இலங்கை பஸ்சேவை மூலம் தபால் பரிமாற்றம் ஆரம்பம்.
1967 - முத்திரைப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டது.
1967 - முதலாவது முத்திரைக் கண்காட்சி நடத்தப்பட்டது.
1972 - தேசிய சேமிப்பு வங்கி நிறுவப்பட்டது.
1975 - அஞ்சலதிபர் கட்டாய பயிற்சி ஒருவருடமாக்கப்பட்டது.
1979 - முதலாவது பிராந்திய தபால் தரம் பிரிக்கும் நிலையம் இரத்தினபுரியில் அமைக்கப்பட்டது. (RMSC).
1980 - அஞ்சல் திணைக்களம், தந்தித் திணைக்களம் எனப் பிரிக்கப்பட்டமை.
1981 - முதலாவது முகவர் அஞ்சலகம் பொறளையில் ஆரம்பம் (Radio Electrones).
1989 - சர்வதேச விரைவுத் தபால் சேவை (Ems) ஆரம்பம்.
1990 - உள்நாட்டு அதிவேக தபால்சேவை (Speed Post) ஆரம்பம்.
1992 - தபால் தொலைநகல் சேவை (Post Fax) ஆரம்பம்.
1992 - அஞ்சல் திணைக்களம் மாகாண மட்டத்தில் பரவலாக்கப்பட்டமை.
1992 - போட்டிப்பரீட்சை மூலம் பெண்களும் அஞ்சலதிபர்களாக நியமிக்கப்பட்டமை.
1994 - கொழும்புக்கு வெளியே வெளிநாட்டுப் பொதி ஒப்படைப்பு அலுவலகம் நிறுவப்பட்டமை.
1996 - கிராமிய முகவர் அஞ்சலகம் ஆரம்பம்.
1997 - அஞ்சல் குறியீட்டு எண் அறிமுகம் (Post Code)
1997 - தொகைத் தபால் சேகரித்தல், ஒப்படைத்தல் சேவை ஆரம்பம்(Bulk Mail).
1997 - இலங்கை அஞ்சலுக்கு மின்னஞ்சல் இணையச் சேவைகளை லங்கா இன்ரநெற் தாபனம் வழங்கியமை

**தொகுப்பு: எஸ்.அருணாச்சலம் (ஓய்வுபெற்ற அஞ்சலதிபர்.)**

# எவராலும் உடைக்கமுடியாத அளவுக்கு தேசியப் பலம் வலுவடைந்துவிட்டது!



## சிறுவர், முதியோர்தின விழாவில் செம்மணன் உரை

வலி.கிழக்கு,ஒக்.9

எமது தேசிய பலத்தை யாராலும் உடைக்க முடியாது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன்.

நேற்றுமுன்தினம் 7 ஆம் திகதி .கோப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்ட பத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச முதியோர், சிறுவர் தின கௌரவிப்பு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அசாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - எமது தேசிய படைப்பலத்தையும், அரசியல் பலத்தையும் உடைப்பதற்கு அரசியல்வாதிகளும், இராணுவம், புலனாய்வுப் பிரிவுகளும், சகல முயற்சிகளையும் மேற்கொண்டனர் - மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் எமது போராட்ட வரலாற்றில் அவர்கள் அதில் தோல்வியைத்தான் கண்டனர். இனியும் தோல்வியைத்தான் அடைவார்கள் - ஏனென்றால் எமது தலைவர் உறுதியோடு எடுக்கும் நடவடிக்கையே அதற்குக் காரணம்.

அரசியல் ரீதியாக ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் உலக நாடுகளுக்குச் சென்று எமது இயக்கம் மீது அப்பட்டமான பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார். புலிகள் பேச்சுக்கு வரப் பின் .நிற்கின்றார்கள், சிறுவர்களை இயக்கத்தில் இணைக்கின்றார்கள் என்று பொய்ப்பிரசாரங்கள் முடுக்கிவிடப்படுகின்றன.

அதற்கு பதிலடி கொடுக்க எமது தலைவர் சர்வதேச மட்டத்திலும் எமது உண்மையான நிலைபபாட்டை விளக்க அரசியல் குழுக்களை அங்கு அனுப்பிவருகின்றார். இராணுவ ரீதியாகவும் புலிகளை ஒழிக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தக்க பதிலடிகொடுக்கப்படுகின்றது. இன்று தமிழர் சேனை அரசுடன் சமாந்தரமான அரசியல், இராணுவ பலத்துடன் இருப்பதை உலகமே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

முதியோர், சிறுவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அனைவரும் அக்கறையுடன் செயற்படவேண்டும். உக்கிரமான யுத்த கால கட்டத்தில் கூட எமது சிறுவர்களின் நலன்களைப் பேணும் பொருட்டு எமது [illegible] மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர். [illegible] ளது நலன்களைக் காப்பதற்காக எமது இயக்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

சிறுவர்கள் எதிர்காலத்தின் மிகப்பெரிய சொத்து அவர்களைக் கல்வி ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதுகாக்கும் பொறுப்பு எமது சமூகத்துக்கு உண்டு என்றார்.

**உதயனுக்குப் புகழாரம்**

வைத்திய கலாநிதி வை.தியாகராசா தனது உரையில் - தெரிவித்ததாவது.

கோப்பாயில் வயதில் கூடியவராக இனம் காணப்பட்ட வள்ளியம்மைப்பிள்ளை (103 வயது) என்பவரை அந்த அயலில் உள்ளவர்களுக்கே தெரியாது ஆனால், உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்திக்கட்டுரை மூலமே அதனை விபரமாக எல்லோரும் அறியமுடிந்தது. முதியோரைக் கௌரவித்து அதனை முதன்மைப் படுத்தி இந்தக் கட்டுரை வந்தது. இதற்கு உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு அனைவரும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும். என்றார்.

இன்றைய சிறுவர்கள் பெரியோர்களுக்கு மதிப்பளித்து அவர்களது சொல்லின்படி நடக்கத்தவறிவிடும் நிலை கவலை தருகின்றது.

இதனைச் சிறுவர்கள் மாற்றி அமைக்க வேண்டும். முதியோர்கள் சிறுவர்களது வழிகாட்டியாகத் திகழ்ந்தால் எதிர்கால சந்ததி கல்வியிலும் உளரீதியிலும் மேம்பட்டதாக அமையும் என்றார்.

தொடர்ந்து வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் - ஆர்.இராசதுரை, கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்- இ.சிவஞானசுந்தரம், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கோப்பாய் அரிமாக் கழகத் தலைவர் . ஜி.ரி.ஞானசேகரவேல், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் - திருமதி எஸ்.சிவராசா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து வயதில் மூத்த மூதாட்டி வள்ளியம்மைக்கு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

வயதான மூதாட்டி மேடைக்கு வரும்போது சிறுவர்கள், பெரியோர்கள் அவருக்கு எழுந்து நின்று வாழ்த்துத் தெரிவித்ததுடன் அவரைப் பார்ப்பதற்கு முண்டி அடித்தனர்.

இறுதியாக ஏனைய முதியோர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும், 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற 42 மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், முதியோர், சிறுவர் தினக் கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும், பாடசாலை மாணவர்களது கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (4-180)

# அரிசி இறக்குமதி டிசெம்பர் 31 வரையே; அதுவும் ஒன்றரை லட்சம் தொன் மட்டுமே!

## அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே தகவல்

கொழும்பு,ஒக்.9

தற்பொழுது இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அரிசியின் அளவு ஒன்றரை லட்சம் தொன்னாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அளவுக்கு அதிகமாக அரிசியை இறக்குமதி செய்யத் தனியார் அரிசி இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ்வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் தனியார் அரிசி இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி இரத்துச் செய்யப்பட்டுவிடும்.

- இவ்வாறு தெரிவித்தார் வர்த்தக, வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே.

மட்டு. - அம்பாறை அரிசி ஆலைகளை நவீன மயப்படுத்தக்கோரும் மட்டு - அம்பாறை அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளேக்குமிடையில் நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள ரக்ஷண மந்திரவில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை ஒரு கிலோ சம்பா அரிசியை 35 ரூபாவாகவும், நாட்டரிசியை 28 ரூபாவாகவும், பச்சை அரிசியை 28 ரூபா 50 சதமாகவும் சில்லறை விலையில் விற்கும் திட்டத்தின் கீழ் நாம் ஒன்றரை லட்சம் தொன் அரிசியைக் கொள்வனவு செய்ய முடிவுசெய்துள்ளோம். ஆகையினால், அரிசி இறக்குமதியாளர்கள் மீண்டும் அரிசி விலையேற்றம் வரும் என நினைத்து அரிசியைப் பதுக்கிவைக்க முடியாது.

முதற்கட்டமாக இந்தியாவில் இருந்து 24 ஆயிரம் தொன் அரிசியும், பாகிஸ்தானில் இருந்து நாலாயிரம் தொன் அரிசியும் இறக்குமதி செய்யப்படுகின்றன. டிசெம்பர் 31ஆம் திகதி வரை அரிசி இறக்குமதி தொடரும் - என அமைச்சர் மேலும் கூறினார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மட்டு - அம்பாறை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் அங்கு கூறியதாவது -

எல்லாக் காலங்களிலும் ஒரு கிலோ நெல் 16 ரூபா 66 சதத்துக்கு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விற்கப்பட்டால் அதேபோல் எல்லாக் காலங்களிலும் ஒரு கிலோ பச்சை அரிசியை 26 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாட்டரிசியை 21 ரூபாவுக்கும் சந்தைக்கு அரிசி ஆலை உரிமையாளர்களால் வழங்கமுடியும்.

அதேவேளை, தற்பொழுது கையிருப்பிலுள்ள அரிசியை அரசால் அறிவிக்கப்பட்டுள்ள - குறைக்கப்பட்டுள்ள - விலைக்கு விற்கமுடியாது. பச்சை அரிசி மாத்திரம் ஒரு கிலோ 28 ரூபா 50 சதமாக சில்லறை விலைக்கு விற்க முடியும் - எனத் தெரிவித்தனர்.

(எ-க)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### VACANCY

Applications are invited by me up to 12th November 2004, from suitable candidates for the post of University Medical Officer.

Salary Scale: Rs. 12750-2x375:8x415:10x525-22070/- p.m. (In addition the allowances approved by the University Grants Commission)

Qualifications: Medical Degree of a recognised University with at least 3 years experience as Medical Practitioner.

Age: Not more than 45 years

Selection: By Interview

STATUTORY BENEFITS:

I. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System,

II Gratuity payments.

III. Employment Trust Fund benefits

IV. Free medical services.

Applications should be made on the forms available in the office of the Assistant Registrar / Establishments of this University on a payment of Rs.20/= for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff 's Counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.20/- in the name of the Bursar, University of Jaffna, together with a self addressed Rs.4.50 stamped envelope of 23x10cm, in size. Applications sent on specified forms will only be accepted.

Applicants from Government Departments/State Corporations and Statutory Bodies should apply through their appointing authority. Age limit is not applicable to those who are in service. Applications also may be considered on Contract Basis or Part Time (Visiting), considering the educational qualifications, service and experience.

Applications received after the closing date will be rejected without intimation.

REGISTRAR,
University of Jaffna,
Sri Lanka.
2004.10.07


## வதிவிடப் பயிற்சி வகுப்பு

வடக்கு - கிழக்கு மாகாண பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கான மூன்றுநாள் வதிவிடப் பயிற்சி வகுப்பு அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றது.

மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தினால் பங்குபற்றுதலுடனான கருத்திட்ட முகாமைத்துவம் பற்றி பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(எ-117)


## தவறிவிட்டது

நாகலிங்கம் ஜெயகுமார் என்பவரது மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், TAX (வரிப் பத்திரம்), சாரதி அனுமதிப்பத்திரம் (வெளிநாட்டு சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட) கடந்த 04.10.2004 அன்று இருபாலைக்கும் அளவெட்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 077 6407699 எனும் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (37331)

## சாரதி பயிற்றுநர் தேவை

எமது சாரதிப் பயிற்சிப் பாடசாலைக்கு சாரதிப் பயிற்றுநர் தேவை. தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஒரு நாள் சம்பளம் 500/-
தொடர்பு: 0777 761576

சிற்றி டிறைவிங் ஸ்கூல்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6 (37204)

## தேவை

எமது கழகத்துக்கு G.C.E.A/L படித்த பெண் உதவியாளர்கள் தேவை. உடன் நேரில் வரவும். ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
தொடர்பு: ஞானக்குழந்தை கல்விக்கழகம்,
இல.19, சிவன் வீதி,
திருநெல்வேலி.
(37317)(39)

## OBTAIN A DEGREE
to make a career in Australia

அவுஸ்திரேலியாவில் கற்கைநெறிகளை மேற்கொள்ள
பட்டம் பெறுங்கள்

Obtain a Bachelor or a Postgraduate degree from a " TOP" University, if you are looking for a career in Australia. The University you graduate from is all important to future career prospects in Australia.

**We now represent 10 Australian Universities (of which 5 are Go8) in 5 States & ACT**

University of Newcastle
University of South Australia
Flinders University of South Australia
Edith Cowan University
Swinburne University
* University of Melbourne
* University of Sydney
* University of Adelaide
* Australian National University, Canberra
* University of Queensland

* "Go8" Universities

Apply now for Feb 2005 intake

edlocate
EDUCATION AUSTRALIA

Contact Representative
Mr. S. Pathmanathan
"Eraham" Potpathy Road, Kokuvil.
Tel : 0777 252204
E-mail : sopa1404@yahoo.co.uk


## வாள்வெட்டில் ஒருவர் காயம்

கோண்டாவில் - இணுவில் பகுதியில் இரண்டு இளைஞர் குழுக்களிடையே இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்கானார்.

கடந்த புதனிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோண்டாவில் பாரதி வீதியைச் சேர்ந்த சற்குணராஜா சுசீலன் (வயது-22) என்பவரே கழுத்துப் பகுதியில் வெட்டுக் காயத்துக்கு உள்ளானார். இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எ-49)

## மனித உரிமைகள் பிரகடனத்தை மதித்து நடப்பதில் புலிகள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும்

### மனித உரிமைகள் அமைப்புக்கள் அறிக்கை

ஜெனீவா,ஒக்.9

சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களை மதித்து நடப்பதில் தமக்குள்ள அர்ப்பணிப்பை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தவேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, யூரிகளுக்கான சர்வதேச ஆணைக்குழு போன்ற மனித உரிமை அமைப்புகள் இணைந்து, நேற்றுமுன்தினம் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. ஜெனீவா சென்றுள்ள புலிகளின் அரசியல் விவகாரக் குழு உறுப்பினர்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை அந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். அதன்பின்னரே, இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கடும் தொனியில் அந்த அறிக்கை அமைந்துள்ளது.

கொலைகளை முடிவுக்குக் கொண்டுவருமாறும், சிறுவர்களைப் படையில் சேர்ப்பதை நிறுத்துமாறும் தாம் விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்தன என்றும் அந்த அமைப்புகள் தெரிவித்தன.

"இலங்கையர்கள் அனைவரினதும் உயிர்களுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதற்குப் புலிகளுக்கு உள்ள அர்ப்பணிப்பையும் ஆற்றலையும் உலகுக்கு வெளிப்படுத்துமாறு அவர்களின் மூத்த தலைவர்களிடம் கேட்டுள்ளோம் என்று யூரிகளுக்கான சர்வதேச அமைப்பின் செயலாளர் நாயகம் நிக்கொலஸ் ஹெவென் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானம் என்பன தொடர்பாகச் சர்வதேச கட்டுப்பாடுகளை நடைமுறைச் சாத்தியமான வழிகளில் அவர்கள் செயற்படுத்துவதை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அறிக்கை குறித்து விடுதலைப் புலிகளின் கருத்து உடனடியாக வெளியாகவில்லை. ஆனால், தம் மீதான கொலைக் குற்றச்சாட்டுக்களைத் தமிழ்ச்செல்வன் மறுத்தார் என்றும் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாகவுள்ள கொலைகளை நிறுத்துவதற்கான நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவதில் தாம் கவனம் செலுத்துவோம் என்று அவர் குறிப்பிட்டார் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பதில் மீண்டும் கவனம் செலுத்தவேண்டும் என்று புலிகளிடம் தாம் வலியுறுத்தின எனவும் மனித உரிமைகள் அமைப்புக்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அச்சமூட்டும் நிலைமை காணப்படுவதால் இலங்கை இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வைக்காணும் முயற்சிகள் கடினமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்று சர்தேச மன்னிப்புச் சபையின் ஜெனீவாப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(எ-க)


## ஞானக்குழந்தை கல்விக் கழகம்
இல.19,சிவன் வீதி.
திருநெல்வேலி.

- 2005 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை வகுப்பு இன்று (09.10.2004) சனிக்கிழமை ஆரம்பமாகும்.
- 2004ஆம் ஆண்டில் தரம் 5 இல் சித்திபெற்ற மாணவர்களுக்கான ஆங்கிலமொழி (ENGLISH MEDIUM) மூலமான கற்கைநெறிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு இன்று (09.10.2004) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆம்பமாகும்.

தரம் 1 தொடக்கம் சகல வகுப்புகளுக்கும் பிரத்தியேகமாக ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றது.

(37319)(39-29-14-17) -இயக்குநர்.


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
29
~
12
~
1945



விண்ணில்
06
~
10
~
1999

### அமரர் இளையதம்பி மயில்வாகனம்
(லொறி உரிமையாளர்)

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறுமோ எம்துயரம்,
மீண்டும் எப்போது அப்பா
உங்கள் அன்பு முகம் காண்போம்?
ஆலமரமது போல் நிழல் தந்த அப்பாவே!
அலைமோதி கரை ஒதுங்கி கலங்கித் தவிக்கின்றோம்
அரவணைக்க நீங்கள் வரும் நாள் எந்நாளோ?
உங்கள் ஆத்மா
சாந்திபெறப் பிரார்த்திக்கும்:

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (37315)(39-29-14-17)
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# அன்று புரட்சிக்காக அ.அட்டையைப் பறித்தோர் இன்று தேர்தலுக்காக அதைக் கோருகின்றனர்!

## நொந்துகின்றார் ராஜித

நாட்டுக்கு அதிமுக்கியம் எனக் கருதப்படும் சமாதானப் பேச்சுக்களையும், இன்று மக்களை வாட்டுகின்ற விலைவாசி உயர்வையும் புறந்தள்ளிவிட்டு, அவசர அவசரமாக அடையாள அட்டைச் சட்டத்தை மட்டும் கொண்டுவருவதற்கு இந்த அரசு காட்டும் கரிசனை எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றில் தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பியான ராஜித சேனரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்த நாட்டிலே அடையாள அட்டைகள் காணாமற்போன சம்பவங்களில் 40 வீதமானவற்றுக்குக் காரணமானவர்கள் இன்று இந்த அதியுயர் சபையிலே அடையாள அட்டையின் பெறுமதி குறித்துப் பேசுகின்றார்கள்.

இந்த ஜே.வி.பியினரால் அபகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் இன்றும் வாவிகளிலும், வயல்களிலும், குப்பைக் குழிகளிலும் புதைக்கப்பட்டுள்ளன. இவர்கள் மீண்டும் அடையாள அட்டைகளை பறிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது என்று இந்தச் சபையில் கேட்கிறேன்.

இந்த நாட்டிலுள்ள கடைசி மனிதனுக்கும் அடையாளஅட்டை கிடைக்கும்வரை இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது என்றே நான் கூறுகின்றேன்.

பவ்ரல் அமைப்பு உட்பட சில பொது அமைப்புகளும் இது விடயத்தில் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன.

இந்தச் சட்டம் தொடர்பாக ஜே.வி.பிக்கும் ஏற்பட்டிருக்கும் அவசரத்தைப் போன்று வேறு யாருக்கும் ஏற்படவில்லை. முன்னர் புரட்சிக்காகப் புறப்பட்டவர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டிருந்தவர்கள் இன்று தேர்தலுக்காக புறப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

இவர்கள் அடையாள அட்டைகளை அபகரிக்காமல் இருந்திருந்தால் இன்று அனைவருக்கும் அடையாள அட்டை கிடைத்திருக்கும். 1988 ஆம் ஆண்டு 88 வீதமானவர்களுக்கு அடையாள அட்டை இருந்தது. சில மாதங்களில் அதை அறுபது வீதமாக்கிய ஜே.வி.பியினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.




வடக்கு - கிழக்கிலே 11லட்சம் பேருக்கு அடையாள அட்டைகள் இல்லை. தென்பகுதியிலே 26 லட்சம் மக்களுக்கு அடையாள அட்டைகள் இல்லை. இந்த நிலையை உடனடியாக மாற்ற முடியுமா? என்று கேட்கின்றேன் - என்றார் அவர். (க)

# மலையகத் தமிழர் வாக்களிக்க பாதுகாப்பும் அவசியமாகும்

## சந்திரசேகரன் எம்.பி.வலியுறுத்தல்

அடையாள அட்டை இருந்தபோதும் பெரும்பாலான மலையகத் தமிழர்கள் அச்சுறுத்தல் காரணமாக வாக்களிக்கமுடியாத நிலையில் இருந்தார்கள். வாகக்ளிப்பு எவ்வளவு முக்கியமோ அதுபோன்று பாதுகாப்பும், சம்பள உயர்வும் மிக முக்கியமானவை.

- இப்படிக்கூறினார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் எம்.பியுமான பெ.சந்திரசேகரன்.

நாடாளுமன்றில் தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவு மீது வெள்ளியன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறியதாவது:-

அரசு கொண்டுவந்துள்ள இந்தத் திருத்தச் சட்டம் தோட்டத் தமிழரைப் பாதிக்காது என்ற உத்தரவாதத்தை அரசு எமக்கு வழங்கியதோடு, நாம் முன்வைத்த சில திருத்தங்களையும் ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே இச்சட்டத்தை நாம் ஆதரிக்கின்றோம்.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இந்த அடையாள அட்டைகள் காரணமாக மலையகத் தமிழர்களுக்கு ஏற்பட்டு வந்த பல இன்னல்கள் குறித்து நாம் பல தடவைகள் அரசுக்கு நெருக்குதல் கொடுத்தோம். இருப்பினும் லட்சக்கணக்கான மலையகத்தவர்கள் இன்றுவரை அடையாள அட்டையின்றித் திண்டாடுகின்றனர்.

தோட்ட அதிகாரி மற்றும் கிராம சேவையாளர் போன்றோர் அடையாள அட்டை இல்லாதவர்களின் புகைப்படத்தில் உறுதிப்படுத்தினால் அதை வாக்களிக்கும் நிலையங்களில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.அதேசமயம் அவற்றை அடையாள அட்டைக்குரிய ஆவணமாக அடையாள அட்டை வழங்கும்வரை பாவிப்பதற்கு உத்தரவாதமும் வழங்கவேண்டும் என்று நாம் முன்வைத்த கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டதால் நாம் இந்தச் சட்டத்தை ஆதரிக்கின்றோம் - என்றார் அவர்.

ஆனால், அவரது உரைக்குப் பின்னர் மேற்படி திருத்தச் சட்டத்தில் அரசுத்தரப்பு புதிய திருத்தங்களைக் கொண்டுவந்து அதை ஆட்சேபித்து, சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படும் சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய எம்.பிக்களோடு சேர்ந்து சந்திரசேகரன் எம்.பியும் வெளிநடப்புச் செய்தார்.(உ)

# நூல் வரிசை



நூல்: **திருமுறை போற்றுந் தெய்வம்**
ஆசிரியர்: **மட்டுவில் ஆ.நடராசா**

அச்சுப்பதிப்பு: **லக்ஷ்மி அச்சகம் கொழும்பு - 13**

சிவலிங்கத்தின் திருவுருவை அட்டைப் படத்திலே தாங்கி மங்களத்தின் அறிகுறியாம் மஞ்சள் நிறத்தைக் கொண்டதாக மட்டுவில் ஆ.நடராசா அவர்களால் வெளியிடப்பட்ட 'திருமுறைபோற்றுந் தெய்வம்' என்ற நூல் வெளிவந்துள்ளது.

நூலினுள் கருணைக் கடவுளாம் விநாயகனின் சின்னமாகிய 'பிள்ளையார் சுழி'யுடன் ஆரம்பித்து எமது முழுமுதற்கடவுளாம் சிவனுக்கு வணக்கம் செலுத்தும் வகையில் சர்வமும் சிவமயம் என்பதாக 'சிவமயம்' என்ற சொற்பிரயோகம் காணப்படுகின்றது.

நூலிற்கு முன்னுரையில் நூலாசிரியர் மதக்கோட்பாடுகள் பற்றிச் சற்று ஆராய்கிறார். இருப்பினும் எல்லா மதங்களும் 'ஒருவனே தேவன்' என்று குறிப்பிடுகின்றன என ஏகான்ம வாதம் பற்றி விளக்குகிறார். பின்பு இவ் ஏகான்ம வாதத்தை எந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளலாம் என்று ஆறு வினாக்களை எழுப்பி இந்த முரண்பாட்டைத் தீர்க்கவே சைவசித்தாந்தம் முப்பொருளியல் பதி, பசு, பாசம் என்பன பற்றி ஆராய்கின்றன என்று குறிப்பிடுகிறார்.

சைவசிந்தாந்த வேத உப நிஷதங்கள் பற்றி சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகின்ற தர்க்க ரீதியான கருத்துக்களை ஆராய்கின்றார்.

நமது இந்தக் கலியுக காலத்திலே சைவக்குடும்பங்களிற் பிறந்தவர் பலர் தம்மைச் சைவ சமயத்தவர்கள் என உறுதிப்படுத்தாமல் சிறுதெய்வ வழிபாட்டிலும் பிறமத வாழிபாட்டு மோகததிலும் மதத்தை வியாபாரமாக்குவதை நினைத்தும் நெக்குருகி தனது உள்ளத்தின் வேதனையை வெளிப்படுத்துகின்றார். இவர்களின் இந்த அவலநிலையைப் போக்கவே 'ஐயனே உனையன்றி ஒருதெய்வம் கையினால் தொழவும் கருதேன் கண்டாய்..' என்று தாயுமானவர் உறுதிபூண்டதுபோல் சைவசமயிகள் ஒவ்வொருவரும் பூண்டு அவரவர் வழிபடு தெய்வங்களை வழிபடவேண்டும் என்பதற்காகவே 'திருமுறை போற்றுந் தெய்வம்' என்ற நூலை யாத்துள்ளதாகத் தனது முன்னுரையிலே குறிப்பிடுகின்றார் மட்டுவில் ஆ.நடராசா.

முன்னுரையைத் தொடர்ந்து லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தின் ஆதீனப் புலவர் சித்தாந்த கலாநிதி க.கணேசலிங்கம் அவர்களின் வாழ்த்துரை இடம்பெற்றுள்ளது.

சைவமயத்தில் தோன்றியவர்கள் அதன்பெருமை, தனித்துவம், கொள்கை என்பவைபற்றிப் புரியாமல் தவறான பாதையில் செல்கிறார்கள் என்றும் வியாபாரப் பொருளாக மதத்தை கொள்ளும் சில குருமார்களும் சமயப் பெரியவர்களும் இதற்குக் காரணமாக அமைகிறார்கள் என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆறுமுக நாவலர், மறைமலை அடிகள் போன்றோரின் கருத்துக்கள் இவரது நூலில அணிசேர்ப்பவையாகக் காணப்படுகின்றன என்பதோடு பிறமத வழிபாட்டைத் தடுக்கவும் இந்த நூல் உதவும் ஏன்று குறிப்பிடுகிறார் சித்தாந்த ரத்தினம் நூலில் க.கணேசலிங்கம்.

இந்நூலை மக்கள் படிப்பதன்மூலம் உள்ளத்தில் உண்மைச் சமயத்தை உணர்ந்து மாற்று மதக்கருத்துக்களில் மக்களை ஈடுபடவிடாமல் அவ்வாறு ஈடுபடுபவர்களைத் திசைதிருப்பும் என்பதில் சற்றேனும் ஐயங்கொள்ளத் தேவையில்லை. இந்நூல் இந்துக்களுக்குக் கிடைத்த நற்கருப்பஞ்சாறு என்றே குறிப்பிடலாம்.

**தெல்லியூர் சி.ஹரிகரன்**



நூல் : **'உதயம்' (மாத இதழ்)**
வெளியீடு : **இந்தியத் தமிழர் கல்விப் பேரவை - கண்டி**

இந்திய வம்சாவளி தமிழர்களின் கல்வியை முன்னேற்றுவதற்காகவும் கல்வியின் ஊடாக சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகவும்கொண்டு இந்த மாசிகை வெளிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதத்துக்குரிய முதலாம் இதழ் கிடைக்கப்பெற்றுள்ளது.

கணனி வடிவமைப்பில் வெளிவந்துள்ள இவ்விதழின் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை. இந்தியத் தமிழர் கல்விப் பேரவை ஆசிரியர் குழுசார்பில் எஸ்.அன்ரனி ஜீவாவினால வெளியிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8 பக்கங்களைக்கொண்ட இவ்விதழில் கல்விச் சமூகத்துக்குரிய பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. மலையக அறிஞர் இர.சிவலிங்கம் பற்றிய கவிஞர் கந்தவனத்தின் கட்டுரையொன்றும் காலத்தை வென்ற கதைகள் என்றவரிசையில் மறைந்த எழுத்தாளர் அ.செ.முருகானந்தனின் காளிமுத்துவின் பிரஜாவுரிமை என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# வாக்கைச் சரியாகப் பயன்படுத்தவே இந்தச் சட்டம் என்கின்றார் வீரவன்ஸ

## இப்போது இல்லாவிட்டால் புத்தரே வந்தாலும் சரிவராதாம்!

வாக்களிப்பின்போது ஆள் அடையாள அட்டையை உறுதிப்படுத்தும் சட்டம் இந்தச் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் இன்னொரு புத்தர் பிறந்து வந்தாலும் இது நடைமுறைக்கு வராது.

- இப்படிக் கூறுகின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.

நாடாளுமன்றில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல்கள் திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதுபற்றித் தொடர்ந்து கூறியதாவது:-

இந்த நாட்டிலுள்ள மக்கள் தமது வாக்குகளை பரிசுத்தமானமுறையில் பயன்படுத்துவதற்கான சரியான சந்தர்ப்பத்தை அளிக்கும் நோக்குடனேயே இந்தச் சட்டம் கொண்டு வரபடுகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் உட்படப் பல பொது அமைப்புகள் இந்தச் சட்டத்தை வரவேற்றுள்ளன.

சில விடயங்களில் குளறுபடிகள் உள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுபான்மையினருக்கும் இதில் பெரும் நன்மைகள் ஏற்படும்.

சர்வதேச ரீதியிலான அமைப்புகள் ஆதரிக்கும் ஒரு விடயத்தை ஐ.தே.கட்சி எதிர்ப்பதன் நோக்கம் என்ன? 1921 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு இருக்கும்போது குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை இருந்தது. நாம் கூறுவது சகலருக்கும் இருக்கும் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதாகும்.

தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் கூக்குரலிடுகின்றன. நாம் சிந்திக்கின்ற நன்மையான விடயங்கள் எல்லாவற்றையும் செயற்படுத்த முடியாமல் உள்ளது. செய்யப்படாத விடயத்துக்கு நிழலும் சாட்சி கூறும் என்ற ஒரு நிலையே இந்தச் சபையில் இருக்கின்றது.

பொலீஸ் ஆணைக்குழுவில் இருக்கும் குளறுபடி எவ்வளவு மோசமானது என்பது எல்லோருக்கும் தெரியும். 70 வயதுக்கும் மேற்பட்ட ஓய்வுபெற்றவர்கள் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் இன்றும் நீதிமன்றங்களில் வழக்குகளில் வாதாடி வருகிறார். இது ஓர் அர்த்தமற்ற செயல்.

யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்டச்சபைத் தேர்தல்களில் எவ்வளவு குளறுபடிகள் நடந்தன என்பது எல்லோருக்கும் தெரியும். ஐ.தே.கவினரே அதை முன்னின்று செய்தனர்.

நடந்துமுடிந்த இந்தப் பொதுத்தேர்தல் எவ்வளவு சீர்கேடானது என்பது எல்லோருக்கும் தெரியும். தேர்தல் கண்காணிப்புக் குழுவினரே இதை தெளிவுபடக்கூறியுள்ளனர் - என்றார் அவர். (உ-04)

# வாக்காளர் பட்டியலில் தமிழர்களை சேர்க்க உரிய நடவடிக்கை எடுங்கள்!

## மனோகணேசன் எம்.பி.வலியுறுத்து

அடையாள அட்டைகள் இருந்தும் மேல் மாகாணத்தில் ஒரு லட்சம் தமிழர்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவுசெய்துகொள்ள முடியாத நிலையில் இருக்கின்றார்கள். தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து விடக்கூடாது என்று திட்டமிட்டே செய்யப்படும் ஒரு சதிச்செயல் அது - என மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டைப் பிரயோகத்தைக் கட்டாயமாக்கும் தேர்தல்கள் சிறப்பேற்பாடுகள் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இதனைச் சுட்டிக்காட்டினார் அவர்.

அரசு ஏன் இந்தச் சட்டத்தை இவ்வளவு அவசர அவசரமாக நிறைவேற்றுகின்றது என்பது புரியவில்லை. அரசின் இந்த அவசரமே சிறுபான்மையினத்தவர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வாக்களிக்க அடையாள அட்டைகள் அவசியம் என்கின்றனர் ஆனால், மேல் மாகாணத்தில் ஒரு லட்சம் தமிழர்கள் அடையாள அட்டைகள் இருந்தும் வாக்களிக்க முடியவில்லை.

மலையகத்திலிருந்து தொழில் காரணங்களுக்காகவும், வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்தும் வந்து கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். ஆனால், இவர்களுடைய பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிய சம்பந்தப்பட்டவர்கள் மறுக்கின்றனர்.

இருக்கவே இடமின்றி அகதிகளாக வந்து இடம்பெயர்ந்து வந்தவர்களிடம் வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் போய், கடிதங்களை வாங்கி வரும்படி கூறுகின்றனர்.

இப்படியான கடிதங்களை அவர்கள் கொண்டு வரமுடியாது என்பது இவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும், அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதியப்படுவதைத் தடுக்கவே இப்படி இழுத்தடிக்கின்றனர்.

எனவே, அடையாள அட்டை இருந்தும் வாக்காளர்களாகப் பதிய முடியாமல் இருக்கும் தமிழர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்புக்களில் பதிய மாற்று நடவடிக்கைகளை ஏற்படுத்தவேண்டும் - என மனோகணேசன் கோரிக்கை விடுத்தார். (க)

## பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில்.

புதுக்குடியிருப்பு,ஒக்.9

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் அலைகள் போட்ட குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இன்றுமுதல் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி 11 மணியளவில் பாடசாலை முதல்வர் கி.பாலேஸ்வரன் தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.

மங்கல விளக்கினை கிராம சேவையாளர் சி.தெய்வேந்திரம்பிள்ளையும், ஒட்டுசுட்டான் இந்து வித்தியாலய அதிபர் சி.வேலாயுதபிள்ளையும் ஏற்றினர்.

தொடர்ந்து ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலன் நாடாவை வெட்டி வைபவரீதியாகத் திறந்துவைத்தார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த இப்பாடசாலை மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

(4-358)

## மகளிர் தின நிகழ்வுகள் எழுச்சியுடன் ஆரம்பம்

# தமிழீழ மங்கையரின் போர்த்திறன் காண கிளிநொச்சிக்கு மக்கள் படையெடுப்பு!

### பொது மைதானம் எழிற்கோலம்; இன்றும் நாளையும் சிறப்பு நிகழ்வுகள்

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கண்காட்சி நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் கடந்த புதன்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகின.

காலை 9.00 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் தேசியக் கொடியினை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுஷா ஏற்றி வைத்தார். தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மேற்படி நிகழ்வுக்காக கிளிநொச்சி மத்திய மைதானம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வண்ண மயமாக்கப்பட்டிருக்கின்றது.

மைதானத்தில் மகளிர் படையணியின் கண்காட்சி மண்டபங்கள் மற்றும் கலை நிகழ்ச்சி மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

'மங்கை' படகு கட்டுமாணம், போர் ஆயுத உற்பத்தி, மாவீரர் நினைவு மண்டபம், வீரவரலாற்று ஒளிப்படக் கண்காட்சி, தமிழீழ விடுதலைப் புலிகளின் காட்சி மருத்துவமனை, மகளிர் விவகார காவல்துறை, விடியல படைவடு போன்ற ஏராளமான கண்காட்சி மண்டபங்களும மற்றும் காட்சிக்கான எல்லைப்புற காவல் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இக் காட்சி மண்டபங்களை துறைசார் பொறுப்பாளர்கள் ஆரம்பித்து வைத்தனர். விளக்கங்களும் துறைசார்ந்தவர்களால் அளிக்கப்பட்டு வருகின்றன.

நிகழ்வின் சிறப்பம்சமாக துப்பாகி சுடும் போட்டி மற்றும் பார்வையாளர்களை கவரும் விதமான போட்டி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மகளிர் படையணிகளின் போர்த்திறனகள் மற்றும் அவர்களது பல்வேறுபட்ட ஆளுமைகளை வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சிகள், மாதிரிச் சண்டைக்காட்சிகள் என்பனவும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்வுகளைப் பார்வையிடுவதற்கு வன்னியிலிருந்து மட்டுமன்றி தமிழர் தாயகத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஏராளமான மக்கள் கிளிநொச்சிக்குப் படையெடுத்து வருகின்றனர் என்று அங்கிருந்து எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

இந்த நிகழ்வுகளின் 4 ஆம் நாள் நிகழ்வுகள் இன்றும் இறுதி நிகழ்வுகள் நாளையும் நடக்கின்றன. இருநாள்களும் பகலில் கண்காட்சி மற்றும் போட்டி நிகழ்வுகளும் இரவில் சிறப்புரைகள், கலை நிகழ்வுகள் என்பனவும் நடைபெறும்.

நான்காம் நாள் கலை நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு முல்லை மாவட்ட அரசில்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி தலைமையில் நடைபெறும்.

லெப்.கேணல் நவம் அறிவுக்கூடத்தினரின் மாவீரர் அஞ்சலி நடனம், தேசியத் தலைவர் வாழ்த்து நடனம், நாடகம், இசை நிகழ்வு என பன இடம்பெறும்.

சிறப்புரைகளை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், சோதியா படையணியின் சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா ஆகியோர் நிகழ்த்துவர்.

இறுதிநாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு கிளிமாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் நடைபெறும்.

கலை நிகழ்வுகளாக நுண்கலை மன்றத்தினரின் மாவீரர் அஞ்சலி நடனம், தேசியத் தலைவர் வாழ்த்து நடனம், நாடகம், தமிழீழ இசைக் குழுவினரின் இசைநிகழ்வு, சோதியா படையணியினரின் கலை நிகழ்வு என்பனவும் இடம்பெறும்.

சிறப்புரைகளைக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(4-305-202)




'எக்கோ', கெயர் நிறுவனங்களின் நிதியுதவியுடன்

## கேப்பாபுலவு குடியிருப்பில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள்

ஒட்டுசுட்டான்,ஒக்.9

'எக்கோ', 'கெயர்' நிறுவனங்களின் நிதியுதவியுடனும் முல்லைத்தீவு மாவட்ட அகதிகள் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடனும் கேப்பாபுலவு பிலக் குடியிருப்பில் 33 மலசலகூடங்களும், 3 பொதுக்கிணறுகளும் அமைக்கப்பட்டு வருதாக முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அக்கிராமத்தின் நெற்செய்கைப் பயனாளிகள் 11 பேருக்கு உள்ளீடுகளும், 31 பயனாளிகளுக்கு சிறுதானியச் செய்கைக்கான உள்ளீடுகளும், ஆடு வளர்க்கும் 2 பயனாளிகளுக்கு ஆடுகளும், மீன்பிடிப் பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (4-341-202)

### குள வாய்க்கால் வீதிகள் செப்பனிடப்படவில்லை

ஒட்டுசுட்டான்,ஒக்.9

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள முத்தையன் கட்டுக்குள வாய்க்கால் வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதுள்ளன. அங்கு பற்றைகள் வளர்ந்திருக்கின்றன. இதனால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முத்தையன், கட்டுப் பாதைகள் பல திருப்பங்களைக் கொண்டவையாக அமைந்திருப்பதனாலும் பற்றைகள் வளர்ந்துள்ளதாலும் வாகனங்கள் ஒன்றையொன்று எதிர்பாராமல் மோதவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால், பலர் படுகாயங்களுக்குள்ளாகியும் வருகின்றனர்.

எனவே, இப்பாதையைச் செப்பனிடுவதோடு பற்றைகளையும் வெட்டித் துப்புரவு செய்வது மிக அவசியம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

(4-341-202)



பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட சதுரங்கப் போட்டி கடந்த மாதம் கொழும்பு 'கிளிப்டன்' மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. 15 வயதுப் பெண்கள் பிரிவில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தெரிவாகித் தேசிய மட்டப் போட்டியில் விளையாடிய வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவிகளைப் படத்தில் காணலாம். (படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தாமல் மானியம் வழங்குவதால் பலனேதுமில்லை!

### ஒட்டுசுட்டான் விவசாயிகள் சுட்டிக்காட்டு

ஒட்டுசுட்டான்,ஒக்.9

ஒட்சுட்டான் பிரதேச விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக எந்தவித மானியங்களை வழங்கினாலும், அவர்களின் வயல்களில் இரவுவேளைகளில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுபடுத்தாவிடின் அவர்களது உற்பத்திகள் பாழடைந்து பெரும் நட்டமே ஏற்பட்டுக்கொண்டிருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தற்போது காலபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நடைபெற்று முடிந்த காலபோக நெற்செய்கைக் கூட்டத்தின்படி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இரவுவேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள் பயிர்களைத் தொடர்ந்தும் அழித்து வருகின்றன. இதனை சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனத்தில் எடுக்கவேண்டும். இதனை விடுத்து விவசாயத்தை ஊக்குவிப்பதற்கென்று எத்தகைய முயற்சிகளை எடுத்தாலும் - விவசாய மானியங்களை எப்படி வழங்கினாலும் அதில் பலனேதுமில்லை என்றும் விவசாயிகள் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டது.

(4-341-202)

## மூதாளர் பேணகத்தில் முதியோர் வார நிகழ்வு

கிளிநொச்சி,ஒக்.9

அன்புச்சோலை மூதாளர் பேணகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதியோர் வாரம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி, கனகபுரத்தில் அமைந்துள்ள அன்புச் சோலை மூதாளர் பேணகத்தினரால் பராமரிக்கப்பட்டுவரும் முதியோர்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு மூதாளர் பேணகத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர்.

மூதாளர் பேணகத்தின் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

பொதுச்சுடரினை கனகபுரம் கிராமசேவையாளர் சு.பசுபதிப்பிள்ளையும் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனும் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ காவல் துறையினரின் பாண்ட் வாத்திய இசையுடன் மூதாளர்களுக்கு சிறார்கள் மாலை அணிவித்து ஊர்வலமாக மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். அங்கு பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

(4-7)

## குப்பி விளக்கினால் தீ விபத்து; மூவருக்குப் பலத்த எரிகாயம்

குப்பிவிளக்கிற்கு மண்ணெண்ணெய் விட்டபோது அது தீப்பற்றிக்கொண்டதால் 6 மாதக் குழந்தை உட்பட மூவர் பலத்த எரிகாயங்களுக்கு இலக்காகினார்.

வட்டக்கச்சி மாயவலூர் கிராமத்தில் கடந்த 4 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

திருமதி புஸ்பா (28 வயது), அவரின் 6 மாதக் குழந்தை ஜனா மற்றும் துஷ்யந்தி (வயது 21) ஆகியோரே இவ்விபத்தில் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களுள் தாயும், பிள்ளையும் மேலதிகச் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (4-405)

## வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் சிறப்புற நடந்த ஆசிரியர்தின விழா

வட்டக்கச்சி.ஒக்.9

சர்வதேச ஆசிரியர் தினமான ஒக்ரோபர் 5 ஆம் திகதி வட்டக்கச்சி ம.வியில் ஆசிரியர் தினவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களின் ஏற்பாட்டில் இவ்விழா நடத்தப்பட்டது.

நிகழ்வு மு.ப. 11.30 மணியளவில் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் பா.துஷ்யந்தன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. ஆசிரியர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை அதிபர் சி.சந்திரராஜா ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை பிரதி அதிபர் திருமதி பூ.பொன்னுத்துரை, ஆரம்பப்பிரிவு துறைத்தலைவர் திருமதி யோ.விஸ்வநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து ஆசிரியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

தொடர்ந்து ஆசிரியர்கள் அனைவரும் மேடையில் அமர்த்தப்பட்டு கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் மாணவர்களது நிகழ்வுகளும் ஆசிரியர்களது நிகழ்வுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-405)

### கிளிநொச்சிப் பிரதேசத்தில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சிப் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக சிமெந்திற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் கட்டடங்களை அமைப்பதில் பலத்த சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

பல கட்டடங்கள், கிணறுகள் அமைக்கும் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட மொத்த விற்பனையாளர்களை அணுகியபோது சிமெந்துத் தொழிற்சாலை இயந்திரங்கள் பழுதடைந்ததால் வன்னிக்கான விநியோகம் குறைவடைந்துள்ளது என்று தெரிவித்தனர். (4-393)

## தட்டுவன் கொட்டி கிராமத்தில் 'ஜி.ரி.இசற்' உதவியுடன் 110 வீடுகள்

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசற்) நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தட்டுவன்கொட்டி கிராமத்தில் 110 வீடுகள் அமைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வீடும் தலா 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இக் கிராமத்திற்கான போக்குவரத்து வசதி, குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுவருகிறது.

இதேவேளை, மேற்படி 110 வீட்டுத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாத இப்பகுதிகளைச் சேர்ந்த மேலும் இரண்டு வறிய குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது நிதியில் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (4-305)

## கரம் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயினால் நடத்தப்படும் கரம் சுற்றுப்போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

16 வயது ஆண்கள் இரட்டையர்களுக்கான போட்டி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும்-

16 வயது ஆண்கள் தனிநபர் போட்டிகள் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கும் -

18 வயது ஆண்கள் தனிநபர் போட்டி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும் -

18 வயதுப்பிரிவு ஆண்கள் இரட்டையர்களுக்கான போட்டி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கும் - 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தனிநபர் போட்டிகள் புதன்கிழமை மாலை 6 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (10-86-190)

## அணித்தெரிவு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.9

தேசிய மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் அணிகளுக்கான தெரிவு இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

22வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்களுக்கான தெரிவும் 22 வயதிற்கு உட்பட்ட ஆண்கள், பெண்களுக்கான தெரிவும் இடம்பெறவுள்ளன.

இம்மாத இறுதியில் இப்போட்டிகள் கொழும்பில் நடைபெறவுள்ளன. (10-86-190)

# எடைகுறைந்த துடுப்புமட்டையை பயன்படுத்த மாட்டேன்

### சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு

புதுடெல்லி,ஒக்.9



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான சச்சின் டெண்டுல்கர் மற்ற வீரர்கள் உபயோகிப்பதை விடக் கூடுதலான எடை கொண்ட துடுப்புமட்டையைப் பயன்படுத்தி வருகின்றார். இதனால், டெண்டுல்கருக்கு உடல் தகுதியில் பிரச்சினை ஏற்படுவதாகக் கூறப்பட்டது.

இதுகுறித்து டெண்டுல்கரிடம் கேட்டபோது:- எடை குறைவான துடுப்பாட்ட மட்டையைப் பயன்படுத்தும் எண்ணம் எனக்கு இல்லை. நான் முதலில் பயன்படுத்தியதை விட எடை குறைவானதைத்தான் தற்போது உபயோகப்படுத்துகின்றேன். இதைவிட மேலும் எடை குறைவான மட்டையைப் பயன்படுத்த மாட்டேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (10)

# கராத்தே தெரிவுப்போட்டிகள் நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பம்

வலி.வடக்கு,ஒக்.9

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறையால் நடத்தப்படும் தமிழீழ தேசிய கராத்தேப் போட்டியில் கலந்து கொள்வதற்கான யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தினால் நடத்தப்படும் தெரிவுப்போட்டிகள் நேற்று நண்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின.

யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தலைவர் எஸ்.சந்திரபோஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழியும் மங்கள விளக்கினை தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் மாதுளனும் இலங்கை தேசிய கராத்தே சங்க உறுபபினர் உப்புல் குமாரவும் ஏற்றி வைத்தனர்.

தென்னிலங்கையில் இருந்து வருகை தநதுள்ள சந்தண குமார, நிசங்கா, எஸ்.பி. நிசங்கா, பி.கே.விஜயதுங்கா, ஜெயவர்த்தன, கேமெத்த சிறி, உப்புல் குமார, மற்றும் கே.பி.சஜிவனி ஜெயவர்த்தன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


நேற்றைய நிகழ்வில் சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகள் இன்றும் இடம்பெறவுள்ளன. (10-86)

# ஆஸ்திரேலியாவுடனான முதற்போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடுவோம்

### ஹர்பஜன்சிங் நம்பிக்கை தெரிவிப்பு

பெங்களூர்,ஒக்.9



ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையே இந்தியாவில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் தாம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என்று இந்திய அணியின் சுழற் பந்துவீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்துள்ளார்.

இந்தப்போட்டியின் முதல் இனிங்ஸில் ஹர்பஜன்சிங் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியது குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ஆரம்பத்தில் தமது அணி வீரர்கள நன்றாக விளையாடாதபோதிலும், அடுத்துவரும் நாள்களில் நன்றாக விளையாடுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றியது மகிழ்ச்சியாக இருப்பதாக தெரிவித்ததுடன் பெங்களூர் சின்னச்சாமி மைதானம் முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கே சாதகமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முதல் இனிங்ஸில் ஹர்பஜன்சிங் 5 விக்கெட்டுக்களையும் அனில் கும்ளே 3விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று மாலை கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :-

* பிற்பகல் 3மணிக்கு வல்லை வி.க. எதிர் நவசக்தி வி.க

* மாலை 4மணி சென். அன்ரனிஸ் வி.க. எதிர் ஆதிசக்தி வி.க. (3)

* * *

வலி.வடக்கு,ஒக்.9

யாழ்ப்பாணம் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**14வயதுப் பிரிவு**

* யாழ்.புனித ஜேம்ஸ் ம.வி.எதிர் யாழ். புனித யோசப் ம.வி.

* 16 வயதுப் பிரிவினர்க்கான அரையிறுதி ஆட்டம்

**18 வயதுப் பிரிவு**

* சென் பற்றிக்ஸ் கல்லூரி எதிர் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

* யாழ்.மத்திய கல்லூரி எதிர் யாழ்.புனித ஜோசப் வித்தியாலயம். (3-86)

## முத்தரப்புத் தொடரில் இன்று

இஸ்லாமபாத்,ஒக்.9

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் முத்தரப்புக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெறவுள்ளது.




கடந்த புதன்கிழமை பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

அதற்கு முன்னர் பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கிடையே நடைபெற்ற இரு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (10)

# நீத்தார் நயப்புரை

## சமயாசார சீலராகத் திகழ்ந்தவர் புலவர்மணி ஆறுமுகனார்

அன்புடையார், பண்புடையார் குணாதிசயங்களை அவர்கள் வாழ்ந்த காலத்திலும் பார்கக, நம்மைவிட்டுப் பெரும்பிரிவு உற்ற காலை, அவர்தம் பெருமை சிறுமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கின்றோம். நல்லன மேலோங்கி நிற்கும் போது அந்தப் பரிவு அவரை நினைக்க வைக்கின்றது. ஆற்றிய நற்செயல்களை, ஆற்றல்களை எண்ணி நெகிழ்ந்து பேசிக்கொள்கின்றோம். அவ்வாறு நீத்தாரை நயக்கின்றோம். அந்தவகையில், அன்பர் புலவர்மணி பண்டிதர் ஆறுமுகனார் நயத்தற்குரியவராகின்றார்.



பரீட்சை எழுதித் தேறிய பண்டிதரான ஆறுமுகனார் பண்ணாகத்திற்குப் புகழ்சேர்த்த பண்பாளன். கவிவல்லவனாய்ப் பணியாற்றிய அவர், சங்கம் வைத்துப் பணிபுரிந்தவர். சான்றோரை உரு வாக்கியவர். அத்தோடு நில்லாமல் இருபத்து மூன்று நூல்களை எழுதியவர். பல நூல்களைப் பதிப்பித்தவர்.

நல்ல செயல்வீரனான இவர், ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தாரது பரீட்சைகளுக்கு உறுதுணையாகவிருந்து, வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கச் சார்பில் சங்கத்து அறிஞர்களுடன் சேர்ந்து வகுப்புக்களை நடத்தி ஆ.தி.பா.வி. சங்கப் பரீட்சைகளை எழுதவைத்தவர். அந்த மாணவர் அறிஞராகத் திகழ்வதன் மூலம் இவரை உலகம் உணர்ந்தது. அதனால் இவரெழுதிய நூல்களை, பிரபந்தங்களை உலகோர் வாங்கிப் படித்துப் பயன் கண்டனர்.

இந்த உலகவாசிகள் அண்ணன், தம்பி, உறவினர், நண்பர் என்று பாராமல் முட்டி மோதிக் கொண்டிருக்கையில், இவரை இவரது சுற்றம் மதித்தது. பிள்ளைகள் சுற்றும் தழுவி நின்றார்கள். சுற்றமும் சூழலும் இவரைப் போற்றுகின்றனர். இவருக்கு நல்ல மனைவி, பிள்ளைகள், உறவினர் வாய்த்தமையை நாம் கண்டு வியக்கின்றோம். நல்ல உள்ளம் பொருநதியவராக இருந்தமையாலேதான் இவருக்கு இந்தப் பாக்கியம் கிடைத்திருக்கின்றது. இதனால்தான் உயர்ந்தார் - சார்ந்தவரை உயர்த்தினார். மேலும் கல்வியாளரை உருவாக்கப் பிளளைகள் உதவியோடு ஒரு சபையை நிறுவி ரூபா. ஐந்து லட்சம் வைப்பு நிதியை வைத்துச் சென்றார்.

வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்க ஸ்தாபகர்களில் பண்டிதர் முக்கியமானவர். ஆ.தி.பா. வி.சங்கத்தினர் இருவருக்கு புலவர்மணியென்னும் விருதினை 1998 இல் வழங்கினர். இதே போல பண்டிதர் இநமசிவாயதேசிகர், பண்டிதர் மு.கந்தையா அவர்களுக்கும் அவரவர் சேவைகளையும், பெருமைகளையும் மதித்து முறையே மகாவித்துவான், பண்டிதமணி என்னும் வரிசைகள் நல்கி, மும்மணிகளையும் ஒரே மேடையில் ஒன்றாக இருத்திச் சிறப்புக்கள் செய்தோம். இவர்கள் மூவரும் சமய சீலர்களாகவும் ஆசாரம் பேணுபவர்களாகவும் தம்காலத்தைச் சிறப்புறச் செய்தவர்களாவர். இம்மூவரும் எம்சங்கப் பரீட்சகர் குழுவில் இருந்தும் பணி செய்தனர்.


வ.த.சங்கத்தில் புலவர்மணி பெருந்தலைவராக இருக்க யான் செயலாளராக இருந்தமையால் புலவர்மணியின் செயற்திறனை நன்கு அறியக்கூடியதாக இருந்தது. நாமெல்லாம் செயற்பட்டோமென்றால் அதற்குக் காரணம் இவர் காட்டிய அக்கறையும் ஊக்கமுமே ஆகும்.

புலவர்மணி அவர்கள் நல்லதோர் நடமாடும் நூற்களஞ்சியம் - உசாத்துணை. தம் அநுபவ அறிவு, பண்பு முதலாம் சிறப்புக்களால் உலகுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். முதற் சந்திப்பில் காட்டிய மகிழ்வும் விருந்தோம்பலும் நேற்றுவரை - இறக்கும்வரை இருந்தமை கண்டு மகிழ்ந்தோம்.

**பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்.**



நவாலி கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவின்போது மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் லயன் வி.கேசவராயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். முன்பள்ளி ஆசிரியை செல்வி இராசரத்தினம் இந்திராணி தேவியும் படத்தில் காணப்படுகிறார். (படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)



வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில், சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டியின்போது விநோத உடையில் பங்குபற்றிய சிறுவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (10)

## இணுவில், நல்லூர் லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில்

# விபத்துக்களைத் தடுப்பது குறித்து வீதிகளில் மாணவர்கள் விழிப்புணர்வு நடவடிக்கை!

யாழ்ப்பாணம்,ஒக்.9

இணுவில், நல்லூர் பகுதி லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் வீதிப்பாதுகாப்பு, விபத்துக்களைத் தடுத்தல் என்பன தொடர்பாக





படங்கள்: பிரபா, நவம்



சில பாடசாலை மாணவர்கள் நேற்று வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இணுவில் லயன்ஸ் கழக ஏற்பாட்டில் இணுவில் இந்துக்கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் நேற்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இணுவில் சந்திப்பகுதியில் இருந்து மருதனார்மடம் வரையான சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு மாணவர் பல்வேறு சுலோகங்களையும் தாங்கி வீதியின் இருமருங்கிலும் நின்று மக்களுக்கு இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இந்த நிகழ்வில் இணுவில் லயன்ஸ்கழகத் தலைவர் துரை எங்கரசு, உபதலைவர் இலகுநாதன், திருமதி கைலாசநாதன், சுன்னாகம் பொலீஸ் நிலையப்போக்குவரத்து கண்காணிப்புப் பொறுப்பாளர் விஜயசூரியா, உடுகெதர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவ, மாணவிகள் தாங்கியிருந்த பதாகையில் பின்வரும் சுலோகங்கள் காணப்பட்டன. •

★ வாகன ஓட்டுநர் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டாது சுயநினைவுடன் ஓட்டுதல் வேண்டும்.

★ வீதி உங்களுக்கு மட்டும் சொந்தம் அல்ல

★ கட்டாக்காலிகளை வீதிகளில் விடாதீர்

★ பாதசாரிகளுக்கு மதிப்பளிப்போம்.

நல்லூர் லயன்ஸ்கழகத்தின் ஏற்பாட்டில் கல்வியங்காடு மற்றும் நல்லூர்ப் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் கல்வியங்காடு சந்தி மற்றும் நல்லூரின் பிரதான வீதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும் யாழ்மத்திய கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் வீதியால் பயணம் செய்த மக்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வெளியீடான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

வீதியால் பயணம் செய்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விபத்து ஏறபடும் வழிவகைகள், அதனைத்தடுப்பது தொடர்பான விளக்கங்கள் என்பவற்றை மாணவர்களும் ஆசிரியர்களும் யாழ்.போக்குவரத்துப் பொலீஸாரும் வழங்கினர்.

விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு கோப்பாய் போக்குவரத்துப் பொலீஸாரும், யாழ்.போக்குவரத்துப் பொலீஸாரும் உதவியாக நின்றனர்.

விபத்துக்களை தடுப்பது தொடர்பான பல சுலோக அட்டைகளையும் மாணவர்கள் தாங்கியிருந்தனர்.

(4-7-86)

## பொலீஸாரின் இரவுச் சோதனை தீவிரம்

இரவுவேளைகளில் வெளிச்சமின்றி சைக்கிளில் செல்வோர்மீது யாழ். போக்குவரத்துப் பொலீஸார் சோதனை நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளனர். யாழ். நகரப் பகுதியில் இரவு வேளையில் பொலீஸார் மேற்கொண்டுவரும் இதடீர் நடவடிக்கையினால் வெளிச்சமின்றி சைக்கிளில் பயணம் செய்யும் பலர் பொலீஸாரிடம் சிக்கி வருகின்றனர்.

இவர்களுடைய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் பொலஸார் அவற்றைப் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்வதுடன், சைக்கிள்களுக்கு 'டைனமோ', 'ஹெட்' என்பவற்றைப் பொருத்தியதைப் பார்வையிட்ட பின்னரே அடையாள அட்டைகளை உரியவர்களிடம் மீள ஒப்படைத்து வருகின்றனர்.(10-7)

## கொக்குவிலில் திருட்டு

கொக்குவில் சந்தியில் உள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று நேற்றுமுனதினம் இரவு உடைத்து அங்கிருந்த இரண்டு லட்சம் ரூபா பணம் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடையின் முன்வாயிலை உடைத்து உள்ளே சென்ற திருடன் அங்கிருந்த தொலைபேசி கட்டண அட்டைகள், தொலைபேசிக் கருவிகள், போட்டோ பிரதி கருவி மற்றும் பக்ஸ் இயந்திரம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளான். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3-6)


Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7414998 முதல் 7426923 வரை

சீட்டிழுப்பு இல. 74 திகதி 07-10-2004

வெற்றி எண்கள் 9 8 4 1 4 1 சுப்பர் எண் 25

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,11,19,425/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,11,19,425/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 107 | 5,000/- | 5,35,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,035 | 500/- | 5,17,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,408 | 50/- | 5,20,400/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 103,103 | 10/- | 10,31,030/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 105 | 1,000/- | 1,05,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,038 | 100/- | 1,03,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,312 | 20/- | 2,06,240/- |
| மொத்தம் | 1,26,129 | | 46,13,970/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 46,13,970/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,14,08,725/-

தொடர் இல. 6457943 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7416295-6-01

7420671-4-82

7423359-6-52

7419453-4-15

7415481-4-08



## கண்ணீர் அஞ்சலி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் (யாழ்.கல்வி வலயம்)

திரு. த.பஞ்சலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார்

வல்லிபுரம் தம்பிப்பிள்ளை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். இவரது இழப்பினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வட.மா.ச.தொ.கூ.ச.சமாசம்,
யாழ்ப்பாணம்.

(C/38102)(42-32-18-16)


## பெற்றோல் பவுஸர் தீப்பற்றியது

அரியாலை,ஒக்.9

யாழ்நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் பவுஸர் வாகனத்தில் இருந்து பெற்றோல் இறக்கிக்கொண்டிருந்த சமயம் திடீரெனத் தீ பற்றியது. எனினும், உடனடியாக தீஅணைக்கப்பட்டதால் சேதங்கள் ஏற்படவில்லை. தீயை அணைக்க முற்பட்ட பவுஸர் சாரதியான நெல்லியடியைச் சேர்ந்த என். சிவயோகநாதன் (வயது40) என பவர் தீக்காயங்களுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சம்பந்தப்பட்ட பவுசரில் இருந்து பெற்றோல் இறக்கிக்கொண்டிருந்த சமயம் அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று இயங்கிய நிலையில் தரித்து நின்றதாகவும் அதனால் பெற்றோலில் தீ பற்றியிருக்கலாம் எனறும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெறறது.

(ஜ-17)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்



எமது பாடசாலையில் 2004ஆம்ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வேலணைக் கல்விக்கோட்டத்தில் அதிகூடிய 153 புள்ளிகள் பெற்ற மாணவி

ரவீந்திரராசா வித்தியப்பிரதா

வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த மாணவி

தவகுமார் நாகதர்சிஜா - 121 புள்ளிகள்

ஆகியோரையும் இவர்களுக்கு கற்பித்தலை ஊக்குவித்த ஆசிரியர்கள் அனைவரையும், வழிநடத்திய அதிபரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(37370) (33-32-18-16)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



## துயர் பகிர்கின்றோம்

திருமதி சாந்தினி இராமநாதன்

வடகிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சின் செயலாளர் உயர்திரு.

பரராசசிங்கம் இராமநாதன்

அவர்களின் அன்பு மனைவியின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்,
உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) பணிமனை,
விவசாயத் திணைக்களம் யாழ்ப்பாணம்

(37367) (32-18-16)


## இரத்ததானம்

கொழும்பு, வத்தளை லயன்ஸ் கழகத்தின ஏற்பாட்டில் யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்தில் இரத்ததான முகாம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதில் படையினரும் பொதுமக்களும் இரத்ததானம் வழங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(3-7)


## SAAMSTECH இன் தேசிய ஆங்கில டிப்ளோமா பரீட்சை

October 30,2004 MAY 28,2005

(ஆசிரியர்களுக்கானது, அலுவலர்களுக்கானது மற்றும் பொதுத்தொடர்பாடலுக்கானது)

13.09.2004 வரை தொலைக்கல்வி மூலமாக பதிவுசெய்தவர்களும் 11.10.2004வரை நேரடி வகுப்புக்களுக்கு பதிவுசெய்யும் அனைவரும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி :11.10.2004

இதுவரை இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்காதவர்கள் SAAMSTECH இன் 2மாத நேரடி வகுப்புகளில் பதிவுசெய்து பரீட்சைக்கு தோற்றமுடியும்.

50% சலுகைக்கட்டணம்: 11.10.2004 (திங்கட்கிழமை) வரை நேரடி வகுப்புக்களுக்கு பதிவுசெய்யும் அனைவருக்கும் பாடக்கட்டணத்தில் 50% சலுகையுடன் ஆங்கிலம் 3000/=, சிங்களம் 2000/= மட்டுமே.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு மானிப்பாய், கோப்பாய், அச்சுவேலி, நெல்லியடி, பண்டத்தரிப்பு, சாவகச்சேரி உட்பட பத்துக்கு மேற்பட்ட இடங்களில் வகுப்புகள் நடைபெறும். முதல் வகுப்பு தவிர்ந்த ஏனைய வகுப்புக்களுக்கு விரும்பிய நாள்களில் விரும்பிய நேரங்களில் விரும்பிய இடங்களில் கலந்துகொள்ளலாம்.

அடுத்த வகுப்புகள் ஆரம்பம்:

10.10.2004 ஞாயிறு மாலை 2.00, 4.00

11.10.2004 திங்கள் காலை 8.00, 10.00, 12.00 மாலை2.00, 4.00, 6.00

(ச-38104) (32-18-16)

SAAMSTECH

841, HOSPITAL ROAD, JAFFNA, 021-4591571, 0773068968

# தேர்தல் திருத்தச்சட்ட மூலம் தமிழர்களுக்குப் பாதிப்பு

## சிவநாதன் கிஷோர் விசனம்

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுத்திட்டத்தை வலியுறுத்தியிருக்கும் தமிழர்களின் கோரிக்கை உதாசீனப்படுத்தப்பட்ட நிலையில் தமிழர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வாக்களிப்புக்கு அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் இந்தச்சட்டம் கொண்டு வரப்படுகிறது.

- இப்படிக் கூறுகிறார் வவுனியா மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான சிவநாதன் கிஷோர்.நாடாளுமன்றத்தில் நேற்று மூலம் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தின் சட்டவரைவு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறியதாவது:-

55 வருடங்களாக நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த இந்தச் சட்டமூலத்தை அரசு அவசரமாக இப்போது கொண்டுவருகிறது. இது தமிழர்களைப் பாதிக்கும் ஒரு சட்ட வரைவாகும்.

தமிழர் கூட்டமைப்பு இங்கு நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரிக்க வரவில்லை. நாம் தேர்தலில்போட்டியிடாமல் தவிர்த்திருந்தால் தவறான சக்திகள் இங்கு வந்துவிடும் என்பதற்காகவே நாம் தேர்தலில் போட்டியிட்டு தமிழரின் ஏகோபித்த ஆதரவுடன் இந்தச் சபைக்கு வந்தோம்.வன்னியில் 64 வீதமானவர்களுக்கு அடையாள அட்டைகள் இல்லை.ஜே.வி.பியினர் அரசின் பிரதான பங்காளிகளாக இருந்து கொண்டே தமிழரின் கோரிக்கைக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபையை எமக்கு வழங்கவேண்டும். அதற்கு ஐ.தே.கவும், தமிழர் கூட்டமைப்பும் முழுமையான ஆதரவை ஜனாதிபதிக்கு வழங்கத் தயாராகவுள்ளன.

ஜனாதிபதி விடுக்கும் கூற்றுக்களை நம்ப முடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது. இப்படியே நிலைமை தொடர்ந்தால் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது - என அவர் மேலும் கூறினார். (உ-04)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக அஞ்சல் தினம் ஒக்ரோபர்-09
மானிப்பாய் அஞ்சல் அதிபராகிய
**V.அந்தோனிப்பிள்ளை அவர்கள்**
சிறந்த அஞ்சல் அதிபர்களில் ஒருவராக வடமாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டமைக்கு எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

தபால் ஊழியர்கள்,
**அஞ்சலகம், மானிப்பாய்.**
(37381)(43-11-45)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெடுந்தீவைச் சேர்ந்த மாதவன்குருஸ் - சாந்தி தம்பதிகளின் புதல்வனும், யா/நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவனுமான

**செல்வன் ம.தனீசியஸ் குருஸ் (மயூறன்)**

அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தமையையிட்டு மனதார வாழ்த்தி, பாராட்டி நிற்கின்றோம். அவர் சித்திபெற ஊக்கமளித்து, வழி காட்டிய அதிபர், ஆசிரியர்கள், பங்குத்தந்தை, C.S.I. போதகர், மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அருட்தந்தை யோகராஜ், அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள்.
(37380)(43-11-45)

# வாழ்த்துகின்றோம்




தேவிபுரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஸ்ரீசுதன் - மஞ்சுளாதேவி தம்பதிகளின் புதல்வனும், யாழ். மத்திய கல்லூரி மாணவனும்

**செல்வன் ஸ்ரீ.சுஜேன்**

அவர்கள் 130 புள்ளிகளையும், பிரபாகரன் - செல்வி தம்பதிகளின் புத்திரியும் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மாணவியுமான

**ஸ்ரீ.சமீக்கா**

131 புள்ளிகளையும் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு மனமார வாழ்த்துகின்றோம். இவர்களை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சன்னதிமுருகன் வெதுப்பகம்,*
*தேவிபுரம் சந்தி,*
*புதுக்குடியிருப்பு.*
(37376) (43-11-45)

அப்பம்மா,
ஸ்ரீராதாதேவி.

# கண்ணீர் அஞ்சலி



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க துணைப்பொதுச் செயலாளரும், யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், எமது வித்தியாலய ஆலோசகருமான உயர்திரு. த.பஞ்சலிங்கம் அவர்களின் தந்தையார்

**வல்லிபுரம் தம்பிப்பிள்ளை**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத் துயரில் நாமும் பங்கேற்று ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நாயன்மார்கட்டு
**மகேஸ்வரி வித்தியாசாலை.**

பாடசாலைச் சமூகம்.
(37350)(43-11-45)

# கண்ணீர் அஞ்சலி



## சேனாதிராஜா முகுந்தன்

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீராவியடி
**நண்பர்கள்.**
(37389)(22-13-12-43)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.9

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வீ.மீனேஸ்வரன் தலைமையில் பாடசாலையின் கதிரவேற்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் சி.ரங்கராஜனும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.சண்முகசுந்தரமும் கலந்துகொள்வர். (ஐ-ரி)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**புலமைப் பரிசில் - 2004**
பரீட்சையில் சித்தியடைந்த
மாணவர்களை வாழ்த்துகின்றோம்

| | |
|---|---|
| அ. ஜனதன் - 146 | த. திவ்வியா - 132 |
| த. திவாகரன் - 138 | சி. சஞ்சீவன் - 130 |
| நா. பகிர்ராஜ் - 132 | ந. அபிலா - 128 |

நிதி கல்வி நிறுவனம்
டச்சு வீதி,
இருபாலை, கோப்பாய்.

நிர்வாகி,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

புதிய பிரிவுகள் வாராந்த பரீட்சையுடன் நடைபெறுகின்றன.
இன்னும் 20 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
(37385)(12)

# அறியத்தரவும்

11.09.2004 அன்று கன்று ஈன்று 3 மாதங்கள் ஆன பசுவையும் (கருமன் நிறம்), கறுப்பு நிறமுடைய கறவைப் பசுவையும் 03.10.2004 முதல் காணவில்லை.

(கன்றுகள் இரண்டும் கத்துகின்றன)

தகவல் அறிந்தவர்கள் தயவுசெய்து மனிதாபிமான முறையில் அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அ.செல்வம்,
25/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம் T.P. 077-6151905
(37384)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் தம்பிப்பிள்ளை
(சிற்பாசாரியார்)

நேற்றைய தினம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அன்னாரின் மரண அறிவித்தலில் இ.கனகசபையின் மைத்துனரும் என்பதையும் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*40/2,கலைமகள் வீதி,*
*அரியாலை.*

தகவல்:
குடும்பத்தினர்.
(37352)

# பயிற்றுவிப்பாளர் தேவை

Weight Training துறையில் அனுபவம் பெற்ற பயிற்றுவிப்பாளர்கள் தேவை. பொருத்தமானவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

POWER GYM
Body Care & Fitness Centre
230/1 நாவலர் வீதி (ஆனைப்பந்தி)
(37382) யாழ்ப்பாணம்.


**ராஜா** யாழ்ப்பாணம்



10 ஆம் திகதி வரை அர்ஜுன, லாராதத்தா, விவேக் நடித்த
ஆசாட்சி
பு.நே. 10.30,2.30,6.30, சனி, ஞாயிறு இரவு 9.30 அடங்கல்
11 ஆம் திகதி முதல்
திருடா திருடி
(சி-38041)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இன்று முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்
போஸ்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
(C-37740)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

மக்கள் திலகம். எம்.ஜி.ஆர் மற்றும் மஞ்சுளா, நாகேஷ் நடித்த
ரிக்‌ஷாக்காரன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
அடுத்த வெளியீடு மதுர
(சி-37997)

**சிற்றி சினிமா** பண்டத்தரிப்பு



விஜய், ஜோதிகா, கிரண் நடிப்பில்
திருமலை
காட்சிகள் தினசரி: 3.00, 7.00
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(ரீல்ஸ்)
(சி-37902)

**லஷ்மி சினிமா** இளவாலை

M.G.R., ஜெயலலிதா. நம்பியார். நடிப்பில்
ஆயிரத்தில் ஒருவன் (ரீல்ஸ)
சில தினங்கள் மட்டும்
தினசரி: 11.00,3.00,7.00 மணி (பு.நேரம்) (37383)


# நினைவஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.சீ.கோகுலன் அவர்களின் அன்பு மாமனார் **அமரர் கனகரத்தினம் கருணாநிதி** அவர்கள் 17.09.2004 அன்று காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

யா/செங்குந்த இந்துக் கல்லூரி,
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

- பாடசாலைச் சமூகம்
(37387)(33-11-45-43)

# விழி நீர் அஞ்சலி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளரும், யாழ். வலய உதவிக்கல்விப்பணிப்பாளருமான **த.பஞ்சலிங்கம** அவர்களின் பாசம் மிகு தந்தையார்

**வல்லிபுரம் தம்பிப்பிள்ளை (சிற்பாசாரியார்)**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
வடமராட்சி வலயம்.
(சி-38106)(43-11-45)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை நடராசா



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடராசா நேற்று (08.10.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அசுபதியின் அன்புக் கணவரும் பகீரதன் (அன்னை நாகா பூட் சிற்றி), பகீரதி (விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இளங்குமார் (விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் - விவசாயத் திணைக்களம்), பவானி ஆகியோரின் மாமனாரும், ருவாஷிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
வி.இளங்குமார் (மருமகன்)
(37388)(43-11-45)

## சேனாதிராஜா முகுந்தன்

யாழ்ப்பாணம், 81, மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவராகிய சேனாதிராஜா முகுந்தன் வியாழக்கிழமை 07.10.2004 இரவு அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா-காலஞ்சென்ற விஜயலட்சுமி (விஜயா) ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு-நாகரெத்தினத்தின் பேரனும் ந.தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்), நாகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் லயன் Dr.மு.கதிர்காமநாதன் (சுகாதார வைத்திய அதிகாரி - மன்னார்), நாகேஸ்வரி கதிர்காமநாதன், மு.வரதராஜ, கமலாதேவி (இந்தியா), மு.பாலசுப்பிரமணியம் (கனடா), மு.கனகேந்திரநாதன் (தென் ஆபிரிக்கா), லயன் க.மு.பத்மநாதன் (உரிமையாளர் யாழ். மருந்தகம் Wesco Pharmacy) பத்மாதேவி ஆகியோரின் மருமகனும் திருமதி லலிதாராம்சேகரின் அன்புச் சகோதரனும் சுஜாதா (மருத்துவபீடம் யாழ்.பல்கலைக்கழகம்), சுதாகர் (மருத்துவபீடம் ரஷ்யா), மகேசன் (லண்டன்), மதியழகன் (கனடா), சுரேஸ் (திரைப்பட இயக்குநர், இந்தியா), பிரஷ்ணா, பிரவீன், பிறின்சிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.10.2004) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந.தனபாலசிங்கம் (பெரிய தந்தை),
லயன் K.M.பத்மநாதன் (மாமன்),
(லயன் மாவட்டத் தலைவர், பார்வைக்கு முதல் இடம்),
லயன் Dr.M.கதிர்காமநாதன் (மாமன்)
(லயன் மாவட்ட இணைப்பாளர்).

*81,மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(37386)(43-11-45)

## தியோகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)



நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 06.10.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி யோசேப்பின் (சிறில்) அன்புக் கணவரும் அருள்நேசனின் (லண்டன்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற திருமதி அக்கினேஸ் யோசப் மேரியின் ஏக சகோதரரும், அன்ரன் அமலதாசன், திருமதி யூடிற் அன்னைமேரி, பெனி பென்ஜமின் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2004) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக கரவெட்டிச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகமூர்த்தி கோயில் வீதி,*
*நெல்லியடி, கரவெட்டி.*
(C/38108)(43-11-45)

தகவல்:
அருள்நேசன் (மகன்).

# திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் எம்.பிக்கள் பிரசாரப் பணி

கொழும்பு,ஒக்.9

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த வாரம் முதல் மாவட்ட மட்டத்தில் அரசியல் பிரசாரப் பணிகளை ஆரம்பிக்க உள்ளது. இந்தப் பிரசாரப் பணி எதிர்வரும் 16ஆம் திகதி திருகோணமலையில் ஆரம்பமாகும் என்று சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். தொடர்ந்து மூன்று நாள்கள் இந்தப் பிரசாரப் பணிகள் இடம்பெறும்.

அன்றைய தினம் பொது ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரசாரப் பணிகளை கடந்த ஒகஸ்டில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது செம்ரெம்பர் மாதத்திற்குப் பிற்போடப்பட்டது. இந்த இரு தடவைகளும் திட்டமிட்டபடி பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை என்று தமிழ்க் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரசாரத்தின் முதல் நாளில் முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்து இரு சமூகங்களுக்கும் இடையில் நிலவும் இடைவெளியைக் குறைக்கும் முயற்சிகளில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபடுவர். தமிழத் தேசியக் கூட்டமைப்பின் 22 எம்.பிக்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வர். தொடர்ந்து 18ஆம் திகதி வரை நடைபெறும் பிரசாரப் பணிகளிலும் அவர்கள் கலந்துகொள்வர். இரண்டாம் நாள் திருகோணமலையின் வடபகுதியான புல்மோட்டைப் பகுதிக்குச் செல்லும் தமிழ் எம்.பிக்களில் ஒருபகுதியினர் பொதுக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொள்வர். நிலாவெளியில் பொதுக்கூட்டம் இடம்பெறும்.

மற்றொரு தொகுதி எம்.பிக்கள் மாவட்டத்தில் தென் பகுதியில் அமைந்துள்ள கிண்ணியா போன்ற இடங்களுக்குச் செல்லவுள்ளனர். அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொள்வா.

பிரசாரப் பணியின் இறுதிநாளில் மூதூருக்கும் அவர்கள் செல்லவுள்ளனர். (ஐ-க)

# பிரசவித்த கையோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தது. அப்பெண்ணின் தாயாரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்

விசாரணை மூலம் பெறப்பட்ட தகவல்களின்படி பிரஸ்தாபப் பெண் கடந்த ஞாயிற்றுக் கிழமை பெண்சிசு ஒன்றைப் பிரசவித்த கையோடு அதனைக் காலால் மிதித்துக் கொன்றபின் தாயாருடன் சேர்ந்து தரையில் புதைத்தார் என்பது தெரியவந்திருக்கிறது.

சம்பவம் நடந்த குடியிருப்புப் பகுதிக்கு நேற்றுப் பிற்பகல் சென்ற நெல்லியடிப் பொலீஸ் நிலைப் பொறுப்பதிகாரி ப.தர்மதாஸ தலைமையிலான பொலீஸ் குழு அங்கு விசாரணைகளை நடத்தி சிசுவைப் புதைத்த இடத்தைக் கண்டுபிடித்தது.

பிரஸ்தாபப் பெண்ணின் வீட்டில் இருந்து சுமார் 100 யார் தொலைவில் - கால்கள் வெளியே தெரியும் நிலையில - சிசு நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தது.

பருத்தித்துறை நீதிவான் எஸ்.அரியநாயகம் சிசுவின் சடலத்தைப் பார்வையிட்டார். வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டார்.

சிசுவைக் கொன்று புதைத்ததை அந்தப் பெண்ணும் அவரது தாயாரும் ஒப்புக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

சிசுவின் சடலத்தை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்து மருத்துவ பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பணித்தார்.

பிரஸ்தாபப் பெண் கணவனைப் பிரிந்து வாழ்பவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-70)

# ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணிலுடன் ஐ.தே.கட்சியின் முக்கிய உறுப்பினரான மிலிந்த மொறகொடவும் இந்தியாவுக்குப் பயணமாக உள்ளார்.

இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், அரசியல் விவகார அமைச்சர், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரை ரணில் சந்தித்துப் பேசுவதற்குத் திட்டமிட்டுள்ளார். (ஐ-ரி)

# திருமலையில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டரை வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ்மக்களின் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சமாதானத்திற்கு எதிரான சதி வேலைகள் தொடர்கின்றன. தமிழர்கள் மீது மீண்டுமொரு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட ஸ்ரீலங்கா அரசு துடிக்கின்றது. தமிழீழத் தலைநகரான திருமலையைக் கபளீகரம் செய்யும் எத்தனமாக சிங்களக் குடியேற்றங்கள் மும்முரமாக நடக்கின்றன' - என்று தெரிவித்து அவற்றை ஆட்சேபிக்கும் வகையிலும் -

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் உடனடியாக பேச்சுக்களைத் தொடங்கும்படி வற்புறுத்தியும் -

இந்தக் ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படி திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை என்ற அமைப்பின் பேரில் இதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய ஹர்த்தாலால் திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் சமுகமளிக்காத நிலையில் மூடப்பட்டிருந்தன. சிங்களப் பாடசாலைகளில் கூட மாணவர் வரவு மிகக்குறைவாகவே இருந்தது.

திருகோணமலை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு வெறிச்சோடிக் கிடந்தது.

வீதிகளும் வாகன ஓட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. திருமலையிலிருந்து கந்தளாய் புறப்பட்ட தனியார் பஸ்கள் நேற்றுக் காலை 8 மணியளவில் அனுராதபுரம் சந்திப் பகுதியில் கல்வீச்சுக்கு இலக்காகின. ஒருபஸ்ஸின் முன் கண்ணாடி சேதமுற்றது.

சட்டத்தரணிகள், ஊழியர்கள் வரவில்லாததால் நீதிமன்றப் பணிகளும் பாதிப்புற்றன.

கடைகள் பெரும்பாலும் மூடப்பட்டிருந்தன. முஸ்லிம்களும் தமது கடைகளை மூடி ஹர்த்தாலுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கினர். திருமலை மத்திய வீதி, ஏகாம்பரம் வீதி போன்றவற்றில் உள்ள சிங்களவர்களின் கடைகள் மட்டும் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன.

நகரச் சந்தையும் இயங்கவில்லை.

அரச அலுவலகங்கள், நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், தியேட்டர்கள், ஹோட்டல்கள், எரிபொருள் நிலையங்கள் யாவும் பணிப் பாதிப்புக்கு உள்ளாகின.

சந்திக்குச் சந்தி பொலீஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

புலிகளின் காவலில் உள்ள ஊர்காவலர்கள் இருவரை விடுவிக்கக்கோரி திருகோணமலை நகரின் மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகே, அந்த ஊர்காவலரின் உறவினர்கள் சுழற்சிமுறை உண்ணாவிரதம் நடத்திவரும் சூழலில் இந்த ஹர்த்தால் இடம்பெற்றதால் பதற்றம் அதிகமாக இருந்தது.

கன்னியாப் பகுதியிலும், துவரங்காட்டுப் பகுதியிலும் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரண்டு இராணுவக் காவலரண்களை உடனடியாக அகற்றக்கோரி அலஸ்தோட்ட அகதிமுகாம் மக்கள் மறியல் போராட்டம் ஒன்றில் நேற்று ஈடுபட்டனர்.

இதன்காரணமாக அங்கு முறுகல் நிலை தோன்றியது. இரு இளைஞர்கள் மீது படையினர் தாக்குதலும் நடத்தினர்.

நிலாவெளிக்குச் செல்வதற்காக அவ்வழியால் வந்த ஐக்கிய நாடுகள் சிறுவர் மையத்தின் வாகனம் ஒன்றும், ஐ.நாவின் அகதிகளுக்கான தூதரக வாகனம் ஒன்றும் பொது மக்களால் மேலே செல்லவிடாமல் திருப்பி அனுப்பப்பட்டன.

எனினும், நிலாவெளியில் இருந்து வந்த கடற்படையினரின் கனரக வாகனம் ஒன்று மறிக்கப்பட்டபோது ஏற்பட்ட முறுகலை பொலீஸார் தலையிட்டு சுமுகமாக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போர்நிறுத்தத்தின் பின்னர் புலிகள் பல முகாம்களை அமைத்திருக்கின்றனர் எனப் படைத்தரப்புக் குற்றம் சுமத்துகின்றது.

இந்த நிலையில் படையினர் தாம் புதிதாக அமைத்த இரு காவலரண்களையும் [illegible]ற்ற வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், பெரிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி ஹர்த்தால் நடந்துமுடிந்தது. (ஐ-க-13)

# யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லின் பின்னர் இம்மாநாடு பிற்போடப்பட்டது. இம்மாநாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் சுமார் 300 பேர் கொண்ட குழுவினர் கலந்துகொள்ளவிருந்தனர்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளியைப் பெரிதும் குறைக்கும் வகையிலேயே இந்த நல்லெண்ண விஜயமும் மாநாடும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டை கூடிய விரைவில் மீண்டும் நடத்தவும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் புத்திஜீவிகளையும் அம்மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்யவும் ஏற்பாடுகள் நடப்பதாக பாயிஸ் எம்.பி. மேலும் தெரிவித்தார். (ஐ-க)

# சிறுபான்மையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்குத் தமிழ்க்கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்படும். இதில் எந்த மாற்றமும் இல்லை. - என்று கூட்டணி உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு உறுதியளித்தனர்" - என பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இப்படியான சந்திப்புக்களைத் தொடர்ந்து நடத்தவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆரம்பக் கூட்டம் எந்தவிதமான அட்டவணையும் இன்றி நடந்தது. பொதுவான விடயங்கள் மட்டுமே பேசப்பட்டன.

எதிர்காலத்தில் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் பேச்சுக்கான அட்டவணையைத் தயாரிக்கவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரனிடமும் பஷீர் சேகுதாவூத்திடமும் கூட்டுப் பொறுப்பு ஒப்படைக் கப்பட்டுள்ளது. (ஐ-க-13)


பல்கலைக்கழக மாணவர்களே!
உங்கள் ஆய்வுக்கட்டுரையை சிறந்த முறையில் கணனிமூலம் பதித்து பைண்டிங் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
SKYLINES GRAPHIC
No: 743, K.K.S Road, Jaffna.
(Opposite to Hindu College)
குறிப்பு: எம்மிடம் கணனிப்பதிப்பு செய்பவர்களுக்கு விசேடகழிவுடன் பைண்டிங் வேலை செய்து தரப்படும்.

VACANCY
★ Ms-Office Instructor
★ Type Setter
SKY COMPUTERS (PVT) LTD.
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna. (Near Kachcheri)
T.P.: 4590325
(சி-38088)

ஆரம்பத்திலிருந்து......
A/L 2006 LOGIC
ஆரம்பம் : 10.10.2004 ஞாயிறு, 10 மணி.
எஸ்.எஸ்.மனோகரன்
BEACON - யாழ்நகர்.
(37338)

CATWAS.COM Computer Academy
No.26, Somasundram Avenue, Chundikuli. T.P.:021 222 3805
1. Online Diploma in Microsoft Office. Duration-01 Month-100 Hours
2. Diploma in Hardware Duration-01 Month-50 Hours
15.10.2004ஆம் திகதியில் இருந்து 15.11.2004 வரை
Diploma courses
MS-Office 1750/=
DTP 2000/=
Hardware 1500/=
Web page 3000/=
Video Mixing 2500/=
Certificate courses
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 2ஆம் பிரிவு 15.10.2004 அன்று ஆரம்பமாகும். (அனுமதிகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது)
பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கும், பல்கலைகழக மாணவர்களுக்கும், நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்குமானது. (சி-38109)

நியூ றோயல் சங்கத்தானை
A/L புவியியல்
By: கிரிதரன்
SAT. 6.00–2005
SUN. 7.00–2006
(37306)

NEWSCIENCE COLLEGE
இலத்திரனியல்
Mon., Fri.-6.00 a.m.
ஆரம்பம்: 11.10.2004
2006 A/L
வெப்பவியல்
Wed.,Fri. - 4.00 - 5.00 p.m.
ஆரம்பம்: 13.10.2004
By: கருணாநிதி
(37337)

T.A.T. கணனி சேவை
பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்,
ரைப் செற்றிங் தெரிந்த பெண்கள் தேவை.
வார நாள்களில் 4.30 p.m. மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.
T.P.: 077-6624419 (37365)

விஜயதசமியை முன்னிட்டு புதிய பிரிவு
ஆரம்பம் : 22.10.2004 பகல் 10.00 மணி
Diploma Courses
Diploma in Microsoft Office
Diploma in Internet Technology
Diploma in Desk Top Publishing
Diploma in Hardware Engineering
Diploma in Visual Basic Programming
புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இப்பிரிவில் இணைந்துகொள்ளலாம்.
உங்கள் பதிவுகளுக்கு... விஜயதசமி தினத்[illegible] முன்[illegible] கொள்ளுங்கள்.
தலைமை அலுவலகம் : IBMS, # 410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
• N.M.M.V. Road, Nelliady
• Sangaththanai, Chavakachcheri

BIT
விரிவுரைகள் ஆரம்பம்
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமாணி (வெளிவாரி) 2 ஆம், 3 ஆம் வருட மாணவர்களிற்கான விரிவுரைகள் நாளை (10.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாக இருப்பதால் அனைத்து மாணவர்களும் தவறாது விரிவுரைகளிற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.
(சி-38084)

ஸ்டெபர்ட் மோட்டார் கம்பனி லிமிட்ட் வழங்கும்
HERO HONDA
VASI SAVARI வாசி சவாரி

நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆகலாம்
2004 செப்ரெம்பர் 20 முதல் ஒக்ரோபர் 20வரை மட்டுமே இவ்வாய்ப்பு.
★ 9 வெற்றியாளர்களும் எவ்வித செலவுகளும் இல்லாமல் இந்தியா அழைத்துச் செல்லப்படுவார்கள்.
★ புதுடெல்லியிலுள்ள ஹீரோ ஹொண்டா தொழிற்சாலையை பார்வையிடவும் வாயப்பு.
★ உலக ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலுக்கும் சென்று வரலாம்.
★ 27 ஆறுதல் பரிசுகள்.
★ போட்டிக்கான கூப்பன்களை ஸ்டெபர்ட் மோட்டர் கம்பனி லிமிடட் இற்கு அனுப்ப வேண்டும்.
★ அனைவருக்கும் ஏற்ற வகையில் ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் தற்பொழுது விசேட விலைகளில்
HERO HONDA World No. 1 Two-Wheeler Company
RG இரத்தினகோபால்ஸ்
65.63 கன்னாதிட்டி வீதி. யாழ்ப்பாணம். T.P: 222 6185 0777-340056

COLLEGE of INFORMATION TECHNOLOGY
SIVAN LANE, AVARANGAL, PUTTUR.
★ Colombo, Londan Infotech நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் MULTIMEDIA கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன.
10/10/2004 Sunday 3.00 p.m. 50% OFF
★ தமிழ் சீடி வழிப்பயிற்சிக்கான CDகள் விற்பனைக்குண்டு. (Corel Draw10, Photo Shop 7 Flashmy Premiere 6.5, 3D Studio Max6, Maya 5.0) 50% OFF
★ M.S. Office & DTP புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
பிரிவு - I - 10/10/2004 Saturday 9.00 a.m.
பிரிவு - II - 12/10/2004 Tuesday 9.00 a.m.
T.P.: 0777 - 589703 e-mai;-avarangal cit@yahoo.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.